
ஜனவரி 25 - 31,2004 24 பக்கங்கள் 16.00
REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA


20/1/2004

# சுடர் ஒளி


THE SUDAR OLI සුඩර් ඔළි வார மலர்







# அதிகரிக்கும் அரசியல் நெருக்கடிகள்





## ஆட்சியை நீடிக்க ஜனாதிபதி மிரட்டு

## ஜே.வி.பியுடன் மீண்டும் கூட்டு

## லண்டனில் பாலா - சொல்ஹெய்ம் சந்தித்துப் பேச்சு

## வன்னியில் சுவீடிஷ் எம்.பிக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தபால்களில் வருகிறது 'நஞ்சு'!

போர் ஓய்ந்த பிறகு சமாதானம் வந்ததோ இல்லையோ புதிதுபுதிதாகப் பலவிடயங்கள் யாழ்ப்பாணத்துக்குள் நுழைந்து கொண்டிருக்கின்றன.

ஆக்கமும் அழிவும் நிறைந்த பொருள்களால் அழகு பெற்றுவருகிறது யாழ்ப்பாணம் என்கிறார் ஒரு கட்டுரையாளர்.

நீண்டகாலம் உலகின் ஓட்டத்தில் இருந்து ஒதுங்கிக் கிடந்த பிரதேசத்தில் இப்போது நவீனத்துவங்கள் எல்லாம் மடை திறந்த வெள்ளம்போல பாய்ந்து கொண்டிருக்கின்றன.

சரியான திட்டமிடல்கள் இல்லாத வந்து குவிக்கின்ற பொருட்கள் யாழ்.நகரின் நடைபாதைகளை நிறைக்கின்றன. 'எல்லாம்' கிடைக்கின்ற நகரமாக மாறிவருகிறது யாழ்ப்பாணம்.

இந்த மாற்றம் பற்றி எழுகின்ற விமர்சனங்கள் ஒருபுறம் இருக்க, இது தவிர்க்க முடியாத புதிய உலக நியதி என்று ஏற்றுக் கொள்ளும் நிலைமைதான் அங்கு.

யாழ்ப்பாணத்தவர்கள் இறுக்கமாகப் பேணுகின்ற பண்பாட்டில் சிதைவுகளை ஏற்படுத்துகின்றன என்றும் இந்த மாற்றங்கள் விமர்சிக்கப்படுகின்றன.

யும்அவர்கள்சுட்டிக்காட்டுகின்றனர். சமூகச் சீரழிவை தூண்டுகின்ற பொருட்கள் ஏ—9 தரைப்பாதை பலாலிக்கான விமான சேவை ஆகிய இரு மார்க்கங்களையும் தவிர வேறு மூன்றாவது மார்க்கம்ஒன்றின் ஊடாகவும் குடாநாட்டுக்குள் கடத்தப்படுவதாக புலிகளின் வட்டாரம்ஒன்று கூறுகிறது.

அது தான் தபால் சேவை.

ஏ—9 வீதியூடாக வருகின்ற பொருள்கள் புலிகளின் தீவிர பரிசோதனைகளைத் தாண்ட வேண்டி உள்ளது. இதனால்தபால் மார்க்கமாக சிறு பொருட்களை அனுப்பும் திட்டமிட்ட செயலில் சிலர் ஈடுபட்டு வருகின்றனர் என்று கூறப்படுகிறது.

பொதுவாகக் கடிதங்கள் என்று அழைக்கப்படுகின்ற தபால் சேவை இன்றும் உலகின் அத்தியாவசிய சேவைகளில் முதன்மை பெற்றே திகழ்கிறது.

மிகநீண்ட காலத்துக்குப்பின்னர் இப்போது தான் துக்கானதபால் சேவையைப் பாதித்திருக்கின்றன என்பதே கவனிக்க வேண்டியது.

யாழ்ப்பாணத்தில் சேகரிக்கப்படுகின்ற கடிதங்கள், பொதிகள் என்பன தபாலக வாகனங்கள் மூலம்ஏ—9 வீதியூடாக வவுனியாவுக்குஅனுப்பப்பட்டு, அங்கிருந்து பின்னர் ஏனைய பகுதிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன.அதே போன்று வெளி மாவட்டங்களில் இருந்து வருகின்ற கடிதப்பொதிகள் வவுனியாவுக்கு கொண்டு வரப்பட்டு— பின்னர் தபால் திணைக்கள வாகனங்களில் அங்கிருந்து ஏ—9 வீதியூடாக யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப் படுகின்றன.

கடந்த சில நாட்களாக இந்த தபால் விநியோகநடைமுறையில் தடங்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன. இதனால் யாழ்ப்பாணத்துக்கு கிடைக்க வேண்டிய பெரும் தொகையான கடிதங்களும், பொதிகளும் வவுனியாவில்

போதும் பொருளாதார ரீதியிலும், தகவல் தொழில் நுட்பத்திலும் யாழ்ப்பாணத்தில் ஒரு புதிய 'களை' தென்படுகின்றது.

புதிதுபுதிதாக கட்டடங்கள் எழும்புகின்றன. இவை எல்லாம் தூர நோக்குடைய எதிர்கால நகரவிரிவாக்கத்துக்கு ஏற்புடைய அடிப்படையில் எழும்புகின்றனவா என்பதும், கட்டட அமைப்பில் சரியான தரநிர்ணயம் பேணப்படுகின்றதா என்பதும் கேள்விக்குரியதே. என்றாலும் கட்டடங்கள் கட்டுப்பட்டுக்கொண்டே இருக்கின்றன.




கணினி சார்ந்த தொழில்துறைகள் வளர்ந்து வருகின்றன. தொலைபேசி இணைப்பு பெறக் காத்துக்கிடக்கின்ற நிலைமை இல்லை. தனியார் தொலைபேசிச் சேவை நிறுவனங்கள் பலவும்தங்கள் சேவையை போட்டிபோட்டுக் கொண்டு விஸ்தரித்து வருகின்றன. போர் பாதித்த யாழ்ப்பாண மண்ணில் காலூன்ற கம்பனிகள் போட்டா போட்டிபோடுகின்றன.

கைத்தொலைபேசிப் பாவனையும் யாழ்ப்பாணத்தில் அதிகரிக்கின்றது. இன்ரநெற், ஈமெயில் வசதி வாய்ப்புகள் வீட்டுக்கு வீடு கிடைக்கின்ற நிலைமை உருவாகிவருகின்றது.

ஏ—9 வீதியூடாக வாகனங்களில்

சமூக சீரழிவைத் தூண்டுகின்ற பல விடயங்களும் யாழ்ப்பாணத்துக்குள் புகுந்துவிட்டன என்ற கவலை மூத்தவர்களிடையே காணப்படுகிறது.

கட்டு மீறும் இளம் சமுதாயம் திட்டமிட்டு சீரழிக்கப்படுகிறதுஎன்கிற குற்றச்சாட்டுக்களும் எழுகின்றன.

பாடசாலை மாணவர்கள்மத்தியில் போதையூட்டும் பொருட்களின் பழக்கம் அவதானிக்கப்பட்டிருப்பதாக ஒரு தகவல் கூறுகின்றது.

ஆபாசப்படங்கள், புத்தகங்கள், வீடியோ சீ.டிக்கள் என்பனவும், போதைப்பொருள்களும் குடாநாட்டுக்குள் திட்டமிட்டு புகுத்தப் படுகின்றன என்கிற குற்றச்சாட்டு புலிகள் தரப்பிலிருந்து எழுகின்றது. அதை நிரூபிக்கும் வகையில் பல சம்பவங்கள் இடம்பெற்றிருப்பதை

குடாநாட்டுக்கான தபால்சேவைகள் ஓரளவு சீரடைந்துள்ளன. பொதிகளை அனுப்பும் வசதிகளும் இப்போது சிரமம் இன்றிக் கிடைக்கின்றன. ஆனால் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி சமூகவிரோதிகள் பொருள்களைக் கடத்துகின்ற விஷமச் செயலில் ஈடுபடுகின்றனர் என்ற தகவல் இப்போது வெளியாகிஉள்ளது. ஆபாசப்பட சீ.டிக்கள், ஆபாசப்படங்கள், போதைப்பொருட்கள் என்பனவும் இவ்வாறு தபால் பொதிகளில் உள்ளடக்கப்பட்டு யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்படுகின்றன என்றும், மிகவும் இரகசியமான முறையில் இந்த நாசச்செயலில் சில சக்திகள்திட்டமிட்டு ஈடுபடுகின்றன எனவும் கூறப்படுகிறது.

வெளிநாடுகளில் உள்ள உறவினர்களுக்கு அனுப்பும் கடிதங்களில் திருநீறு, அர்ச்சனை நூல் பேன்ற பொருட்களை உள்ளடக்கி அனுப்புவது பலரதும் பழக்கமாகிவிட்டது. ஆனால், அதேபோன்று வெளிநாடுகளில் இருந்து போதைப் பொருட்களும் தபால் ஊடாக கடத்தப் படுவதாக சந்தேகிக்கப்படுகிறது.

கொழும்பில் இருந்து ஏ—9 ஊடாக எடுத்து வரப்படுகின்ற பொருள்களுக்கு புலிகள் வரி அறவிடுகின்றனர். இந்த வரி விதிப்பில் இருந்து தப்புவதற்காகவும் சிறு பொருள்களை தபால் பொதிகளில் அனுப்பும் தந்திரம்கையாளப்படுவதாகவும் கூறப்படுகிறது.

இவை எல்லாம் சேர்த்து யாழ்ப்பாணத் தேங்கிக்கிடக்கின்றன. அதே போல வெளியிடங்களுக்கு அனுப்ப வேண்டிய கடிதங்களும், பொதிகளும்பெரும் எண்ணிக்கையில் யாழ்ப்பாணத்திலும் தேங்கிவிட்டன.

திட்டமிட்ட வகையில் கடிதப்பொதிகள் ஊடாக இடம்பெறும்சந்தேகத்துக்குரிய பொருட்கடத்தல்கள் பற்றி விடுதலைப் புலிகளுக்கு தகவல்கள் கிடைத்திருப்பதாகவும் அதனை அடுத்து ஏ—9 வீதியூடாக கடிதப்பொதிகளை எடுத்துச் செல்ல அனுமதிக்கும் நடைமுறையை அவர்கள் மீளப் பரிசீலித்து வருவதாகவும் வன்னித் தகவல்கள் கூறுகின்றன. யாழ்ப் பாணத்தில் உள்ள தபால் திணைக்கள வட்டாரங்களும் இதனை ஊர்ஜிதம் செய்தன.

தபால்சேவையை சதிச்செயல்களுக்கு பயன்படுத்தும் சக்திகள் விடயத்தில் விழிப்புடன் இருக்க வேண்டிய அவசியத்தை புலிகள்தரப்பு வலியுறுத்துவதாகவும் கூறப்படுகிறது.

இதன் காரணமாகவே ஏ—9 ஊடான தபால் விநியோகத்தில் தடங்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன.

-வலிகாமத்தான்

இது தொடர்பாக தபால் திணைக்கள அதிகாரிகளும், புலிகளின் பிரதிநிதிகளும் கடந்த வாரம் சந்தித்து கலந்துரையாட இருந்தனர்.

# வாசகர் இதயம் பேசுகிறது

**த.அஜந்தா—கொடிகாமம்.**

நான்குதிசைகளும்சுடர்வீசும்அன்பான சுடர் ஒளியே! உனது வரவு கண்டு மகிழும் வாசகர்களில் நானும் ஒருத்தி. நீ தரும் அம்சங்களில் அரசியல் அம்பலம், பித்தன் பதில்கள், நெட் , மசாலா மிக்ஸ், சிறார்களின் கைவண்ணம் ஆகியவை சிறந்தவை. மேலும் எம்.ஜி.ஆர்—பிரபா நட்பு என்ற தொடரை வாசிக்க உள்ளமெல்லாம் புல்லரித்தது. கவிதைப் புனலோ உடலெங்கும் பரவி சிலிர்க்க வைக்கிறது. எமக்கு அறிவூட்டும் பாடத்தை புகட்டும் சுடர் ஒளியே! நீடூழி வாழ்க.

**அ.சந்திரகலா— கிளிநொச்சி.**

உன் பணி என்றும் சிறப்புற என் அன்புகனிந்த வாழ்த்துக்கள். எம்.ஜி.ஆர்—பிரபா நட்பு தொடர் மூலம் எம்.ஜி ஆரும் பிரபாவும் ஈழத்தமிழர்களுக்கு ஆற்றிய உதவிகளை அறியவைத்தாய். நீ நூறாண்டுகள் வாழ்க வாழ்க. உன்சேவை வளர்க. புகழ் பெற்று வாழ்க.

**எஸ்.கவிதரன்—சண்டிலிப்பாய்**

எமது நெஞ்சங்களில் எழுத்தால் சுடர் விட்டு பிரகாசிக்கும் சுடர் ஒளியே! நீ தாங்கிவரும் அனைத்து அம்சங்களும் சூப்பர். கம்பன் கழக அமைப்பாளர் ஜெயராஜ் எழுதிய கட்டுரையினை மல்லிகையிலிருந்து எடுத்து மறுபதிப்புச் செய்திருந்தாய். வெளிநாட்டில் இருந்து வந்து ஏழை உறவுகளை எதிர்பார்க்க வைத்து விட்டு பின்னர் ஏதுமில்லையென கைவிரித்துவிட்டுப் போவோருக்கு உண்மையில் அது பலத்த அடி. சுடர் ஒளியே நீ சுடர்விட்டு என்றும் பிரகாசிக்க வேண்டும்.

**கு.சர்மிளா —வட்டுக்கோட்டை.**

முதலில் எனது புத்தாண்டு பொங்கல் நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக. நீ தாங்கி வரும் அனைத்து விடயங்களும் 2003 ஆம் ஆண்டில் சாதனை படைத்தன. புத்தாண்டிலும் புதுமைகள் பல பெற்று சாதனை படைக்க இவ்வாசகியின் இதயபூர்வ வாழ்த்துக்கள். வளர்க உன் புகழ்! தொடர்க உன் சேவை!

**செல்வி.கோ. கிருஷ்ணானந்தி — உடுப்பிட்டி.**

நீ தாங்கி வரும் அனைத்து விடயங்களும் அம்சமானவை. அதிலும் வடபுலத்தில், எம்.ஜி.ஆர்— பிரபா நட்பு, பெண்கள் பகுதி ஆகியவை எனக்குப் பிடித்தமானவை. உனது சேவை மென்மேலும் வளர்ச்சியடைய இறைவனை வேண்டுகிறேன்.

**இ.கவிதா — சிவபுரம்.**

வாராவாரம் உன் வருகை எமக்கு வசந்த காலமாக இருக்கின்றது. உன்னை முதலில் பார்க்கவென்று ஆவலோடு காத்திருப்போம்.




உன் படைப்புகள் யாவுமே பிரமாதம். கவிதைப்புனல், சிறுகதை, நகைச்சுவை, பித்தன் பதில் யாவுமே சூப்பர்.சுடர்ஒளியே! நீ குன்றாத விளக்காக ஒளிவீசி உலகெங்கும் சுடர் விட்டுப் பிரகாசிக்க வேண்டும். உன் புகழோ நாடு போற்ற வேண்டும்.

அவுஸ்திரேலியாவில்
சுடர் ஒளி
பெற்றுக்கொள்ள
எமது விநியோகஸ்தர்கள்
M.K.S.International
23-25 Pultney St.
Dandenong 3175
Australia :- 03 97 013165

சுவிஸில் உங்கள் அபிமான
சுடர் ஒளி
விளம்பர முகவர்
MILITAR STR.84
8004 - ZURICH
SWITZERLAND

'சுடர் ஒளி' வார மலர் விளம்பரக் கட்டணம்

| அளவு | கறுப்பு/வெள்ளை | கலர் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூ.30,000.00 | ரூ. 45,000.00 |
| அரைப்பக்கம் | ரூ.15,680.00 | ரூ. 23,520.00 |
| C.M. | ரூ. 98.00 | ரூ.147.00 |
| Page Specified C.M.Cl | ரூ.122.50 | ரூ. 183.75 |
| Contract ADV. (250-300 Col. Cms) | ரூ. 70.00 | ரூ. 110.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சட்டி சுட்டதடா கைவிட்டதடா புத்தி கெட்டதடா...

''தோட்டத் தொழிலாளர்களைக் காட்டிக் கொடுத்து அவர்களை அடகு வைத்துகுழி தோண்டிப் புதைப்பதே இந்தப்பாவிகளின் பிழைப்பாகிப்போய்விட்டது'' என்று மிகவும் அலுத்துக்கொண்டார், குளுகுளு வென்ற குளிர்ப் பிரதேசத்தில் இருந்து வந்தசிவமானவர்.

''என்ன ஐயா; கண்ணாடிக் கூட்டுக்குள் இருந்து கொண்டு கல் அடிக்கின்றீர்கள்'' என்று சாடையாக சீண்டிவிட்டோம்.

''சார் இதைக் கொஞ்சம் பாருங்கள். நாங்களும்தொழிற்சங்கம் நடத்துகின்றோம்தான். ஆனால், ஆரம்பம் முதலே இந்தக் கூட்டு ஒப்பந்தம் செய்ததை எதிர்த்து வந்துள்ளோம்'' என்றார் சிவனார்.

''என்ன அப்படிச் சொல்லி விட்டீர்கள். இந்தப் பழைய பேப்பர் கட்டிங்கப் பாருங்கள் உங்களுடைய படம்தானே!'' என்று நண்பர் கேட்டார்.

''ஆமாம், ஆமாம். இந்தப் படம் என்னிடம் கூட இல்லை சார். நம்ப ஐயாவோட இருந்த போது எடுத்தபடம்''

''சரியா சொன்னீங்க. கீழே செய்தியில என்னா போட்டிருக்கு என்று ஒரு முறை பாருங்களேன்''

''அப்படி என்னசார் போட்டு இருக்கு?''

''அதாவது தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பாக எங்கள் தலைவர் தோட்ட முதலாளிமாருடன் கூட்டுஒப்பந்தம் செய்துசாதனைபடைத்து விட்டார். இனிமேல் சம்பள நிர்ணய சபைகளின்பின்செல்லவேண்டியஅவசியம்இல்லைஎன்று நீங்கள் தானே வீரமுழக்கம் செய்துள்ளீர்கள். இப்போ திடீர் என்று சம்பள நிர்ணய சபை வேண்டும் என்று பல்டி அடிக்கின்றீர்கள்'' என்று பேனா நண்பர் சுட்டிக் காட்டினார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் அங்கு வந்து சேர்ந்தார் போஸ்டர் வீரரான சந்திரன். வந்தவர்சும்மா இருக்கவில்லை.

''என்னசார் நீங்க ஒருபக்கம் இந்த ஆட்கள் எல்லாம் மாமியார் உடைத்தால் மண்குடம், மருமகள் உடைத்தால் பொன்குடம் என்று கூறுபவர்கள். முன்பு ஒட்டிக் கொண்டிருக்கும்போது இந்திரன், சந்திரன் என்றார்கள். வெட்டிவிட்ட பின் கரடி, பூதம் என்பார்கள். அதுதானே இவர்களுடைய சுபாவம்'' என்று மேலும் தூண்டி விட்டார்.

நாம் அமைதியாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தோம்.

சாதுவான சிவமும் விட்டேனா பார் என்ற பதில் தாக்குதலை மேற்கொண்டார்.

''சார்இந்திய பருப்பு வேண்டாம், புடைவை வேண்டாம். தமிழர்களின் தொடர்பே வேண்டாம் என்று ஆர்ப்பாட்டம் பண்ணிநாட்டையே தீவைத்துச் கொளுத்தி நாசமாக்கிய இந்த போஸ்டர்காரர்களே இப்போது இந்திய தோட்டத் தொழிலாளர்களின் பாதுகாவலர்கள் போல் மாறிக் கொண்டார்களோ அல்லது மாறிய மாதிரி வேஷம் போடுகின்றார்களோ தெரியவில்லை. இப்படி இருக்க நாங்களும் காலத்திற்கு ஏற்ப மாறியதில் தப்பு இல்லையே!'' என்றார் சிவமானவர்.

''சார் சார் இவர்கள் மாறியதில் எந்தத் தப்பும் இல்லை. ஆனால், தவறான முறையில் தப்புத்தாளம் போடுகின்றார்களே அது தான் பாவம்'' என்று மீண்டும் விட்டார் போஸ்டர் சந்திரன்.

''அதோடு நின்று விடவில்லை. சார் இவர்கள் எல்லோரும் தான் முண்டகூட்டமாகச்சேர்ந்து குண்டுச்சட்டிக்குள் குதிரை ஓட்டினார்கள். மேலும் குண்டான் சட்டிக்குள் தீ மூட்டி குளிர் காய்ந்தவர்களும் இவர்கள்தான். இப்போ சட்டி சுட்டதடா கைவிட்டதடா' என்கின்றனர்'' என்று விளாசினார் போஸ்டர் சந்திரன்.

என்னடா இது கிணறு வெட்ட பூதம் கிளம்பியது போல் இவர்கள் இருவரும் முட்டி மோதப் போகின்றார்கள், நாம் வேறு, சாட்சி சொல்ல வேண்டுமே, என்று திரும்பிப் பார்த்தோம். அங்கே சிவத்தாரைகாணவில்லை. மெதுவாக மாறிவிட்டார். பாவம்வாயை கொடுத்து வம்பில் மாட்டிக் கொண்டார் சிவத்தார்.

## இனித்தான் பூகம்பம்

நீண்ட காலமாக இழுபறி நிலையில் இருந்து வந்த கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு நாள் குறித்தாகி விட்டது. இனித்தான் நீல மேகக்கட்சிக்குள் பூகம்பம் வெடிக்கப் போகின்றதென அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

போஸ்டர் வீரர்கள் நீல மேகக் கட்சிக்குள் புகுந்து அதை சீரழிக்கப் புறப்பட்டுவிட்டனர் என்று அந்தக் கட்சியின் கொழும்பு மாவட்ட உறுப்பினரொருவர் பேனா நண்பர்களிடம் புலம்பிக் கொண்டிருக்கிறார். அவரது கூற்று உறுதியாகத்தான் இருக்கின்றது என்று அக்கட்சியைச்சேர்ந்த சிலர் அங்கலாய்க்கின்றனர்.

எங்களது எம்பிக்கள் அனைவரும் ஒரே வானில்தான் நாடாளுமன்றத்திற்குவருவோம் என்று ஆரம்பத்தில் வாய்ச் சவடால் விட்ட போஸ்டர் வீரர்கள் இப்போது இந்திய சொகுசு வாகனத்தில் தனித்தனியாக பவனி வருகின்றனர். இப்போது அவர்களுக்கு பதவி மோகம் வந்து விட்டது. தனித்துப் போட்டியிட்டால் பதவிக்கு வர இரண்டு தசாப்தங்கள் ஆகும் என்பதால் நீல மேகக் கட்சியுடன் ஒட்டிக்கொண்டு அமைச்சுப் பதவிகளைப் பிடிக்கத்திட்டம் போட்டுவிட்டனர் என்கின்றனர் நீல மேகக்கட்சிக்குள்ளிருக்கும் அதிருப்தியாளர்கள். என்னதான் நடக்கிறது எனப் பொறுத்திருந்து பார்ப்போம்.




பேருவளையில் பரம்பரை மாந்திரீகம்

அரபி, உருது, மலையாள மாந்திரீகம்
(இன்ஷா அல்லாஹ்) இறைவன் அருளால்

சகல இனத்தவர்களுக்கும் செய்து கொடுக்கப்படும்

*செய்வினை *ஸிஹ்று *ஜின் *செய்தான் *பேய் *பிசாசு போன்ற சகல பிரச்சினைகளிலிருந்தும் ஆங்கில வைத்தியத்தால் குணம் கிடைக்காத தீராத நோய்களுக்கும் தீர்வு கிடைக்கும்.

*செய்வினை அகற்றி *வீடு *தோட்டம் *வியாபார ஸ்தலம் * பகைவர்களின் தீங்கில் இருந்தும் காவல்பாடு *ஆண், பெண் திருமணத் தடை நீங்கி உடன் திருமணம் நிறைவேறுதல்

*கணவன் மனைவி விவகாரம் *புத்திர பாக்கியமின்மை *குடும்பத்தில் ஒற்றுமை ஏற்படுத்தல் *பிரிந்தவர்கள் கூடவும் *விரும்புவர்களின் அன்பை பெறவும்

உங்கள் பிரச்சினை எதுவானாலும் நேரில் சந்திக்கவும்

(வெளிநாட்டில் இருப்பவர்கள் தொலைபேசி மூலம் அல்லது தபால் மூலம் தொடர்பு கொள்ளவும்)

வெள்ளிக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 7.30 மணி முதல் சந்திக்கலாம். (இரகசியம் பேணப்படும்)

A.H.A. நஸ்பர் ஹாஜியார்,
69 பழைய ரோட், மொள்ளியமலை, பேருவளை.
(யூனானி வைத்தியசாலைக்கு அருகில்)
தொ.பே: 034–76932
வீடு இருக்குமிடத்தை அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்

அலுவலகம் :– ஷாமிலா ஜூவலர்ஸ்,
15 சுப்பர் மார்க்கட், காலி வீதி,
பேருவளை.
தொ.பே. 034 – 77586

ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள் உண்மை எது என்பதை புரிந்து கொள்வீர்கள்



மனோதத்துவ வைத்தியம்
(GENERAL PSYCHOTHERAPY)

இளம் சமுதாயத்தினருக்கு சக்தி, ஆளுமை குறைந்து ஞாபக மறதி ஏற்பட்டு, மெலிவு, பயம் நடுக்கம், நித்திரை குறைவுடன்தாழ்வு மனப்பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு என்று தெரிந்தும் தவிர்க்கமுடியாது சக்தியை வீணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத்திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம். ஆரம்ப மனநோய் உடனே சுகமாக்கலாம். மற்றும் ஆஸ்மா, நீரழிவு, தலையிடி, வாதம், குழந்தை பேறு இன்மைக்கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்லீறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு.

பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்

Sexual Disorders (ஆண்மை சக்தி குறைவு)

மனித உறுப்புக்கள் அனைத்தும் வியாதி ஏற்படுவ து போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மை சக்தி குறைய பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை வீணாக்குவது, கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது. (2) உடல் பலவீனம். (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது. (4) உறவின் போது விந்து விரைந்து வெளிப்படுதலிலும் ஆகும். பயப்படாதீர்கள்! மனோத்துவ வைத்தியம் (PSYCHOTHERAPY) மூலம் திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு

எம்மைத் தொடர்பு கொண்டு பதில்பெற விரும்புவோர் (முத்திரை செலவுடன்) விளக்கம் தந்தால் மனோத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) ஓடியோ கசட், மற்றும் மூலிகை மருந்துகளை பதிவுத்தபாலில் அனுப்பிவைப்போம்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

கொழும்பில்...
ஜனவரி 25 -31 வரை சந்திக்கலாம்
New Ahmed Turist Inn, Bang Bang Building
10 - 1/A, Bankshall Street, Colombo - 11.
TEl No. 5368426, 368427, Cell. 0722 910796
Hot Line: 0777 569205

கல்முனையில்..
பெப்ரவரி 07, 08, ஆம் திகதிகளில் சந்திக்கலாம்
T.M.M. பாமசி கல்முனை
Tel No. 067 2229329
Hot Line: 0777 569205

வவுனியாவில்...
பெப்ரவரி 14, 15, ஆம் திகதிகளில்
Vanni Inn, 2 ஆம் குறுக்குத்தெரு
வவுனியா, Tel No. 024 2222074
Hot Line: 0777 569205

யாழ்ப்பாணத்தில்...
ஜனவரி 17 - 22வரை
A.S.N. சுற்றுலாவிடுதி
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
Hot Line: 0777 569205
Tel No. 021 2223181
021 222 5399

பதிவுகளை முன்கூட்டியே செய்துகொள்ளுங்கள்

கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 51/5, Koolavady Road
Batticaloa, Srilanka. Resident Tel No. 065 2224019, Hot Line: 0777 569205.



தாய்வான் நாட்டின் அதி உன்னத தொழில் நுட்பத்தில் வடிவமைக்கப்பட்ட இயந்திரம் இப்போது இலங்கையில்....!



தரச்சிறப்பில் முன்னணி வகிப்பவை நம்பகத் தன்மைக்குப் பெயர் பெற்றவை

2 Colour, 4 Colour, 6 Colour
* ''பிளெக் ஸோகிரபிக்ஸ்'' (Flexographic)
நேர்த்தியான ஆறு வர்ண நிறங்களில் அச்சிடும் தன்மை கொண்டவை
அச்சிடும் அகலம்: 600m.m / 800m.m./ 1000m.m/ 1200m.m.
அதிவேக அச்சிடப்படும் தன்மை கொண்டவை




* அதிவேக இரண்டு வர்ணங்களில் "HDPE", LDPE, PP தயாரிக்கப்படும் இயந்திரம்
பிலிம் புளோயிங் "Film Blowing" இயந்திரம்

* நேர்த்தியாக வெட்டி வடிவமைக்கக் கூடிய அதிவேக பைகள் தயாரிக்கப்படும் இயந்திரம் (BAGS - MAKING MACHINE)



*இவ் இயந்திரத்தில் சொப்பிங் பாக்ஸ், குறோசறி பாக்ஸ், கையுறைகள், லொண்டறி பைகள், நெகடிவ் பிலிம் பைகள் மற்றும் பலவகையான பைகள் தயாரிக்கலாம்*
*இவற்றுள்* "Servo Drive System" *மற்றும்* "Cluth & Brake System" *உள்ளடக்கப்பட்டுள்ளது*

* கழிவு பிளாஸ்டிக் மீள் உற்பத்தி இயந்திரம் (Waste Plastic Recycling Plant)
* சுற்றாடல் மாசுபடுதலை குறைக்கும் தன்மை கொண்டவை
* இதன் மூலம் புதிய நிறுவனமொன்றை எவ்வித இடையூறுகளும் இன்றி ஆரம்பிக்கலாம்.
* உங்களுடைய இடங்களிலேயே இவற்றை மீள் உற்பத்தி செய்யலாம், இதன் மூலம் வீண் சிரமங்களையும், போக்குவரத்து செலவுகளையும் குறைக்கலாம்.



மேலதிக விபரங்களுக்கு:-
No: 79 New Moor Street, Colombo - 12
Tel :- 2470446, Fax:- 2326502, E.mail:- aktpack@eureka.lk




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர் ஒளி

ஜனவரி 25 —31, 2004

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு—14. டெலிபோன்: 011—4734401—6
பாக்ஸ் : 011 — 4734404
E-mail: editorial@sudaroli.com

## பொறுமைகாக்கும் விடுதலைப் புலிகள்

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான போர் நிறுத்த ஒப்பந்தம் இரண்டாவது வருட நிறைவை நெருங்கிக் கொண்டிருக்கிறது. எதிர் வரும் பெப்ரவரி 22 ஆம் திகதி ஒப்பந் தம் கைச்சாத்தாகி இரண்டு வருடங்கள் பூர்த்தியாகின்றன.

சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமான போது இருந்த ஓரளவு சுமுகமான சூழ் நிலை இன்று இல்லை. முற்றிலும் எதிர் பாராத விதமாக மிகக் குறுகிய காலத்தில் நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. அப் படி இருந்தும் யுத்தநிறுத்தம் இன்னும் அமு லில் இருந்து வருகிறது. யுத்த நிறுத்தத்தை அமுல் செய்வதில் புலிகள் முற்று முழுதாக ஒத்துழைப்பு நல்கி வருகிறார்கள்.

சமாதானப் பேச்சுக்கள் கடந்த ஒன்பது மாதங்களாக இடைநிறுத்தி வைக்கப்பட்டி ருக்கின்றன. ஆரம்பத்தில் இடைக்கால நிர் வாகக் கட்டமைப்புக் கோரிக்கை தொடர் பாக பேச்சுக்களில் தடங்கல் ஏற்பட்டது. பின்பு பேச்சுக்கள் தொடரமுடியாதநிலையை தென் இலங்கை அரசியல் நெருக்கடி, ஏற் படுத்தி விட்டிருக்கிறது.

இந்த நிலைமை இன்னும் தொடர்கிறது. ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையி லான பிரச்சினைகளுக்குத் தீர்வுகண்டு சமாதானப் பேச்சுக்களை மீண்டும் சரியான பாதையில் இட்டுச் செல்வதற்கான வாய்ப்பு கள் இன்னும் வெகு தூரத்திலேயே இருந்து வருகின்றன.

நவர்பர் 4 இல் இருந்து ஜனாதிபதி எடுத்து வரும் திட்டமிட்ட நடவடிக்கைகள் தான் நிலைமை மோசமாகக் காரணம் என் பது பொதுவான் குற்றச்சாட்டு.

இப்படியான நிலைமையில் சமாதானப் பேச்சுக்கள் நிரந்தரமாக நிறுத்தப்பட்டு விடுமோ என்று கூட சந்தேகம் ஏற்பட்டது. புலி கள் இனியும் பொறுமையைக் கடைப்பிடிக்க மாட்டார்கள் என்ற அச்சமும் நிலவியது.

இந்த சந்தேகங்களுக்கெல்லாம் முற் றுப்புள்ளி வைத்திருக்கிறார்கள் புலிகள். ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையி லான அரசியல் அதிகார இழுபறி தீர்க்கப் படும் வரை புலிகள் காத்திருக்கத் தயார் என்று நோர்வேயின் விசேட பிரதிநிதி எரிக்சொல் ஹெய்முக்கு லண்டனில் வைத்து உறுதி அளித்துள்ளார் மதியுரை ஞர் அன்ரன் பாலசிங்கம்.

தென் இலங்கையில் அரசியல் நெருக் கடி தீவிரமடைந்து சமாதான முயற்சிகளின் எதிர்காலம் பெரும் கேள்விக்குறியாக மாறி வரும் நேரத்தில் இந்த உறுதி மொழி வழங் கப்பட்டிருப்பது ஆறுதல் அளிக்கிறது.

அரசியல் நெருக்கடி தீரும்வரை அனு சரணையாளர் பணியிலிருந்து விலகி இருக்கப் போவதாக முன்னர் அறிவித்தது நோர்வே தரப்பு. அப்படி இருந்தும் அதன் முயற்சி ஏதோ ஒரு வகையில் தொடர்வது நல்ல அறிகுறி.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தான நாளில் இருந்தே அது உரிய முறையில் கடைப்பிடிக்கப்படவில்லை. ஆத்திரமூட்டும் நடவடிக்கைகள் அடிக்கடி இடம் பெற்றுவந் தன. இதுவரை நடந்து முடிந்த சமாதானப் பேச்சுக்களில் அளிக்கப்பட்ட வாக்குறுதி கள் கூட நிறைவேற்றப்படவில்லை. இந்த நிலையிலேயே பாதுகாப்பு அமைச்சு உட் பட மூன்று அமைச்சுக்களை ஜனாதிபதி தமது பொறுப்பில் எடுத்துக் கொண்டார். அதை அடுத்தே மூலம் தென் இலங்கையில் அரசியல் நெருக்கடி ஏற்பட்டது.

பிரதமருக்கும் ஜனாதிபதிக்கும் இடை யில் அரசியல் நெருக்கடி ஆரம்பமான போது சமாதானப் பேச்சுக்களை ஜனாதி பதி முன்னெடுப்பதை புலிகள் ஏற்பார் களா என்ற கேள்வியும் எழுப்பப்பட்டது. ஆனால், அந்தக் கேள்விக்கும் தற்போது விடை கிடைத்து விட்டது.

சிங்கள மக்களிடமிருந்து சமாதானத் துக்கான ஆணையைப் பெறும் அரசுடன் பேச் சுக்களை நடத்த புலிகள் தயாராக இருக்கிறார் கள் என்கிறார் மதியுரைஞர் அன்ரன் பால சிங்கம். ஆயினும் அந்த அரசுக்கு தீர்மானங் களை அமுல்படுத்தத் தேவையான சட்ட நிறைவேற்று அதிகாரம் இருக்க வேண்டும் என்றும் அவர் கூறுகிறார்.

ஆகவே புலிகள் சமாதானத்துக்காக எவருடனும் பேசத் தயாராக இருக்கிறார் கள். அத்துடன் உரிய காலம் வரும் வரை பொறுமை காக்கவும் ஆயத்தமாக இருக்கி றார்கள். இதனை தென் இலங்கைத் தலை வர்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். சமாதானத்தை ஏற்படுத்தக் கிடைத்த அரிய சந்தர்ப்பத்தை இழந்து விடக் கூடாது.

# ஜே.வி.பியுடனான கூட்டணியும் அதிகரிக்கும் நெருக்கடிகளும்

## மேலும் பின் தள்ளப்படும் சமாதான முயற்சிகள்

2006 ஆம் ஆண்டு வரை ஜனாதிபதி பதவியில் இருப்பதற்கு அரசமைப்பின் பிர காரம் தமக்கு அதிகாரம் இருப்பதாக ஜனாதி பதி சந்திரிகா குமாரதுங்க ஐ.ரி.என். நேர்கா ணலின் போது வெளியிட்ட கருத்து—

பொது ஜன ஐக்கிய முன்னணியில் உள்ள பிரதான கட்சியான ஸ்ரீலங்கா சுதந் திரக்கட்சி, ஜே.வி.பி.யுடன் கூட்டணி அமைப் பதற்கு ஏற்பட்டுள்ள இணக்கம்—

ஆகியவை காரணமாக தென் இலங்கை யில் அரசியல் நெருக்கடிகள் தீவிரமடைந் துள்ளன.

இந்த மாத இறுதியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் மீண்டும் பேச்சுக்களை நடத்தப்போவதாக ஜனாதிபதி கூறினாலும் தேசிய நல்லிணக்கம், அரசியல் சக வாழ்வு என்பன இன்னும் எட்டாத தூரத்திலேயே இருந்து வருகின்றன.

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையி லான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்கத்துடன் அமைக்கப்பட்ட மனோ— மலிக் குழுவும் இந்த வார இறுதியில் மீண் டும் கூடும் என்று ஜனாதிபதி கூறி இருந்தார். ஆனால் அதுவும் சாத்தியம் இல்லை.

ஆனால் தென் இலங்கை அரசியல்நெருக் கடிக்குத் தீர்வு காண்பதற்கும் அரசுக்கும் புலி களுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக் களை மீண்டும் ஆரம்பிப்பதற்கும் ஆவலாக இருப்பது போன்று ஜனாதிபதி காட்டிக் கொள்கிறார். ஆனால் அவரது ஒவ்வொரு அரசியல் காய் நகர்த்தல்களும்அதற்கு எதிர் மாறாகவே இருந்து வருகின்றன. நம்பிக் கைக்குரியவராக செயற்பட ஜனாதிபதி தவறி வருகிறார்.

### சமாதானப் பேச்சும் அரசியல் நெருக்கடியும்

சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு அதிகாரம் யாரிடம் என்பதற்கு விடை கிடைக்கும் வரை காத்திருக்க விடுத லைப்புலிகள் தயாராக இருக்கின்றனர். லண்டனில் மதியுரைஞர் அன்டன் பாலசிங் கத்துக்கும் நோர்வேயின் சமாதானத் தூதர் எரிக் சொல்ஹெய்முக்கும் இடையிலான சந்திப்பின் போது இது மீண்டும் உறுதி செய்யப்பட்டுள்ளது.ஆனால் புலிகள் எவ் வளவு காலம் பொறுமையாக இருப்பார்கள் என்பது தான் கேள்வி.

புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந் தம் எதிர்வரும் பெப்ரவரி 22 ஆம் திகதி யுடன் இரண்டு வருடத்தை நிறைவு பெறுகி றது. சமாதானப் பேச்சுவார்த்தை நடத்துவதற் குத் தேவையான அதிகாரங்களை ஜனாதி பதி தம் வசம் எடுத்துக்கொண்டதால் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் ஜனாதிபதி திருத்தங் களை செய்து தாமே சமாதானப் பேச்சுக் களை முன்னெடுக்கட்டும் என்கிறார் பிரத மர்.

ஆனால் கடந்த நவம்பர் 4 ஆம் திகதி மூன்று அமைச்சுக்களைப்பொறுப்பேற்ற பின்பும் யுத்த நிறுத்தம் எந்தவித பிரச்சினை யும் இன்றி அமுலில் இருந்து வருவதால் அரசினைப் புதுப்பிக்க வேண்டிய அவசியம் இல்லை என்கிறார் ஜனாதிபதி. ஆகவே தென் இலங்கை அரசியல் நெருக்கடியும் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களும் ஒன்றுடன் ஒன்றுபின்னிப்பிணைந்தவை எனபதை மறுக்க முடியாது.தென் இலங்கை யில் அரசியல் நெருக்கடி தீராவிட்டால் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களும் தொடர்ந்து தடைப்படும்.

ஜனாதிபதி கடந்த வாரம் மேற்கொண்ட நடவடிக்கைகள் சமாதானத்தில் ஏற்பட்ட நம் பிக்கையைச் சிதறடித்துள்ளன. ஒன்று இன வாதக்கட்சியான ஜே.வி.பியுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தம். மற்றையது தனது பதவிக் காலத்தை மேலும் ஒரு வருடத்தி னால் அதிகரிக்கத் தமக்கு அதிகாரம் வேண்டும் என்று அவர் வெளியிட்ட அறிவிப்பு.

### ஜே.வி.பியுடனான ஒப்பந்தம்

நீண்ட காலமாக இடம்பெற்றுவந்த இழு பறியின் பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி யும், ஜே.வி.பியும் இம் மாதம் 20 ஆம் திகதி ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுகின்றன. பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இந்த நிகழ்வை பெரிய அளவில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன. ஸ்ரீலங்கா சுதந் திரக் கட்சி சார்பாக அதன் பொதுச் செயளா லர் மைத்திரி பால சிறிசேனவும், ஜே.வி.பி. சார்பாக அதன் பொதுச் செயளாலர் ரில்வின் சில்வாவும் ஒப்பந்தத்தில் கைசாத்திடுவர் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில். அதனை வைத்து ஜே.வி.பி., அரசு எதிர்ப்பு பிரசாரத்தில் ஈடு பட்டுவந்தது. சமாதானப் பேச்சுக்கள் இடை நிறுத்தப்பட்ட போது அந்த பிரசாரம் மக்கள் மத்தியில் எடுபடாமல் போகவே, ஜனாதிபதி யுடன் கூட்டணி வைப்பதிலும் பொதுத்தேர் தல்ஒன்றை நோக்கமாகக் கொண்டு செயற் படுவதிலும் ஆர்வம் காட்டி வந்தது. அதன் பிரதிபலிப்புதான் இம் மாதம் 20 ஆம் திகதி செய்து கொள்ளப்படவுள்ள ஒப்பந்தம்.

### கூடுதல் ஆசனங்களை பெறுவதே நோக்கம்

ஜே.வி.பியின் நோக்கம் உடனடியாக ஆட்சியைக் கைப்பற்றுவது அல்ல. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் இணைந்து பொதுத் தேர்தல் ஒன்றில் போட்டியிட்டு நாடாளு மன்றத்தில் கூடுதல் ஆசனங்களை கைப் பற்றுவதுதான்.

தற்போதைய அரசியல் நெருக்கடிக்கு தீர்வு காண முடியாவிட்டால் பொதுத்தேர் தல்தான் ஒரே வழி என்று ஜனாதிபதியும் கடந்த காலங்களில் கருத்துத் தெரிவித்து வந் தார். ஜே.வி.பிக்கும் அது ஏற்புடையதாக இருந்தது.

ஆனால், தற்பொழுது ஜனாதிபதியின் கட்சிக்குள் பொதுத்தேர்தலுக்கு எதிரான கருத்துக்களே பலம் பெற்று வருகின்றன. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர்மைத்திரிபால சிறிசேன பொதுத் தேர்தல் தற்போதைக்கு நடைபெறமாட்டாது என்று தெரிவித்து விட்டார்.ஜனாதிபதியின் நம்பிக்கைக்கு உரியவர்களான இந்திய அரசில் தலைமையின் கருத்தும் பொதுத் தேர்தலுக்கு எதிராகவே இருக்கிறது.

இன்றைய நிலையில் பொதுத்தேர்தலை நடத்தினால் வடக்கு, கிழக்கில் புலிகளின் ஆதரவுக்கட்சிகள் அமோக வெற்றி பெற்று விடும் என்று இந்தியா அஞ்சுகிறது. பொதுத் தேர்தல் நடத்த வேண்டாம் என்று ஜனாதி பதிக்கு இந்தியா ஆலோசனையும் வழங்கி உள்ளது. ஆகவே பொதுத் தேர்தல் நடத்து வது தற்போதைக்கு சாத்தியப்படமாட்டாது என்றே கருதப்படுகிறது.

பொதுத்தேர்தல் இல்லை என்றால் ஜே.வி. பியின் நோக்கமும் ஏமாற்றம்தான். இவற்றை எல்லாம் கருதித்தான் தனது பதவிக்காலம் குறித்து புதிய குண்டு ஒன்றைத் தூக்கிப் போட்டு அரசியலை திசைத்திருப்பி விட்டுள் ளார் ஜனாதிபதி.

### ஜனாதிபதியின் பதவிக் காலம்

ஜனாதிபதியின் பதவிக்காலம் குறித்து ஏற்கனவே ஊடகங்களில் தகவல்கள் கசிய ஆரம்பித்திருந்தன. ஜனாதிபதியும் மௌனம் சாதித்துவந்தார். தற்பொழுது முதல் தடவை யாக ஐ.ரி.என். நேர்காணலில் ஜனாதிபதி இது குறித்து கருத்து வெளியிட்டுள்ளார்.

அரசமைப்பின் பிரகாரம் 2006 ஆம் ஆண்டு வரை ஜனாதிபதியாக பதவி வகிக்க தனக்கு அதிகாரம் இருப்பதாகஜனாதிபதி கூறுகிறார். அரசமைப்பின்படி ஜனாதிபதி விரும்பினால் அரசு பதவி ஏற்று ஒரு வருடத் தின் பின்பு நாடாளுமன்றத்தை எந்த நேர மும் கலைக்கலாம். அல்லது அதன் பதவிக் காலம் முடிவடையும் வரை கலைக்காமலும் விடலாம்.இதே போன்று தான் தனது பதவி யும் என்கிறார் ஜனாதிபதி. விரும்பினால் 2005 ஆம் ஆண்டுடன் பதவி விலகலாம். விரும்பாவிட்டால் 2006 ஆம் ஆண்டு வரை பதவியில் இருக்கலாம்.

2005 டிசம்பருக்குப் பின்பு ஜனாதிபதிக் குக் கட்டுப்படப்போவதில்லை என்று ஆளும் ஐக்கிய தேசிய முன்னணியின் சிரேஷ்ட அமைச்சர்கள் கூறுகின்றனர். 2000 ஆம் ஆண்டு இரகசியமாகச் சத்தியப் பிரமாணம் செய்ததாக ஜனாதிபதி கூறுவது வெறும் கேலிக் கூத்து என்றும் கருத்துத் தெரிவிக்கப் படுகிறது.

நாட்டில் அப்போதிருந்த நிலைமை கார ணமாகவே 1999 இல் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டதாக ஜனாதிபதி சமாதானம் கூறுகிறார். தன் மீது நடத்தப்பட்ட ற் கொலைத் தாக்குதலினால் ஜனாதிபதியாக செயற்பட முடியாத நிலைமை ஏற்பட்டிருப் பதாக ஐக்கிய தேசியக் கட்சியினர் பிரசாரம் செய்தனர் என்றும் அதனை முறியடிக்கவே தான் சிகிச்சைக்காக வெளிநாடு செல்ல முன்பு ஜனாதிபதியாக சத்தியப்பிரமாணம் செய்துவிட்டுச் சென்றதாகவும் ஜனாதிபதி கூறுகிறார்.

ஜனாதிபதி 2000 ஆம் ஆண்டு இரகசிய மாகச் சத்தியப்பிரமாணம் செய்தது ஏன் என்பதே ஆளும் கட்சி தரப்பின் கேள்வி. பகி ரங்கமாக அவர் அதனைச் செய்திருக்க லாமே!

1994ஆம் ஆண்டு சத்தியப் பிரமாணம் செய்து பதவியேற்ற ஜனாதிபதியின் பதவிக் காலம் உண்மையில் 2000ஆம் ஆண்டி லேயே முடிவடையவேண்டும். ஆனால் அப்போதைய சாதகமான அரசியல் சூழ் நிலைமையை கருத்தில் கொண்டு ஒரு வருடத்திற்கு முன்னரே அதாவது 1999 ஆம் ஆண்டில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட்டது. ஒரு வருடம் முன் கூட்டியே தேர்தல் நடத்தப் பட்டாலும் தமது 6 ஆண்டு பதவிக் காலம் 2000ஆம் ஆண்டிலேயே முடிவடைவதாக வும் 2000 ஆம் ஆண்டில் தாம் மீண்டும் சத்தியபிரமாணம் செய்ததால் 2006ஆம் ஆண்டு வரை தொடர்ந்து ஜனாதிபதியாகப் பதவியில் இருக்கமுடியும் என்றும் ஜனாதி பதி கூறுகிறார்.

### கேலிக்கூத்தாகும் சமாதான முயற்சிகள்

தற்போதைய அரசமைப்பின் படி ஜனாதி பதி விரும்பினால் அரசு பதவி ஏற்று ஒரு வருட காலத்துக்குப் பின்னர் அரசைக் கலைக்க முடியும். ஜனாதிபதி எந்நேரமும் அரசைக் கலைத்து சமாதான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போடலாம் என்று அச்சம் கடந்த காலத்தில் பிரதமருக்கு இருந்து வந் தது. தற்பொழுது மற்றொரு அச்சமும் ஏற்பட் டிருக்கிறது. அது தான் ஜனாதிபதியின் பதவிக் காலம் பற்றிய அச்சம்.

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையி லான பிரச்சினைகள் தீர்க்க முடியாத கட் டத்தை அடைந்து விட்டன என்பதையே ஜே.வி.பியுடனான கூட்டும் தமது பதவிக் காலம் குறித்து ஜனாதிபதி வெளியிட்டுள்ள கருத்தும் எடுத்துக் காட்டுகின்றன. ஜனாதி பதிக்கும் பிரதமருக்கும் இடையில் தேசிய நல்லிணக்கம், அரசியல் சகவாழ்வு என் பவை எல்லாம் வெறும் கேலிக்கூத்தாகி சமா தானமுயற்சிகளுக்கு அச்சுறுத்தலாக மாறி வருகின்றன.

—எஸ்.தனா—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மீண்டும் சார்ஸ்



ஆட்கொல்லி நோயான 'சார்ஸ்' மீண்டும் ஏற்பட்டிருக்கிறது. இந்த நோயின் கொடூரத்தை மீண்டும் ஒரு முறை கூறத் தேவையில்லை. கடந்த வருடம் சீனா பட்ட பாடு அதனை புடமிட்டுக்காட்டியது.

2002 நவம்பர் மாதம் சீனாவின் குவாங் டாங் மாகாணத்திலேயே இந்தநோய் முதன் முதலாக கண்டறியப்பட்டது. எவருமே எதிர்பாராத வகையில் தீவிரமாகப் பரவிய இந்நோய், கடந்த வருட ஆரம்பத்தில் முப்பதுக்கும் மேற்பட்ட நாடுகளுக்குப் பரவியது.

இந்தநோயினால் எட்டாயிரம் பேர்



பாதிக்கப்பட்டனர்; 800இற்கும் அதிகமானோர் பலியானார்கள். சுற்றுலாப் பயணிகள் வீடுகளுக்குள்ளேயே முடங்கிக்கிடந்தனர். இது பல நாடுகளின் பொருளாதாரத்தை படுகுழியில் தள்ளியது. சீனா, ஹொங்கொங், தாய்வான், கனடா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளே பெரிதும் பாதிக்கப்பட்டன.

பொருளாதாரத்தை கட்டிநிமிர்த்த வேண்டுமானால் 'சார்ஸ்' நோயின் பலியெடுப்பை உடனடியாக நிறுத்த வேண்டுமென்பதைப் புரிந்துகொண்ட நாடுகள், அதற்கான தீவிர முயற்சிகளில் இறங்கின. எனினும், பலன் இல்லை. மழை பெய்து நிற்பது போல் இந்நோய் தானாகவே உருவெடுத்து, அது போலவே தணிந்தும் இருந்தது.

கடந்த ஆண்டின் இறுதியில் இந்தநோய் முற்றிலும் ஒழிக்கப்பட்டுவிட்டதாக நம்பப்பட்டது. எனினும், குளிர்காலம் ஆரம்பித்ததும் இந்தநோய் மீண்டும் பரவலாம் என்று உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை செய்யவும் தவறவில்லை.

கடந்த ஆண்டு அனுபவத்தைக் கருத்தில் கொண்டு, சார்ஸ் நோயால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகள் மிகவும் எச்சரிக்கையாகவே இருந்தன. டாக்டர்களும் 'சார்ஸ்' எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டவண்ணமே இருந்தனர்.

இருந்தும் மீண்டும் தலை காட்டியிருக்கிறது 'சார்ஸ்'. அதவும் முதன்முதலில் உருவெடுத்த அதே சீனாவில்தான் தற்போது மீண்டும் தனது சுயரூபத்தைக் காட்டத் தொடங்கியுள்ளது சார் நோய்.

இந்த வருடம் முதன்முதலாக தொலைக்காட்சி நிருபர் ஒருவரையே இந்தநோய் தாக்கியிருக்கிறது. இவரைத் தாக்கியிருப்பது 'சார்ஸ்' நோய்தான் என்பதைத் தெரிவிக்க சீனா முதலில் தயங்கியது. அதற்குக் காரணம் மீண்டும் சுற்றுலாப் பயணிகளின் வருகை திடீரென நின்று பொருளாதாரம் படுகுழியை நோக்கிப்பாயலாம் என்ற அச்சம் தான். ஆனாலும், கடந்த வருடத்தில் தனக்கு நேர்ந்த சங்கடங்களையும், உலக நாடுகளின் எச்சரிக்கையையும் கருத்தில் கொண்டே இம்முறை 'சார்ஸ்' நோய் ஏற்பட்டிருப்பது குறித்து உடனடியாக அறிவித்திருக்கிறது சீனா.

சாதாரண காய்ச்சலாகப் பரிணமிக்கும் 'சார்ஸ்' மனிதனின் நுரையீரலைத் தாக்கி, அவனை மூச்சுத் திணறவைத்து அவனது உயிரை எடுத்துவிடும். சாதாரண காய்ச்சலாகப் பரிமாணம் எடுக்கும் 'சார்ஸ்' நிமோனியாக் காய்ச்சலாக மாறினால், இதனால் பாதிக்கப்படுபவர் உடனடியாகப் பரலோகம் சென்றுவிடுவார். நோய் அறிகுறிகள் தென்பட்ட ஓரிரு நாட்களிலேயே பாதிக்கப்பட்டவர் உயிரிழப்பது இந்த நோயின் பயங்கரத் தன்மை ஆகும்.

'சார்ஸ்' என்ற பெயரைக் கேட்டாலே உடல்நடுங்கும் அளவுக்கு, இந்நோயின் தாக்கம் கடந்த ஆண்டு சீனர்களைப் பாதித்தது. அதனால், இந்த ஆண்டும் 'சார்ஸ்' நோய் ஏற்பட்டுவிட்டது என்று அறிந்ததும் சீனர்கள் மூக்கையும், வாயையும் மூடி பாதுகாப்புக் கவசம் அணியத் தொடங்கிவிட்டனர். விமான நிலையங்கள், வைத்தியசாலைகள், பொது இடங்கள் என எங்கு பார்த்தாலும் 'சார்ஸ்' நோய் பரிசோதனைகள் நடைபெறுகின்றன.

உடல்வெப்ப நிலையில் சிறிது மாற்றம் காணப்படினும், அவர் உடனடியாக தனிமைப் படுத்தப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப்படுகிறார். அவரை நெருங்கக் கூட டாக்டர்கள் தயக்கம் காட்டுகின்றனர்.

இந்த ஆண்டு இதுவரை மூன்று சீனர்களுக்கு இந்த நோய் ஏற்பட்டு இருக்கிறது. கடந்த ஆண்டைப் போல இந்த ஆண்டும் சீனாவில் இருந்து தமது நாடுகளுக்கு 'சார்ஸ்' பரவக்கூடாது என்பதில் உலக நாடுகள் மிகவும் விழிப்புடன் உள்ளன. விமான நிலையங்களில் வைத்தே சீனர்களுக்கு 'சார்ஸ்' பரிசோதனை மேற்கொள்ளப் படுகிறது. சில நாடுகளில் சீனர்களைக் கண்டால் ஒதுங்கிப் போகும் நிலை கூட ஏற்பட்டிருக்கிறது.

'சார்ஸ்' நோயை ஏற்படுத்தும் ஒரு வித வைரஸ், சீனர்கள் விரும்பி உண்ணும் புனுகுப் பூனைகளில் இருந்தே மனிதனுக்குப் பரவுகின்றன என்று கண்டறியப்பட்டுள்ளது.

இதனால், அங்குள்ள புனுகுப் பூனைகள் அனைத்தையும் கொன்று குவிக்கும்படி அந் நாட்டு அரசு அதிரடி உத்தரவு பிறப்பித் திருக்கிறது. பூனைகளைக் கொன்று குவிக்கவென குழுக்களும் அமைக்கப் பட்டுள்ளன. இந்தக் குழுக்கள் பூனைகளை வேட்டையாடும் பணியில் தீவிரமாக இறங்கியுள்ளன. கடந்த வாரத்தில் மட்டும்



பத்தாயிரத்துக்கும் அதிகமான புனுகுப்பூனைகள் கொல்லப்பட்டுள்ளன என்றுசீனசுகாதார அமைச்சக அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

பூனைகளைத் தாக்கி அவற்றின் மாமிசத்தை உட்கொள்ளும் மனிதனையும் தாக்கும் இந்த வைரஸ் எங்கிருந்து, எவ்வாறு பரவுகிறது என்பது குறித்த ஆய்வில் தற்போது டாக்டர்கள் மூழ்கியுள்ளனர்.



ஆனால் அதற்கு இன்னமும் சரியான விடை கிடைக்கவில்லை. இதனால், 'சார்ஸ்' நோயைக் கட்டுப்படுத்த முடியாதவர்களாக அவர்கள் உள்ளனர். சீனர்களுக்கு உதவுவதற்கென உலக சுகாதார ஸ்தாபன உயர் மட்ட நிபுணர் குழுவும் சீனாவுக்கு விஜயம் செய்து இது குறித்து ஆய்வுநடத்திவருகிறது. ஆனால், பலனேதுமில்லை. 'சார்ஸ்' நோய் ஏனையோரையும் தாக்கும் அச்சம் தொடர்ந்த வண்ணமே உள்ளது.

கடந்த வாரம் மட்டும் இந்த நோயின் அறிகுறிகள் இனங் காணப்பட்ட 120 சீனர்கள் தனிமைப்படுத்தப்பட்டு, சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இது இவ்வாறிருக்க, 'சார்ஸ்' நோயை விடக்கொடியது என்று டாக்டர்கள் கருதும் ப்ளூ காய்ச்சல் வியட்நாமை கலக்கி வருகிறது. பறவைகளால்— குறிப்பாக கோழிகளால்— பரவக் கூடிய இந்த நோய்க்கு இந்த வருடத்தில் இதுவரை14 பேர் பலியாகிவிட்டனர்.

இந் நோயினால் தென் கொரியா, வியட்நாம், ஜப்பான் ஆகிய நாடுகளில் லட்சக் கணக்கான கோழிகள் இறந்துவிட்டன. பறவைகள் மூலம் மனிதனுக்கும் இந்நோய் பரவும். இதனால், நோய் தாக்கத்துக்குரிய அறிகுறிகளுடன் காணப்படும் கோழிகளை மேற்படி நாடுகள் கொன்று குவித்து வருகின்றன.

குறிப்பாக ஆசிய நாடுகள் இந்த விடயத்தில் மிகவும் விழிப்புணர்வுடன் தற்போது செயற்பட்டு வருகின்றன.

ஹொங்கொங் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த உயிரியல் பேராசிரியர் நட்திய ஆய்வில் கடந்த ஆண்டு பரவிய 'சார்ஸ்' நோய் கிருமிகளுக்கும் இப்போது பரவி வரும் 'சார்ஸ்' நோய் கிருமிகளுக்கும் இடையே வேறுபாடு இருப்பதைக் கண்டு பிடித்து இருக்கிறார். இப்போது பரவும் கிரமிகள் ஆபத்தானவை அல்ல என்றும் காய்ச்சல் மற்றும் சளித்தொல்லையை இது ஏற்படுத்தும் என்றும் அவர் கூறியுள்ளார்.

—அலெக்ஸ்—


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 15 – 10 – 1954



உதிர்வு 26 – 12 – 2003

அமரர் அருட்பிரகாசம் பாஸ்கரன்

[முன்னாள் மனேஜர், ப.நோ.கூ.சங்கம், தீர்வேலி]

மனிதரில் மாணிக்கமாய் மாண்புடன் மாநிலத்தில்
புனிதமாய் வாழ்ந்து இறைவன் கழலடைந்தீர்
இனிய உமது முகத்தை இனி எப்போது காண்போம்?
கனிவான பேச்சு மட்டும் காதுகளில் கேட்கிறதே!
உங்கள் ஆத்மா சாந்திபெற ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

25 - 01 – 2004 திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் நண்பகல் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உறவினர்கள் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உமது பிரிவால் துயருறும்
அன்புத் தந்தையாரும்,
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

கரந்தன் மேற்கு, நீர்வேலி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சோனியா

இந்திய அரசியலில் கதிரையைப்பிடிப்ப தற்கு அளிக்கப்படும் இடம், கொள்கைக்கு எள் அளவாவது அளிக்கப்படுவதில்லை. இந்த உண்மை மீண்டும் ஒரு முறை தி.மு.க

அப்போது ராஜிவ்காந்தி கொலையை ஆராய்ந்த ஜெயின் கமிஷன் தி.முகவும் கொலைச்சதிக்கு உடந்தை என்று கூறிய தாகச் சொல்லிக் கொண்ட காங்கிரஸ், தி.மு.க அமைச்சர்களை குஜ்ரால் தலைமை யிலான மத்திய அமைச்சரவையிலிருந்து வெளியேற்றவேண்டுமென்று கோரியது. அவ்வாறு செய்ய குஜ்ரால் மறுக்கவே அர சுக்கு அளித்த ஆதரவை காங்கிரஸ் வாபஸ் பெற்றது.

### மாறும் கூட்டணிகள்

1980ஆம் ஆண்டிலிருந்து காங்கிரஸுக்கு எதிரான அணியிலேயே தி.மு.க இருந்து வருகிறது. இப்போது காலம் மாறுகிறது. தி.மு.க–காங்கிரஸ் கூட்டணி உருவாகி விட்டது. எதிர்வரும் மக்களவைத்தேர்தலில் இக்கூட்டணி வெற்றிபெறலாம் என்ற பரவ லான எதிர்பார்ப்பு உள்ளது.

தனித்தே தமிழகத்தில் போட்டியிட நேரிட் டுள்ளது.

ஜெயலலிதாவைப் பொறுத்தவரை, எந்த அணியிலும் சேராது தனித்துப்போட்டியிட்டு, கூடுமானவரை அதிக இடங்களில் வென்று தேர்தலுக்குப் பின்பு பேரம் பேசி தமது நிபந்த னைகளை ஏற்கச் செய்ய திட்டமிடுகிறார்.

சமீபகாலமாக இந்துத்வ ஆதரவு வேடம் பூண்டு நடந்த ஜெயலலிதாவின் நாடகத்தை நம்பி மாநில பி.ஜே.பி தலைவர்கள் நம்பத் தகுந்த கூட்டாளியான தி.மு.கவை தூக்கி எறிந்தனர். இதன் விளைவாக 1998,1999 தேர்தல்களில் முறையே 4 மற்றும் 5 தொகுதி களை வென்ற பி.ஜே.பி. தனித்துநின்று ஓர் இடத்தையாவது பெறமுடியாத நிலை தற் போது ஏற்பட்டுள்ளது. எனினும் நாகர் கோவில், கோயமுத்தூர் தொகுதிகளில் பி.ஜே.பி. கட்சிக்கு செல்வாக்கு இருப்பதால்



வாஜ்பாய்

### கட்சித்தாவல் சட்ட மூலம்

இதற்கிடையில் கட்சித்தாவல் குறித்து முக்கியமான சட்டமூலம் இந்தியாவில்

# கொள்கைகளைப் பறக்கவிட்டு தடம் புரளும் கட்சிகள்!

## அதிகாரமே ஒரே குறிக்கோள்

தலைமையில் தமிழகத்தில் அமைந்துள்ள கூட்டணியால் நிரூபிக்கப்பட்டுள்ளது.

1997இல் குஜ்ரால் தலைமையில் பதவி



வைகோ

யில் இருந்த ஐக்கிய முன்னணி அரசில் தி.மு.கவும் முக்கியபங்காளி. அந்தக்கூட்ட ணிக்கு வெளியிலிருந்து காங்கிரஸ் ஆதர வளித்து வந்தது.

இதற்கிடையில் இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தால் போல் விடுதலைப்புலிகள் ஆதரவுக் கட்சிகளான ம.தி.மு.கவும் பாட் டாளி மக்கள் கட்சியும் பி.ஜே.பி. தலைமை யிலான கூட்டணியிலிருந்து வெளியேறி தி.மு.க – காங்கிரஸ் கூட்டணியில் சேர்ந்து விட்டன.

தீவிர ஈழஎதிர்ப்புக் கொள்கையுடைய காங்கிரஸுடன் இவர்கள் ஓரணியில் இருப் பது கொள்கை முரண்பாடுடைய இரு தரப் பினர் தேர்தல் வெற்றி ஒன்றை மட்டும் நோக் கமாகக் கொண்டு கூட்டுச்சேர்வதனையே எடுத்துக்காட்டுகின்றது. பாட்டாளி மக்கள் கட்சி அணிமாறும் முடிவை கடந்த வாரம் அறிவித்தது. ஏப்ரல் இறுதியில் தேர்தல் நடை பெறும் என பிரதமர் வாஜ்பாய் ஹைதரா பாத்தில் நடைபெற்ற பி.ஜே.பி. செயற் குழுக் கூட்டத்தில் பகிரங்கமாக அறிவித்ததை யடுத்து பா.ம.க. கடைசியாக தனது முடிவை அறிவித்துவிட்டது. அதன் முடிவுக்கு முக்கிய காரணம் பி.ஜே.பியுடன் கூட்டு வைக்க அ.தி. மு.க மறுத்தது தான் .இதனால் பி.ஜே.பி

அந்த இரண்டு இடங்களையாவது வெல்ல கட்சி எதிர்பார்க்கிறது.

2002 இல் சாத்தான்குளம் சட்டசபை இடைத்தேர்தலில் அ.தி.மு.க. தனித்துப் போட்டியிட்டு தி.மு.கவின் மறைமுக ஆதரவுடன் போட்டி யிட்ட காங்கிரஸை தோற்கடித்தது. இதே வெற்றியை 40 லோக் சபாதொகுதிகளிலும் பெற முடியும் என்ற அதீத நம்பிக்கையு டன் உள்ளார் ஜெய லலிதா. ஆனால் சட்ட சபைத் தொகுதியின் சராசரி வாக்காளர் தொகை ஒரு லட்ச மாகும். லோக்சபா தொகுதி ஒன்றின் சராசரி வாக்காளர் தொகை பத்துலட் சம். அதுமாத்திர மன்றி சட்டசபை இடைத்தேர்தல் ஒரே ஒரு தொகுதியில் அல்லது இரு தொகுதிகளில் நடக்கும். ஆனால் லோக்சபா தேர்தல் 40 தொகுதிகளில் ஒரே நேரத்தில் நடக்கும். பிர



கருணாநிதி

### பக்கத்து வீடு

சாரமோ 4 முதல் 6வாரம் வரை மட்டுப் படுத்தப்பட்ட காலம் தான். பணத்தையும் பரிசுகளையும் வாரி இறைத்து சாத்தான் குளத்தில் வென்றதுபோல் ஒவ்வொன்றும் 10 லட்சம் மக்கள் தொகையையுடைய 40 தொகுதிகளில் வாரி இறைத்து சூறாவளிப் பிரசாரம் செய்ய ஜெயலலிதாவால் முடியுமா என்பது கேள்விக் குறியே.

ஜெயலலிதாவால் பொடா சட்டத்தின் கீழ் 17 மாதங்கள் சிறை யிடப்பட்ட வைகோ பிணைமனு செய்ய இயலக் கூடியதாக இருந்தபோதும் அதைச்செய்ய மறுத்து வந்தார். இப்போது அவர் மனம்மாறி பூந்த மல்லி சிறப்புநீதி மன்றில் பிணைமனுச் செய்துள்ளார். லோக் சபா தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட வைகோ வெளியேவருவது அவசியம் என்பதால் இம்முடிவு எடுக்கப்பட்டதாக தெரிகிறது.



ராமதாஸ்

வைக்கோவின் பிணைமனு மீதான தீர்ப்பை ஜனவரி 20வரை நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது. தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழநெடுமாறன் 1992இல் புலிகளுக்கு ஆதரவாக புத்தகம் அச்சிட்டு வெளியிட்டதான வழக்கில் அவருக்கு நீதிமன்றம் பிணைவழங்கியதால் அவரும் கடலூர் சிறையிலிருந்து வெளிவரவுள்ளார்.

நிறைவேறி இருக்கிறது. இதன்படி குறித்த ஒரு கட்சியிலிருந்து தேர்தலில் போட்டியிட்டு வென்ற எவரும் கட்சி தாவமுடியாது. 1986 இல் ராஜிவ்காந்தி பிரதமராக இருந்த போது தனிநபர் கட்சிதாவ முடியாது. ஆனால் குறித்த கட்சியின் எம்.பிக்களில் மூன்றி லொரு பங்கினர் ஒரு மித்து கட்சி தாவலாம் என்று சட்டதிருத்தம் வந் தது. இப்போது அதனை யும் இரத்துச்செய்து எவ ரும் கட்சி மாறமுடியாது என புதிய சட்டத்தை. இந் திய நாடாளுமன்றம் ஒரு மித்து இயற்றியுள்ளது.

### பரந்த கூட்டணிக்கு காங்கிரஸ் முயற்சி

நாடாளுமன்ற மக்க ளவைத் தேர்தல் பர பரப்பு தொடங்கிவிட்ட நிலையில், புதிய அரசு அமையும்போது இந்த கட்சித்தாவல் சட்டம் முக்கியதுவம் உடையதாகிறது. பி.ஜே.பிக்கு எதிராக பரந்த கூட்டணி அமைக்க காங்கிரஸ் முயன்று வருகிறது.

உத்தரப்பிரதேசத்தில் பகுஜன் சமாஜ்கட்சி, தமிழகத்தில் தி.மு.க, பீகாரில் லல்லுவின் ராஷ்ரிய ஜனதா தள் மற்றும் லோக் ஜனசக்தி, ஜம்முகாஷ்மீரில் முதல்வர் முப்தியின் மக்கள் ஜனநாயகக் கட்சி என பரவலாக கூட் டணி அமைக்க காங்கிரஸ் முனைந்துவரு கிறது.

இதேவேளை சந்தர்ப்பவாதம் ஊழல் நிறைந்த இந்திய அரசியலில் அப்பழுக்கற்ற பழைய தலைமுறை அரசியல் வாதிகளில் மிஞ்சி இருந்த ஒருவரான கர்நாடகத்தின் முன்னாள் முதல்வர் ராமகிருஷ்ணஹெக்டே கடந்த வாரம் காலமா னார். முதல்வர் மீது ஊழல் வழக்கு வந்தால் அவரது மனைவியை முதல்வராக்கும் மாநில முதல்வர்கள் உள்ள இந் தியாவில் ராஜினாமாக் கடிதத்தை எப்போது சட்டைப்பைக்குள் வைத் திருப்பவர் எனப் புக ழப்படுமளவுக்கு முதல் வர் பதவியை பலதட வைகள் தூக்கி எறிந் தவர் கர்நாடகத்தின் புகழ் பூத்த முன்னாள் முதல்வர் ஹெக்டே. ஜனதாக் கட்சி இந்தியா வில் உடைந்து சிதறியபின்பு கர்நாடகத்தி லும், பீகாரிலும் மட்டும் கட்சி எஞ்சியுள்ளது. கர்நாடகத்தில் கட்சி இன்றும் உயிர்வாழக் காரணம் ஹெக்டே எனில் அது மிகையா காது.

எஸ்.சுரேந்திரஜித்

# வாழ்க்கை உயிருள்ளது



வாழ்க்கை பற்றிச் சிலர் கவலைப்படுகி றார்கள். பாதை தெரியவில்லை. எதிர்காலம் இருட்டாக இருக்கிறது என்பார்கள்.

நீண்ட காலத் திட்டம் போடும்போது, உங்களுக்கு முன் இருப்பதை மறந்து விட்டு மனதைக் குழப்பக் கூடாது. உங்கள் கையில் உள்ளவற்றில் உங்கள் எதிர்காலம் மறைந் திருக்கிறது. கண்முன்னால்தெரிவதைவைத்து நடைபோடத் தொடங்குங்கள். மேலும் வழி தானாகத் தெரியும். பெரிய பயணங்களை இவ்வாறு நடத்த வேண்டி வரும் .

கடந்தகால கணங்கள் முடிந்து போனவை. அவற்றை ஏற்கனவே நீங்கள் வாழ்ந்து விட்டீர்கள். இப்பொழுது உங்கள் முன் நிற்கும் கணத்தை புறக்கணித்து கடந்த கால கணத்தில் உங்களை நிறுத்தா தீர்கள்.

கூட்டை விட்டுப் பறந்து போன பறவை களை நினைக்காதீர்கள். இப்பொழுது இன்றும் உங்கள் முன்பு இருப்பவற்றில் உங்களை ஈடுபடுத்தி கணத்திற்குக் கணம் அந்தக் கணத்திலேயே உங்களை நிறுத்தி வளமாக வாழுங்கள். வாழ்க்கை வெள்ளம் உயிருள்ளது. அதில் நின்ற நிலையில் நிற்கக்கூடாது. தொடர்ந்து முன்னேற வேண் டும். எண்ணங்களால் நிற்பவனைவிட முன்னே நகர்ந்து செல்பவன், தான் அடைய வேண்டிய இலக்குக்குப் போய்ச்சேரமுடியும்.

ஆண்டவன் யாரையும் தண்டிப்பதில்லை. ''அன்பே கடவுள்''. துன்பங்களுக்குக் காரணம் ஆண்டவன் அல்ல. துன்பத்தைக் கெட்டதாக நினைக்க வேண்டாம். '' ஏனோ தவறாகிவிட்டது'' என்று உங்களை எச்சரிக் கும் அறிகுறியே துன்பம் ஆகும்.

மற்றும் நீங்கள் இப்பொழுது எந்த நிலையில் இருக்கிறீர்களோ, அதில் சில குறைகள் இருந்தாலும் உங்களை அந்த நிலையிலேயே திருப்தியுடன் ஏற்றுக் கொள்வது தான் ''தன்னை ஏற்பது'' ஆகும்.

இவ்வாறு ஏற்றால் இந்தக் கணத்தில் இருந்தே உங்கள் வாழ்க்கையை நீங்கள் வாழத் தொடங்கி விட்டீர்கள் என்று அர்த்தம். தன்னைத் தானே அப்படியே ஏற்றுக் கொள்ள நிறைய துணிவு வேண்டும். உலகில் சிலர் மட்டுமே இதனைச் சாதிக்க முடியும். வாழ்க்கையை உங்களுக்கு கடவுள் எதற்காகக் கொடுத்தார்? வீணாக்கவா? இல்லை. சந்தர்ப்பங்கள் என்ற ரூபத்தில் இறைவன் இவ்வாறான இந்தப் பரிசுகளை தரும்போது நன்றி இல்லாதவன் போல் அவற்றை நாம் தான்தூர எறிந்து உள்ளோம். நல்ல சந்தர்ப்பங்கள் கதவைத்தட்டும் போது திறக்க வேண்டாமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்

# சந்தர்ப்பவாதக் கூட்டணியும் தமிழக அரசியல் வாதிகளும்

''அதிகாரம், பதவி கிடைக்கவேணும் என்றால் கொள்கையாவது, மண்ணாவது'' விசனித்தபடியே தேரடியில் வந்தமர்ந்தார் விநாசியர்.

''ஏன் அண்ணை, யாரை இந்தக் காய்ச்சுக் காய்ச்சிறியள்?'' கேட்டான் லோகன்.

''நல்லவேளை, நாங்கள் இன்னும் இந்தளவுக்கு முட்டாள் ஆகவில்லை, ஆனபடியால்தான் இங்கே சிலர் தலையாலை தண்ணிகுடிச்சுப் பார்த்தும் வேலைநடக்காமல் இருக்கு. ஆனால், அப்பிடிப்பட்டவை விழுந்து விழுந்து கும்பிடறவைதான் ஆட்சியைப்பிடிக்கிறதுக்காக யார் காலையும் வாரிவிடுவம் என்று நடக்கினம்'' – என்றார் விநாசியர்.

''அண்ணை கொள்கைப்பிடிப்புள்ளவர்தான்; இல்லாவிட்டால் மற்றவைக்கு விளங்காமல்தான் கதைக்கிறது என்ற தன்ரை கொள்கையை விடாமல் பின்பற்றுவாரே?'' நக்கலடித்தான் டானியல்.

''உந்தப் பகிடிக்கு எல்லோரும் ஒருக்கா சிரிச்சு விடுங்கோ!'' என்று எரிச்சலாகக் கூறிய விநாசியர், ''கொண்ட கொள்கைக்காகத் தண்டவாளத்திலை ரயிலுக்கு முன்னாலை தலைவைச்சுப்படுத்து மறியல் போராட்டம் நடத்தின கருணாநிதி, ராஜீவ் படுகொலையிலை தி.மு.க.வுக்குப் பங்கிருக்கு என்று கொலைகாரப்பட்டம் சூட்டின காங்கிரஸ்காரரோடை கூட்டணி அமைப்பாரே?'' என்று கேட்டார்.

''ஓம், ஓம் ராஜீவ் கொலையிலை தி.மு.க.வுக்கு தொடர்பிருக்கென்று ஜெயின் கமிஷன் சொன்னதாக தகவல் வெளியானபோது, மத்திய அரசில் அங்கம் வகித்த தி.மு.கவை வெளியேறச் சொன்ன காங்கிரஸ், அதுக்கு தி.மு.க. மறுக்க, ஆட்சியையே கவிழ்த்து விட்டது எல்லே. இப்பவும் அந்தக் குற்றச்சாட்டு அப்படியே இருக்கு. ஆனால், கருணாநிதியும், சோனியாவும் போனிலை கூடிப்பேசுகினம். என்ன அரசியலோ?'' புலம்பினார் மாஸ்ரர்.

''கருணாநிதிக்கே இந்தச் சிக்கல் இருக்கும்போது, விடுதலைப்புலிகளை முழுமூச்சாக ஆதரிக்கிற வைகோவும், டாக்டர் ராமதாஸூம் புலிகளை அழிக்க நினைக்கிற காங்கிரஸ்காரரோடை எப்படி கூட்டணி அமைக்கப்போகினம்?'' கேட்டான் லோகன்.

''அது வலு சுலபம் தம்பி, தாங்கள் காங்கிரஸோட கூட்டணி வைக்கமாட்டம் என்று இரண்டு பேரும் சொல்லிப் போடுவினம்'' என்றார் விநாசியார்.

''இதென்ன அண்ணை விசர்க்கதை கதைக்கிறியள், நீங்கள் என்ன உள்ளுக்குள்ளை இருந்தே வந்தனீங்கள்?''

''ம.தி.மு.கவும், பாட்டாளி மக்கள் கட்சியும், தி.மு.கவும், காங்கிரஸூம் இணைந்து கூட்டணி அமைச்சாச்சு என்று செய்தி வரத் தொடங்கிவிட்டது. இப்ப ஆளுக்கு எத்தனை தொகுதிகளிலை போட்டி என்ற கதை மட்டும்தான் மிச்சம் இருக்காம். இந்த நேரத்திலை வைகோவும், டாக்டர் ராமதாஸூம் காங்கிரஸோடை கூட்டணி அமைக்கமாட்டினம் என்று கதை விடுகிறியள்.'' கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி விநாசியரை மட்டம் தட்டினான் லோகன். அதைக்கேட்டு ஆத்திரப்படாமல் சிரித்தபடி மாஸ்ரரைப் பார்த்தார் விநாசியர்.

''தம்பி லோகன், விநாசியர் சொல்லுறதிலும் ஒரு அர்த்தம் இருக்கு. செய்யறதையெல்லாம் செய்துபோட்டு அதுக்கேத்தமாதிரி வியாக்கியானம் சொல்லுறதுக்கு தமிழக அரசியல்வாதிகளை வெல்ல இன்னும் ஒருவரும் பிறக்கவில்லை. இப்ப வைகோவிட்டை யாராவது ''நீங்கள் விடுதலைப்புலிகளை ஆதரிக்கிறீர்கள். ஆனால், காங்கிரஸ் எதிர்க்கிறது. 'நீங்கள் இரண்டு பேரும் கூட்டணி அமைத்தால் எப்படி ஒத்துவரும்? ' என்று கேள்வி கேட்கினம் என்று வைத்துக் கொள்ளும். அதற்கு வைகோ என்ன சொல்லுவார் தெரியுமோ? 'நாங்கள் தி.மு.கவுடன்தான் கூட்டணி அமைத்திருக்கிறம். அந்தக் கூட்டணியிலை காங்கிரஸூம் இடம் பெற்றிருக்கு! அவ்வளவுதான்!' என்று சொல்லுவார். ராமதாஸூம் இதைத்தான் சொல்லுவார்.'' விளக்கினார் மாஸ்ரர்.




''அப்ப தேர்தல் பிரசாரங்களிலை பங்குபற்றும்போது விடுதலைப் புலிகளைப் பற்றிப் பேசவேண்டி வந்தால், இரண்டுதரப்பும் என்ன செய்யும்?'' கேள்வி எழுப்பினான் டானியல்.

''அது இன்னும் சுலபம் தம்பி. கூட்டணி அமைச்சு, தேர்தல் பிரசாரம் தொடங்கிறதுக்குள்ளை எல்லோரும் சேர்ந்து இரகசிய ஒப்பந்தம் செய்துபோடுவினம். தி.மு.கவுக்கு இதனால் பிரச்சினை இல்லை. அவை எப்பவும் தங்களுக்கு தேவைப்படுகிற நேரத்திலை ஈழத்தமிழருக்காக கதறி அழுவினம், தேவையில்லாத நேரத்திலை மத்திய அரசுக்கு 'ஈழத்தமிழரைக் காப்பாற்றுங்கள்' என்று கடிதம் எழுதிப்போட்டுகமுக்கமாக இருப்பினம். இதிலை எப்பவும் ஈழத்தமிழருக்கு ஆதரவாக குரல் எழுப்புகிற வைகோவுக்கும், டாக்டர் ராமதாஸூக்கும்தான் சிக்கல் வரும். ஆனால், அவையும் தேர்தல் முடியும் வரையும் விடுதலைப் புலிகளைப்பற்றி கதைக்கிறதில்லை என்று சுய கட்டுப்பாடு விதிச்சுக் கொள்ளுவினம்' காங்கிரஸ்காரரும் புலிகள் பற்றி பிரச்சினை கிளப்பிறதில்லை என்று ஒத்துழைப்பினம். பிறகென்ன, தேர்தல் முடியும்வரை கூத்து நடக்கும்.'' நினைத்ததைச் சொல்லி முடித்தார் விநாசியார்.

''ஆனால், எதிர்க்கட்சிக்காரர் விடமாட்டினம், எப்பிடியும் இந்தப் பிரச்சினையை எழுப்புவினம்'' என்றான் டானியல்.

''அதுகும் நடக்கிறமாதிரித் தெரியவில்லை எப்படியும் பாரதிய ஜனதாக்கட்சியும் அ.தி.மு.கவும் கூட்டணி அமைக்கும் போலத் தெரியுது. அந்த நேரத்திலை அவை யாவையும் இந்த விஷயத்தை பெரிய பிரச்சினையாக்க ஏலாது போலத்தான் இருக்கு!''

''ஏன் மாஸ்ரர்?''

''எம்.ஜி.ஆர் எப்பிடி, எப்பிடி எல்லாம் விடுதலைப்புலிகளுக்கும், தலைவர் பிரபாகரனுக்கும் உதவி செய்தார் என்று பாலா அண்ணை புத்தகத்திலை எழுதி, அதுவும் தமிழ் நாட்டைக் கலக்கியடிச்சுக் கொண்டுஇருக்கு.

அ.தி.மு.கவுக்கு வாக்குப் போடுகிறசனம் இன்றைக்கும் எம்.ஜி.ஆரை தெய்வமாகக் கும்பிடுகினம். இந்த நேரத்திலை, அ.தி.மு.க காரர் பிரச்சினையை எழுப்பினால். எம்.ஜி. ஆரே புலிகளுக்கு இந்தமாதிரி உதவி செய்திருக்கிறார். பிறகு நாங்கள் செய்தால் என்ன? என்றெல்லே, வைகோவும், ராமதாஸூம் கேட்பினம். எழுதிக் கொடுக்கிறதை வாசிக்கிற ஜெயலலிதா இதுக்குப்பதில் சொல்ல ஏலுமே? ஆனபடியால், அவவும் இந்தப் பிரச்சினையைப் தேர்தலிலை பெரிசாக எடுக்கமாட்டா என்றுதான் நினைக்கிறன்.'' என்று கூறியபடியே எழுந்தார் மாஸ்ரர்.

''நீங்கள் சொல்லுகிறதைப் பார்த்தால் தெற்கிலை மட்டுமில்லாமல் கடல் கடந்து வடக்கிலையும் நிலைமையை ஈழத்தமிழர் நலனுக்கேற்றவாறு உருவாக்கிற கெட்டித்தனம் எங்களுக்கு இருக்குது'' பெருமிதத்துடன் சொன்னபடி எழுந்தான் டானியல்.

''இதிலை ஏன் சந்தேகம்?'' என்று கூறிக் கொண்டே நடந்தார் விநாசியார்.

**– ஏகலைவன்**

---

## சொற்சிலம்பம் போட்டி இல.91

சொற்சிலம்பம் 91போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்க வேண்டிய கடைசித் தினம் ஜனவரி 31ஆம் திகதி ஆகும். விடைகள் பெப்ரவரி 07ஆம் திகதி சுடர்ஒளியிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் பெப்ரவரி 13ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல. 89 க்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபால் அட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும் இரண்டாவது பரிசாக 150 ரூபாவும் மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லி மாராய்ச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

## சொற்சிலம்பம் போட்டி இல.89

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 சா | 2 சு | 3 வ | 4 த | ம் | ■ | 5 நா | 6 கு |
| 7 க | ட் | ட | ளை | ■ | 8 ப | ட் | டி |
| 9 ச | டு | தி | ■ | 10 சு | ண் | ட | ல் |
| ம் | ■ | 11 சை | 12 வ | ம் | ■ | ம் | ■ |
| ■ | 13 சி | ■ | 14 ச | மா | 15 தி | ■ | 16 அ |
| 17 த | ங் | 18 க | ம் | ■ | 19 மி | 20 த | ம் |
| 21 ம | க | ம் | ■ | 22 ஈ | ர் | ப் | பு |
| 23 து | ம் | பி | க் | கை | ■ | 24 பு | லி |

## சொற்சிலம்பம் போட்டி இல.91

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | ■ | 5 | 6 |
| 7 | | ■ | 8 | | | | |
| 9 | | 10 | | | ■ | | ■ |
| | ■ | 11 | | ■ | 12 | | 13 |
| ■ | 14 | | ■ | 15 | | ■ | |
| 16 | | | | | ■ | 17 | |
| 18 | | | ■ | 19 | 20 | ■ | |
| 21 | | ■ | 22 | | | | |

## சொற்சிலம்பம் போட்டி இல.91

**இடமிருந்து வலம்**

1. மிதவாதி அல்லன்.
5. அதிக/மிகு.
7. திரவத்துக்கும் திண்மத்துக்கும் இடைப்பட்ட—களிம்பு—நிலையில்; உள்ளது.
8. சமுத்திரதில் பிடிப்பது;இங்கிருந்து ஏற்றுமதியாவது.
9. வாழும் ஸ்தானம்.
11. எங்களில் பலர்.
12. சர்ப்பம்.
14. சுத்தமான/பரிசுத்த.
15. ஒளி/தீப்பிழம்பு வடிவம்.
16. தாமரை.
17. இது இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்...
18. இல்லாமல் அழித்தொழி.
19. இதுவந்திடப் பத்தும்பறந்திடுமாமே!
21. முற்கால ஆயுதம்.
22. [illegible]

**மேலிருந்து கீழ்**

1. இந்துக்களின் திருநாள்களில் ஒன்று.
2. பகுபத உறுப்பில் ஒன்று.
3. மருந்து/மருத்துவம் (வைத்தியம்).
4. உறுதி.
5. நாணம்.
6. மழை/வெயில் இரு காலத்திலும் உதவும்.
10. பிள்ளையார்.
12. அரைவாசி.
13. மகன்.
14. உறங்கல்/தொங்கல்.
15. இதைவிட்டு சுறுசுறுப்பாய் இரு.
16. அரசியல்வாதியின் கண் எப்போதும் இதன் மீது தான்.
20. பல அல்லவே!

## சொற்சிலம்பம்-88 பரிசு பெறுவோர்.

1. து.காண்டீபன்,
   சபாபதிப்பிள்ளை வீதி,
   சுன்னாகம்.
2. இ.கலைச்செல்வன்,
   திருநெல்வேலி கிழக்கு,
   யாழ்ப்பாணம்.
3. அ.மங்களேஸ்வரி,
   471.இறம்பைக்குளம்,
   வவுனியா.

### பாராட்டுப் பெறுவோர்

1. செ.கனகரத்தினம்,
   975, அன்புவழிபுரம்,
   திருகோணமலை.
2. எஸ். நிர்மலா,
   2/2 ,முதலாம் குறுக்குமுனைத் தெரு,
   மட்டக்களப்பு.
3. இ. குலசிங்கம்,
   5 A, வட்டாரம், நயினாதீவு.
4. ந .ரூப காந்தி,
   பிரதான வீதி, கறுவாக்கேணி,
   வாழைச்சேனை.
5. கே.புகழ் முகிலன்,
   ஆறுமுகம் வீதி,
   வட்டக்கச்சி.
6. சு.அகலிகை, ரெரன்ஸ் அவனியூ,
   கல்கிஸை
7. என்.ஜெயந்தி,
   எருவில், சிவபுரம்,
   களுவாஞ்சிக்குடி.
8. எஸ்.சனந்தனன், களுபோவல,
   தெகிவளை.
9. த .செந்தூரன்,
   துன்னாலை தெற்கு,
   கரவெட்டி.
10. வி.கலைவாணி, 33/28 C சிவபுரி,
    திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உடலை ஆரோக்கியமாக வைத்திருப்பதற்கு நடைப்பயிற்சி பெரிதும் உதவுகிறது. நடைப்பயிற்சி தொடர்பான பயனுள்ள விவரங்கள் கேள்வி பதில் வடிவில் கீழே தரப்பட்டுள்ளன.

# நடை நோய்க்குத் தடை

**அன்றாடம் பல வேலைகளைச் செய்யும் எமக்கு நடைப்பயிற்சி அவசியமா?**

அன்றாடம் பல வேலைகளை நாம் செய்தாலும் கண்டிப்பாக நடைப்பயிற்சி எமக்கு அவசியம்தான். நடைப்பயிற்சி என்பது எமது நீண்டகால ஆரோக்கியத்தை இலக்காகக் கொண்டதாகும். அன்றாடம் நாம் பல வேலைகளைச் செய்தாலும் அவைகள் மூலம் மன இறுக்கம்தான் இறுதியில் வருகிறது. எனவே, நடப்பதும் ஓர் இளைப்பாறல்தான். மன இறுக்கத்திலிருந்த எம்மை அது விடுவிக்கிறது. மனச் சோர்வுக்கு விடை கொடுக்கவும், நல்ல நிம்மதியான தூக்கத்துக்கும் நடைப்பயிற்சி அவசியமே!

**நடைப்பயிற்சியை நாம் தினமும் செய்வதால் என்னென்ன நோய்களிலிருந்து நலம் பெறலாம்?**

நடைப்பயிற்சியை நாம் தினமும் செய்வதால் ஏறக்குறைய எல்லா நோய்களிலிருந்தும் பாதுகாப்புப் பெறலாம். பல நோய்களைக் கட்டுப்பாட்டில் வைக்கலாம்! சில நோய்களை நீக்கிக்கொள்ளலாம். உடல் இளமையாக இருக்கும். இரத்த ஓட்டம் சீரடைகிறது. நரம்பு மண்டலங்கள் சுறுசுறுப்படைகின்றன. நுரையீரல்கள் பலம் பெறுகின்றன. இதயம் சீராக இயங்குகின்றது. தசைப்பகுதிகள் நல்ல முறையில் இயங்குகின்றன. நாளமில்லாச் சுரப்பிகள் புத்துணர்ச்சி பெறுகின்றன. ஆஸ்துமா, உடல் வலி, இரத்த அழுத்தம், நீரிழிவு நோய்கள் குணமாகின்றன. குண்டு உடல் கரைகின்றது. நீண்ட ஆயுள் கிடைக்கிறது. மனதில் உற்சாகம் கொப்பளிக்கின்றது.

**நடைப்பயிற்சியைத் தொடங்குவதற்கு முன் வோர்மிங்–அப்(உடல் தளர்வுப் பயிற்சிகள்) செய்ய வேண்டுமா?**

நடைப்பயிற்சியைத் தொடங்கும் முன் வோர்மிங்–அப் செய்வது (10 நிமிடங்கள்) மிகவும் நல்லது. உடல் தளர்வு பயிற்சிகள் எமது உடல் உறுப்புகளில் உள்ள தசை நார்களில்நெகிழ்வுத்தன்மையை உருவாக்குவதற்காக செய்யப்படும் பயிற்சிகள் ஆகும். எமது உடலை ஆயத்த நிலைக்கு கொண்டு வர இப்பயிற்சிகள் மிகவும் உதவுகின்றன. இப்பயிற்சிகளினால், நம் உடம்பில் ஒரு 'சமச்சீர்நிலை' உருவாகின்றது.

**நடப்பதற்கென்று ஒரு நேரம் தினமும் ஒதுக்குவது அவசியமா?**

பெரும்பாலும் நடப்பதற்கென்று ஒரு நேரம் ஒதுக்குவது மிகவும் நல்லதாகும். எந்த ஒரு காரியத்தையும் நேரம் ஒதுக்கிச் செய்வதால் உடலும், உள்ளமும் அந்தக் குறிப்பிட்ட வேலைக்கு, குறிப்பிட்ட நேரத்திற்குத் தயாராகிவிடுகின்றன என்பது ஓர் அற்புதமான நிகழ்வாகும். காலையிலோ, மாலையிலோ உங்களுக்கு சௌகரியமான வகையில் நேரம் ஒதுக்கி நடந்துபாருங்களேன். குறிப்பிட்ட நேரத்தில், நாள்தோறும் நடந்தால், நடப்பது எளிதாகிவிடும். எனவே, நடைப்பயிற்சியைத் தொடங்க விரும்புபவர்கள் அதற்கென்று ஒருநேரத்தை ஒதுக்கி விடுவது அவசியமாகும்.

**தினமும் எவ்வளவு நேரம் நாம் நடக்க வேண்டும்?**

தினமும் எவ்வளவு நேரம் நடக்க வேண்டும் என்பது ஒருவருடைய உடல் நலத்தையும் மனநலத்தையும் பொறுத்ததாகும். பொதுவாக குறைந்த நேர அளவாக பத்து நிமிடங்களும், அதிகபட்ச அளவாக நாற்பது நிமிடங்களும் நடக்கலாம். உடல் நோயுற்றிருக்கும்போது, மருத்துவர்களின் ஆலோசனைப்படி நடைப்பயிற்சியை மேற்கொள்ளலாம். உங்களால் உடல், மனச்சோர்வு இல்லாமல் எவ்வளவு நேரம் நடக்க முடியுமோ அவ்வளவு நேரம் நடக்கலாம்.

**காலையில் நடப்பது நல்லதா? மாலையில் நப்பது நல்லதா?**

பொதுவாக காலையில் – விடியற் காலையில் நடப்பதுதான் நல்லது. அதிகாலையில், பிரம்ம முகூர்த்தத்தில் நடக்கின்றபொழுது உடலும், உள்ளமும் சுறுசுறுப்பாக இருக்கும். காலை வேளையில், இயற்கைச் சூழலில் உயிர்ச்சக்தி நிறைந்திருக்கும். இதயத்துடிப்பும், உடல்வெப்பமும் குறைந்திருக்கும். வாகனப் புகைகள், தூசிகள் குறைந்து இருக்கும். ஆனால், மாலையில் நடப்பது என்றால், வெப்பம் தணிந்த பிறகுதான் நடக்கவேண்டும்.

**தினமும் எவ்வளவு தூரம் நடக்க வேண்டும்?**

தினமும் எவ்வளவு தூரம் நடக்க வேண்டும் என்பது நடப்பவருடைய வயதையும், உடல் நலத்தின் நிலையையும் பொறுத்துத்தான் அமைகின்றது. பொதுவாக இளைஞர்கள் சுமார் ஆறு கிலோமீட்டர் தூரம் நடக்கலாம். வயதானவர்கள் சுமார் நான்கு கிலோமீட்டர் தூரம் நடக்கலாம். நோயாளிகள் மருத்துவரின் ஆலோசனைப்படி நடக்க வேண்டிய தூரத்தை முடிவு செய்யலாம். சுருக்கமாக கூறினால், உடலும், உள்ளமும் பாரமின்றி இதமாக நடக்கும் நடையாக இருந்தால் மகிழ்ச்சியாக இருக்கும் வரை நடக்கலாம்.

**எப்படிப்பட்ட இடங்களில் நாம் நடப்பது நல்லது?**

எல்லா இடங்களுமே நடக்க ஏற்ற இடங்கள்தான். நடக்க வேண்டும் என்ற மனம் தான் வேண்டும். எங்கு நடந்தாலும் நடைப்பயிற்சியின் பலன்கள் கிடைக்கத்தான் செய்யும். பொதுவாக, நடைபாதையின் இரு புறமும் மரங்கள் நிறைந்ததாக, சூரிய வெப்பம் நேரடியாக முகத்தில் படாத, போக்குவரத்து நெரிசல் அதிகம் இல்லாத, தூசிகள் அதிகம் இல்லாத, சத்தங்கள் அதிகம் கேட்காத, மேடுபள்ளங்கள் அதிகம் இல்லாத, கரடு முரடான கல், முள் இல்லாத சாலையாக, பாதையாக தேர்ந்தெடுத்து நடைப்பயிற்சியின் முழுப்பயனையும் அடையலாம்.

**நடப்பதற்கு முன் நாம் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் ஏதேனும் உள்ளதா?**

நடப்பதற்கு முன் சில விதிமுறைகளை நாம் தெரிந்து கொண்டால், நடைப்பயிற்சிக்குப் பின்னர் ஏற்படுகின்ற பல பிரச்சினைகளைத் தவிர்க்கலாம். பொதுவாக நடைப்பயிற்சியில் நடக்கும்போது எமது உடலின் பாரம் கணுக்கால்களுக்கு முன்புறம் இருக்க வேண்டும். குதிக்கால்களில் உடலின் பாரம் அழுத்தம் ஏற்படுத்தக்கூடாது. தாடையை உயர்த்திஎமது காதுகள், தோள்களுக்கு நேராக இருக்கும்படி தலையை வைத்துக் கொள்ளவேண்டும். கண்ணின் பார்வை நேராக இருக்க வேண்டும். தோள்கள் நன்கு உயர்ந்திருக்க வேண்டும். மார்பு, முன்பக்கம் சற்று உயர்ந்திருக்க வேண்டும். அடிவயிறு இறுக்கமாக சற்று உள்ளிருந்தபடி இருக்க வேண்டும். தோள்கள் தளர்ந்தும், விறைப்பாக இல்லாமலும் இருக்க வேண்டும். நடக்கும் பொழுது நிமிர்ந்த நிலையில் நடக்க வேண்டும்.

**நேரமே இல்லாதபோது நடைப்பயிற்சியை திட்டமிடுவது எப்படி?**

திட்டமிடப்படாத எந்த செயலும் வெற்றிகரமாக அமையாது. திட்டமிடப்படாவிட்டால் தொடர்ந்து நடைப் பயிற்சி செய்வது இயலாத காரியம். எனவே, முதலில் எமது உடல் நலத்தின் தன்மையை நன்கு அறிந்து கொள்ள வேண்டும். நோயின் அறிகுறி, இரத்த ஓட்டம், நாடித்துடிப்பு பற்றி தெரிந்து கொள்ளுதல் வேண்டும். எம்மால் எவ்வளவு நேரம், எவ்வளவு தூரம்? நடக்கமுடியும் என்பதைக் கண்டுபிடிக்கவேண்டும். முதலில் 15 நிமிடங்கள் மட்டும் நடந்து பாருங்கள். அவ்வாறு நடக்கும்பொழுது உடலின் நிலையை கவனித்துப்பாருங்கள். நடப்பதில் எந்தச் சிக்கலும் சிரமும் இல்லை என்றால் நடக்கின்ற நேரத்தையும் தூரத்தையும் கூட்டிக் கொள்ளலாம். எவ்வளவு நேரம் நடக்க வேண்டும்? எப்பொழுது நடக்க வேண்டும்? எங்கு நடக்க வேண்டும்? எவ்வளவு தூரம் நடக்க வேண்டும்? என்பவற்றை எல்லாம் மனதில் கொண்டு, திட்டமிட்ட உங்கள் நடைப்பயிசியைத் தொடங்குங்கள்.

**நடைப்பயிற்சியில் தண்ணீர் அதிகம் அருந்தலாமா?**

நடைப்பயிற்சியின்போது நிறைய வியர்வை வெளியேறுகிறது. அதனால் நடைப்பயிற்சியை முடித்த பின்னர் அதிக தாகம் எடுக்கும். ஆனால், நடைப்பயிற்சியை முடித்தவுடன் தண்ணீர் அருந்தக்கூடாது. 10 நிமிடங்களுக்குப் பிறகு அருந்தலாம். நடைப்பயிற்சி செய்தவுடன், உடல் வெப்பமாக இருக்கும். உடனே தண்ணீர் அருந்தினால் உடல் பாதிக்கப்படும். சிலருக்கு உடனே ஜலதோசம் பிடித்து சளி கட்டும். வெந்நீர் குடிப்பதாக இருந்தாலும் நடைப்பயிற்சியை முடித்து பத்து நிமிடங்கள் ஓய்விற்குப் பிறகுதான் அருந்த வேண்டும்.

**உடல்நலக் குறைவாக இருக்கும்போது நடைப்பயிற்சி செய்யலாமா?**

உடல் நலக்குறைவாக இருக்கும் போது நடைப்பயிற்சி செய்யலாம். மருத்துவரின் ஆலோசனைப்படி, நேரம், தூரத்தை நீங்கள் நிர்ணயத்துக் கொள்ளலாம். வெளியே, சாலைகளுக்குச்சென்றுதான் நடைப்பயிற்சி செய்யவேண்டுமென்று கட்டாயம் இல்லை. வீட்டிற்குள்லேயே, ஓர் அறையில் நடக்கலாம். உங்கள் வீட்டுத் தோட்டத்தில் நடக்கலாம். மொட்டை மாடியில் நடக்கலாம். மெதுவாக, இதமாக நடக்கும்போது உடலும், உள்ளமும் பாரமின்றி மகிழ்ச்சியாக இருக்கும். கவலைகளும், மன அழுத்தங்களும் நீங்கும் நல்ல தூக்கம் வரும்.

**நடைப்பயிற்சிக்கு முன் முட்டை, பால், பழம் உண்ணலாமா?**

கண்டிப்பாக கூடாது! நடைப்பயிற்சிக்குமுன் ஒன்றும் உண்ணக்கூடாது. வயிற்றை பெரும்பாலும் வெறுமையாகத்தான் வைத்திருக்கவேண்டும். மிகவும் சோர்வுள்ளவர்கள் மட்டுமே அரை மணிக்கு முன்பு பால் அல்லது ஜூஸ் சாப்பிடலாம். ஏனென்றால், பழம், முட்டை போன்றவை ஜீரணமாக மூன்று மணி நேரமாகும்! உண்ட பொருள் இரப்பையிலேயே இருக்குமாதலால், நடைப்பயிற்சியைச் செய்யும்போது அஜீரணமும், அதன் தொடர்பாக வயிற்றுவலியும் ஏற்படலாம். நாம் எதைச் சாப்பிட்டாலும், அதை ஜீரணிக்க வயிற்றில் அமிலங்கள் சுரக்கின்றன. இரத்த ஓட்டம், வயிற்றிலேயே அதிகம் இருக்கும். உடலின் மற்ற பாகங்களுக்குச் செல்வதில் தடை ஏற்படும். இதனால்தான் சாப்பிட்டவுடன் எந்த வேலையும் செய்யக்கூடாது. கொஞ்சம் ஓய்வு எடுக்கவேண்டும். அதனால்,லேசான வயிற்றுடன் நடைப்பயிற்சி செய்தால் நல்லது!

**நடைப்பயிற்சிக்கு முன் கோப்பி, டீ கொக்காகோலா அருந்தலாமா?**


கூடாது. கோப்பி, டீபோன்றஎந்தப்பானமுமே எமக்குத் தேவையில்லாத ஒன்று. கோப்பியில் ''கொபின்'' என்பதும், டீயில் ''டானிக்'' என்ற நச்சுப் பொருளும் உள்ளன. கொக்கா கோலாவில் தியோப்ரேமைன், அசிட் ஆகியவை உள்ளன. இவையாவும் நரம்பைத் தூண்டிவிட்டுப் பசியை அடைத்துவிடும். நரம்புத் தளர்ச்சி யை உண்டாக்கும். எனவே, மற்றவர்களுக்காகவும், பழக்கத்தினாலும் பருக வேண்டும் என்பதையெல்லாம் விட்டு விடுங்கள். அதுவும், வெறும் வயிற்றில் கண்டிப்பாக பருகக் கூடாது.

**நடைப்பயிற்சியினால் உடல் அழகு பெறுமா?**

நடைப்பயிற்சியினால் உடல் அமைப்பும் அழகு பெறும். முதுகுக்கூன் கண்டிப்பாக நிமிர்ந்து விடும். நெஞ்சு நிமிரும். பார்வை நேர்படும். இடுப்புச் சதைகள் குறையும். தொப்பை கரையும். இந்த மாற்றங்களினால் உங்கள் உடல் அழகு பெறும். மேலும், உள் உறுப்புக்கள் வலிமை பெறும். நடைப்பயிற்சியினால் உடல் கயிறு போல உறுதியாகவும் வளையக்கூடியதாகவும் இருக்கும் அதனால் நோயின்றி நீண்டநாள் உடல் நலத்துடன் வாழலாம்.

**நீண்ட கால ஆரோக்கியத்திற்கு தேவையான உடற்பயிற்சி எது?**

சந்தேகமில்லாமல் நடைப்பயிற்சி தான்! நாம் நடக்கும்போது, பிராண வாயு எல்லாத் திசைகளிலும் இருந்து கிடைக்கிறது. இரத்தக் குழாய்கள் நன்றாகச் செயற்படுகின்றன. திசுக்களுக்கு பிராண வாயு நிறையக் கிடைக்கின்றது. கால்களின் தசைக்கு தாங்கு சக்தி கிடைக்கின்றது. முதுகு வலி, நீரிழிவு நோய், கொலஸ்ட்ரோல், மூச்சு சம்பந்தப்பட்ட நோய்கள், மூட்டு வலி, வெரிகோஸ்வெயின்ஸ் என்ற கால்வலி, எலும்பு பலவீனம் முதலிய உடல் நோய்கள் நடைப்பயிற்சியால் குறைந்து நீண்டகால ஆரோக்கியத்திற்கு உதவுகின்றது.



**நடப்பது நல்லதா? ஓடுவது நல்லதா?**

நடப்பது நல்லாதா, ஓடுவது நல்லதா என்பது அவரவர்கள் உடல் நிலை மற்றும் நேர வசதியைப் பொறுத்ததாகும். இரண்டுமே எமது ஆயுளைக்கூட்டுகின்றன. நடைப்பயிற்சி எல்லோராலும் செய்யக்கூடிய பயிற்சியாகும். ஆனால், ஓடுவது என்பது எல்லோராலும் செய்யக்கூடிய காரியம் அல்லவே! மேலும் நடப்பவர்களைவிட ஓடுபவர்களுக்கு கீழே விழுந்து காயப்படுகின்ற வாய்ப்பு அதிகம். நடைப்பயிற்சி எளிமையானது. காலணிகள் இல்லாமலே நடைபயிலலாம். சௌகரியமானது. சுலபமாகத் தொடங்கலாம். நினைத்தவுடன் நடக்கலாம். நீண்டகாலத்திற்குத் தொடரலாம். மேலும், நடைப்பயிற்சியில் வேக நடையில் நன்கு பயிற்சி பெற்ற பின் தான் ஓட முடியும் என்பதை மறந்துவிடாதீர்கள்.

**நடைப்பயிற்சியை நடுவில் விட்டு விட்டுத் தொடரலாமா? அதனால் தீமை உண்டாகுமா?**

கண்டிப்பாக தொடரலாம். நடைப் பயிற்சியை நடுவில் விட்டு விட்டுத் தொடர்வதால் கெடுதல் எதுவும் நேராது. உடல் வேண்டுமானால் கொஞ்சம் குண்டாகலாம். ஆனால், நடைப்பயிற்சியை மீண்டும் தொடர்வதால் தீமை வராது. எப்படியாவது இடையில் விட்டப் பயிற்சியைத் தொடருவது வரவேற்கத் தக்கதாகும்.

**நடைப்பயிற்சிக்கு காலணிகள் தேவையா?**

பொதுவாக காலணி அணியாமல் வெறுங்காலினால் நடக்கும்போது அக்குபஞ்சர் தத்துவத்தின் மூலம் நிறைய மருத்துவ பலன்களைப் பெறுகிறோம். கிராமங்களில் கூட வெறும் செருப்பு, சப்பாத்து எதுவும் அணிவதில்லை. வெறுங்காலுடன் நடப்பதால் பல வியாதிகள் குணம் அடைகின்றன. நாம் நடக்கும் பாதை சுத்தமானதாக, கல், முள் இல்லாமல் இருந்தால் தாராளமாக வெறுங்கால்களால் நடக்கலாம். ஆனால், வேக நடை பயிலுபவர்கள் கண்டிப்பாக காலணிகள் அணிந்தால்தான் நிர்ணயிக்கப்பட்ட தூரத்தை குறிப்பிட்ட நேரத்தில் அடைய முடியும்.

**நடைப்பயிற்சிக்குத் தேவையான காலணிகளை எவ்வாறு தேர்ந்தெடுக்க வேண்டும்?**

நடைப்பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கும் காலணி, அழுத்தமாகப் பாதத்தை ஊன்றி நடப்பதற்கு ஏதுவாக இருக்கவேண்டும். தோலிலான காலணிகள் சிறந்தவை. றப்பர் காலணிகளை அணிந்தால் பாதங்களை அழுத்தி ஊன்ற முடியாது, பொதுவாக டென்னிஸ் சப்பாத்து மிகவும் இதமாக இருக்கும். இதனை போடுவதற்கு விரும்பாதவர்கள் குதிகாலை வார்மூலம் இணைக்கும் காலணிகளைப் பயன்படுத்தலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## மசாலா மிக்ஸ்

# குரங்கு வருடத்தை வரவேற்கும் சீனா




சீனாவின் வருடங்களை மிருகங்களின் பெயர் சொல்லி அழைப்பார்கள். இதன் அடிப்படையில் எதிர் வரும் 22ஆம் திகதி மலரும் சீனாவின் புதிய வருடம் குரங்கு வருடம் ஆகும். குரங்கு வருடத்தை வரவேற்க சீனா தயாராகிவிட்டது. சீனாவிலுள்ள மிருகக் காட்சிச் சாலைகளில் வாழும் குரங்குகளுக்கு ராஜ உபசாரம் நடக்கிறது. குவாங்டொங் மாநில மிருகக் காட்சிச் சாலையிலுள்ள சிம்பான்ஸி குரங்கு சறுக்கி விளையாடி சாகசம் செய்யும் காட்சி.

# வாஜ்பாயின் 'கட்அவுட்' கூறும் செய்தி என்ன?



இந்தியாவில் விரைவில் பொதுத் தேர்தல் நடைபெறும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதனால், பிரதமர் வாஜ்பாயின் 'கட்அவுட்' படங்களையே எங்கும் காணக்கூடியதாக இருக்கிறது. ஹைதராபாத்தில் பாரதியஜனதா கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் களை கட்டத் தொடங்கிவிட்டன. வாஜ்பாயின் 'கட்அவுட்' ஒன்றில் குண்டு வைக்கப்பட்டிருக்கிறதா என்பதை நாயை முகர வைத்துப் பரிசோதனை நடத்துகிறார் இந்தப் பொலிஸ்காரர்.

# விசர் நோய் வந்தும் மாடுகள் தப்பவில்லை



ஐரோப்பிய நாடுகளில் மாடுகளுக்கு விசர் நோய் ஏற்பட்டு ஆயிரக்கணக்கான மாடுகள் அழிந்துபோய் விட்டன. சில மாடுகளே தப்பின மாட்டிறைச்சி விற்பனை தடை செய்யப்பட்டுள்ளதால் கோடிக்கணக்கான ரூபா நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இருப்பினும் ஜெர்மனியில் 680 மாடுகளுக்கு விசர் நோய் வந்தும் அவற்றில் ஒன்றாவது தப்பவில்லை. காரணம் வெளியில் தெரியாமல் அந்த மாடுகளை வெட்டி இறைச்சிக் கடைகளுக்கு அனுப்பிவிட்டார்களாம்.

# பனியில் உறைந்து போய் நகரமறுக்கும் கார்கள்



சிக்காக்கோவில் வரலாறு காணாத அளவுக்கு இம்முறை பனிமழை பெய்கிறது. வீதிகள் தோறும் பனிப்படலங்கள்தான். வீதியில் செல்லும் கார்கள் பனியில் உறைந்து போய் நகர மறுக்கின்றன. ஆயினும், ஒருவர் துணிவுடன் நடந்து செல்கிறார். அவருக்கு தான் பனியில் உறைந்து போய்விட மாட்டேனா என்ற அச்சம் ஏற்படவில்லைபோலும்.

# முதுமையை விரட்ட குளிர்பியர் வந்தது!



பியர் மதுவுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நாடு ஜெர்மனி ஆகும். அண்மையில் முதுமையை விரட்டும் பியர் வகை ஒன்றை ஜெர்மனியில் தயாரித்திருக்கிறார்கள். விற்றமின் மற்றும் மினரல் சத்துகள் நிறைந்த இந்தக் குளிர் பியரை சுவைத்து மகிழ்கிறார் இந்த அழகி. மியூனிக் நகரில் நடக்கும் பியர்கள் கண்காட்சியில் இம்முறை இந்தப் பியருக்கு அமோக வரவேற்புதான்.

# ஒளிந்திருக்கும் முகம் எது?



டிசெம்பர் 21, சுடர் ஒளி மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம் நடிகர் ஆனந்தபாபுவினுடையது. சரியான விடையைக் கண்டுபிடித்து எழுதி அனுப்பிய வாசகர்களில் ஐந்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விவரம் வருமாறு:

*1.க.மயூரன், மட்டக்களப்பு. 2. கே.கபில்சன்,ஆஸ்பத்திரி வீதி,இணுவில். 3. தி.முருகவேள், சம்பியன் வீதி, கொக்குவில். 4.ஜெ. தங்கா, தபால் கந்தோர் வீதி, கோப்பாய். 5. மு.திருமுருகன், தெல்லிப்பளை.*

சரியான விடையைக் கண்டுபிடித்து எழுதி அனுப்பிய வாசகர்கள் அனைவருக்கும் பாராட்டுக்கள். அதிர்ஷ்டசாலிகளுக்கு எமது வாழ்த்துக்கள்.

இந்த வாரம் பிரசுரமாகியிருக்கும் இந்த உருவம் யாருடையது?

ஏழுநிறங்களுக்கும் சொந்தமான படத்தில் அறிமுகமாகி, பின்பு பிரபலமான நடிகர்களுடன் நடித்துள்ளார். தற்போது இவர் நடித்த புதிய பட வரவுக்காக ரசிகர்கள் காத்திருக்கின்றார்கள்



இந்த முகத்திற்குரிய நடிகரைக் கண்டுபிடித்து, அவர் பெயரைத் தபால் அட்டையில் எழுதி பின்வரும் எங்கள் புதிய முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லி மாராய்ச்சி மாவத்தை,
கொழும்பு - 14.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச் சீரழிவின் காரணிகள்

# கண்டும் காணாதது போல் அதிகாரிகள்

மலையகத்தில் கல்வி வளர்ச்சி அடைய வேண்டும். போதிய ஆசிரியர்கள் நியமிக்கப் படவேண்டும். தேவையான மூலவளங்கள் வழங்கப்பட வேண்டும்.

இப்படி ஒரு பக்கத்தில் குரல் எழுப்புகின்றோம்.

அதே வேளை, தரம் கெட்ட ஆசிரியரை இடமாற்றம்செய், படிப்பிப்பது பாடசாலைப் பாடமா? இல்லை பள்ளிப் பாடமா? இவர்களை நம்பி எப்படி வயது வந்த எமது பெண் பிள்ளைகளை அனுப்புவது? சமுதாயத்துக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டியவர்கள் சமூகத்து வேசிகளாக மாறலாமா? என்று பெற்றோரும் பழைய மாணவர்களும் நலன் விரும்பிகளும் ஆவேசக்குரல் எழுப்புகின்றார்கள். அண்மையில் இடம் பெற்ற பல சம்பவங்களை அவதானிக்கும் போது இந்த ஆவேசக் குரல்களும் நியாயமானவையாகத் தான் இருக்கின்றன.

மாதா பிதா குரு தெய்வம் என்று கடவுளுக்கும் முந்திய இடத்தில் ஆசிரியர்கள் வைத்துப் போற்றப்படுகின்றனர்.

ஆனால் ''குலத்துக்கு ஈனம் கோடரிக் காம்பு'' என்பது போல், சில ஆசிரியர்கள் செய்யும் கீழ்த்தரமான செயல்களினால் ஆசிரிய சமுதாயமே வெட்கித்தலை குனிய வேண்டியாகிவிட்டது.

ஆனால் பல ஆசிரியர்கள் கை எடுத்துக் கும்பிடும் அளவுக்கு மரியாதை பெற்றுள்ளனர் . இப்படியான இந்த ஆசிரியர்களினால் தான் இன்னும் ஓரளவாவது ஆசிரியர்கள் மதிக்கப் படுகின்றனர்.

மத்திய மாகாணத்தில் அண்மைக் காலங்களில் எழுப்பப்படும் தொடரான குற்றச்சாட்டுகள் ஆசிரியர்களும் மாணவர்களும் சேர்ந்து புகைப்படம். பிடிக்கின்றனர், ஒன்றாக அமர்ந்து புளூ பிலிம் பார்க்கின்றனர், மனதில் போதை ஏற்பட்டவுடன், உடலுக்கு போதை ஏற்ற தண்ணி அடிக்கின்றனர். என்பவையே . கேட்டால், இந்த வருடத்துடன் பாடசாலையை விட்டுப் போகின்றவர்கள் தானே! என ஆசிரியர்கள் சமாதானம் கூறுகின்றனர்.

மேலதிக வகுப்பு என்ற போர்வையில் மாணவிகளை அழைத்து மயக்குகின்றனர். இவர்களின் கபடப் பேச்சில் மயங்கும் மாணவிகள் அசக்தி முகரப்படுகின்றனர்.

பிறந்த நாள் என்று அழைத்து குளிர்பானத்துடன் போதை கலந்து கொடுத்து, ஆபாசப் படம் பிடித்து, பிளாக் மெயில் பண்ணுகின்றனர்.

வெட்கத்துக்கும் அவமானத்துக்கும் அஞ்சி இவற்றை வெளியே சொல்வதில்லை மாணவிகள். வெதும்பித் தவிக்கின்றனர்.

சில மாணவிகள் தற்கொலை முயற்சிகளிலும் ஈடுபட்டு காப்பாற்றப்பட்டுள்ளனர்.

அப்போதே விடயம் அம்பலமாகின்றது.

பொலிஸாரிடம் சென்றால் கௌரவம் கப்பலேறிவிடும் என்று தயங்குகின்றனர். கல்வி அதிகாரிகளிடம் சென்றால் அவர்கள் சாட்சி கேட்கின்றார்கள். இவை எல்லாம் சாட்சிகளை வைத்துக் கொண்டு செய்கின்ற காரியமா?

கல்வி அதிகாரிகளுக்கும் இந்த விடயங்கள் தெரியும். புரியும். ஆனால் கண்டும் காணமல் இருப்பதுதான் வேதனை. இந்த நிலை தொடர்ந்தால் இந்த மலையக ஆசிரியர்களே மலையகக் கல்வியை குழி தோண்டிப் புதைத்து விடுவார்கள் என்பது உறுதி. இவை எல்லாம் ஆசிரியர்களைப் பற்றியது.

ஒரு சில ஆசிரியர்கள் சினிமா நடிகர்களைப் போன்று அழகு ராணிப் போட்டிக்குப் போவது போல் பாடசாலைக்கு வருகின்றனர்.

முன் வெட்டு, பின் வெட்டு என ஜன்னல் வைத்த பிளவுஸ், அப்பர் கட், லோஹிப் என அடி வயிறு தெரிய சாறிகள். தமது உடலின் வளைவு, நெளிவுகளை அப்பட்டமாக காட்டும் வகையில் , இவர்கள் வருகின்றனர். இவை வயது வந்த மாணவர்கள் மத்தியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி விடுகின்றன.

சினிமாப்படங்களில் வரும் கவர்ச்சி கதாநாயகிகளின் அங்கங்களுடன் தமது ஆசிரியைகளின் அங்கங்களை ஒப்பிட்டு புள்ளிபோடுகின்றனர். அங்கங்களை வர்ணிப்பதில் கம்பனையும் மிஞ்சிவிடுகின்றனர்.தாய்க்குச் சமமானவர்கள் இப்படி மாணவர்களின் மனங்களைத் தடுமாற வைக்கலாமா?

படிப்பிப்பது மட்டும்தான் இவர்களின் கடமையா? கண்ணியத்துடன் வாழவும் வழி காட்ட வேண்டாமா?

இதனை அப்பட்டமாகச் சொல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்டது. இதனை வாசிக்கும் கௌரமான குடும்பங்களின் மனது வேதனைப்படுவதும் தெரிகின்றது. உங்களை வணங்குகின்றோம். கௌரவிக்கின்றோம். உங்கள் சேவைகளைப் பாராட்டுகின்றோம். ஆனால் ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி விஷம் போல் சிலர் அமைந்து விட்டனரே என்பது தான் கவலை. நல்லவர்கள் மன்னிக்கட்டும். மற்றவர்கள் திருந்தட்டும்.

அதே வேளை வேலியே பயிரை மேய்வது போல் கண்டும் காணாமல் இருக்கும் கல்வி அதிகாரிகளும் அமைச்சர்களும் கண்திறந்து பார்க்க வேண்டும்.

அரசியல் அடைக்கலம் அளித்து சமுதாயத்தை குட்டிச்சுவராக்காமல், வாழ வழி செய்யுங்கள். சாட்சிகளைத் தேடாமல் மனச் சாட்சியின் படி நடவடிக்கை எடுத்து மலையக சமுதாயத்தைக் காப்பாற்ற வேண்டும்.

—மலை நம்பி—




## சொல்லாதே இது இரகசியம்!

அட்டன் நகரையும் கொட்டகலையையும் இணைப்பது அந்த சுரங்கப் பாதை. அந்த சுரங்கத்துக்குள் அடிக்கடி கொலை கொள்ளை மற்றும் சட்ட விரோத செயல்கள் இடம் பெறுவது வழமை. இவற்றுக்கு முடிவு கட்டுவதற்காக அட்டன் பொலிஸ் அடிக்கடி ரோந்து நடத்துவதுண்டு.

அண்மையில் இப்படி ரோந்து சென்ற போது ஏதோ நிழலாட்டம் தெரிந்ததாம் உஷாரடைந்த பொலிஸார் டோச் லைட்டை அணைத்து விட்டு இருட்டில் அடி மேல் அடி வைத்து சென்று அங்கு நின்ற இருவரை மடக்கிப் பிடித்தனர்.

பிடிபட்டவர்கள் திருடர்கள் இல்லையாம் பிரபல பாடசாலை ஒன்றின் ஆசிரியர் ஒருவர் இரகசியமாக பள்ளிப்பாடம் சொல்லிக் கொண்டிருந்தாராம்.

கையும் களவுமாக பிடித்த பொலிஸாரிடம் 'நாங்கள் வயது வந்தவர்கள் சுயமாக விரும்பியே நடக்கின்றோம். பலாத்காரம் புரியவில்லை என்று விளக்கம் கொடுத்தாராம்.

ஆத்திரமடைந்த பொலிஸார் ஆசிரியரை நையப்புடைத்து விரட்டிவிட்டு மாணவியை பெற்றோரிடம் ஒப்டைத்தனராம். பிள்ளையின் எதிர் காலம் கெட்டுவிடும் என்பதால் இப்படி மனிதாபிமானத்துடன் செயல் படும் பொலிஸாரும் இருக்கத்தான் செய்கின்றார்கள். கோர்ட்டுக்குப் போயிருந்தால் சந்தி சிரித்திருக்கும் இல்லையா?



## டேஸ்ட்கடை தணிகாசலம்

தோட்டங்கள் தோறும் மார்கழி பஜனைகளை கட்டியுள்ளது. கோயில்களில் எல்லாம் பூஜைகளும், திருவிழாக்களும் அமர்களப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இந்த நேரத்தில் குருக்கள் ஐயா, ஏன் அவசரமாக வரச்சொல்லி ஆள்விட்டார் என்று யோசித்துக்கொண்டே தணிகாசலம் அண்ணன் கோயிலுக்கு வந்தார்.

கோயில் தலைவாசலிலேயே குருக்கள் ஐயா நினறார்.

''வணக்கம் ஐயா''

''வணக்கம் தணி அண்ணன் வாங்கோ!'' என்று குருக்கள் ஐயா வரவேற்றார்.

''ஐயா ஏதோ அவசரமாக வரச் சொன்னதாக பையன் வந்து சொன்னான்.....''

''இப்படி வாங்க கொஞ்சம் குந்தி இருந்து பேசுவோம்'' என்று கூறி தனி அண்ணரையும் அழைத்துக் கொண்டுபோய் வசந்த மண்டபத்துக்கு முன் அமர்ந்து கொண்டார் குருக்கள்.''பாருங்க தணி அண்ணன் ஊர் ரெண்டுபட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம் என்ற கதையாகிவிட்டது, நம்ம கோயில் விசயம்.''

''என்னங்க ஐயா ஏதாவது பிரச்சினை ஏற்பட்டு விட்டதா? என்று பதற்றத்துடன் கேட்டார் தணி அண்ணன்.

''விபரீதமாக எதுவும் நடக்கவில்லை . ஆனால் அப்படி ஏதும் நடந்துவிடக்கூடாது என்றுதான் உங்களை அழைத்தேன்.''

''சொல்லுங்க ஐயா! என்னால் முடிஞ்சதைச் செய்வேன்''

''நிச்சயமாக உங்களால் மட்டும் தான் முடியும், அது தான் உங்களிடம் சொல்கிறேன்.''


''நான் என்னங்க ஐயா செய்யனும்''

''நம்ம கோயில் கட்டுறவிடயம் எவ்வளவு இழுபறியாக இருந்தது. ஏதோ அந்த அம்மன் அருளால் ஒருபடியாக கோயில் கட்டி முடிக்கப்பட்டு கும்பாபிஷேகம் முடிந்தது.''

''எப்படியோங்க ஐயா இந்த ஊர்மக்களின் உழைப்பாலும், ஊதியத்தாலும், கொடை வள்ளல்களின் உதவியுடனும் எல்லாம் சிறப்பாக முடிந்தது.''

''ஆமாம்! ஆனால் இப்ப கோயில் நிர்வாகம் மாறிப்போச்சு, அதுல பாதிப்பேர் இப்போது கோயிலுக்கு வருவதில்லை. பூசைகள் வைப்பதில்லை.''

''என்னங்க ஐயா இது? முன்பு பழைய நிர்வாகம் இருந்த போதும், எல்லாரும் போய் கலந்து கொண்டாங்க, பூசை வைத்தாங்க, யாரும் விலகிநிற்கவில்லையே. அதுக்கும் ஒரு பெருத்தன்மை வேணும்.''



''தணி அண்ணன் சொல்லுவதும் சரி தான். அதை இப்படியே விட்டுவிடலாமா? நீங்கள் தான் கோயிலுக்கு வராதவர்களிடம் போய் பேசி, எல்லோரையும் வரப்பண்ண வேண்டும்.''

''ஐயா நல்லாத்தான் சொல்லுறீங்க. ஒரு குடும்பத்தில் ஒரு பிரச்சினை ஏற்பட்டால் கட்டாயம் போய் பேசி சமாதானப் படுத்தத் தான் வேண்டும். ஒன்று சேர்த்து வைக்க வேண்டும். ஆனால் கோயிலுக்கு வராதவர்கள் பற்றி யாருடன் பேசி சமாதானப்படுத்துவது என்று தான் யோசிக்கிறேன்.''

''நீங்கள் சொல்றதும் சரி தான். அதை நான் மறுக்கவில்லை என்றாலும் நீங்கள் மனசு வைத்தால் எல்லாம் முடியும்''.

''ஐயா நிர்வாகம் பண்ணுறவங்க பெரியவங்களோ, சின்னவங்களோ. இந்த கோயிலுக்கு வாரவங்களை, ஏதாவது தரக்குறைவாக அல்லது மதிக்காமல் பேசி இருக்காங்களா?

''அப்படி எல்லாம் ஒன்றும் இல்லை. இவர்கள் சேவை செய்வதோடு சரி எதிலும் தலையிடுவது இல்லை.''

''இப்ப பாருங்க ஐயா யாருக்கும் சாமி கிட்ட கோபம் இல்லை. சாமிகிட்ட கோபம் இருந்தால் ஏதாவது பிராயச்சித்தமாக அது இது என்று நடத்தி நன்மை பண்ணலாம். ஆனால், கோயிலுக்கே வராமல் ஒதுங்கி இருப்பவர்களிடம் எப்படி போய் அழைப்பது? இந்த மாரி ஆத்தாவே அவர்கள் மனதை மாற்றி கோயிலுக்கு வரப்பண்ணட்டும். அதுக்காக பிரார்த்திப்போம்.''

''தணி அண்ணன் சொல்வதும் சரிதான். மனிதன் நினைப்பதை கடவுள் தட்டி விடுவார். மனிதனால் முடியாது என்பதை கடவுள் செய்து காட்டுவார். எல்லாம் அம்மாள் அருள்.''

''அது தாங்க ஐயா என்னோட பிரார்த்தனையும்.''

''நல்லது தணி அண்ணன் எல்லா வேலைகளையும் போட்டுவிட்டு, கூப்பிட்டவுடன் வந்தீட்டிங்க கடவுள் உங்களை ஆசீர்வதிப்பார்.'' என்று கூறி குருக்கள் ஐயா திருநீறு கொடுத்தார்.

தணி அண்ணன் பணிவுடன் திருநீற்றை பூசிக் கொண்டு குருக்களிடமிருந்து விடை பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்

# உளவு சொல்லும் செல்போன்...!

உலகளவில் தொழில்நுட்பம் இன்று நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்கு வளர்ந்து கொண்டிருக்கிறது. அமெரிக்காவில், பிரிட்டனில் சென்று கொண்டிருக்கும் இலங்கையர் ஒருவருக்கு, அவர் செல்ல வேண்டிய இடம் தெரியவில்லை என்றால் பதற்றப்பட வேண்டியதில்லை. அதற்காக வந்தது தான் கோல் சென்டர் (Call Center). அங்கு வழி தெரியாமல் சிக்கிக் கொண்டவர்கள் உதவி அழுத்தியை (Help Button) பயன்படுத்தி தொடர்பு கொண்டால், அங்கிருந்து சமிக்ஞை இலங்கையில் செயல்படும் கோல் சென்ரருக்கு வரும். இங்கு பணியில் இருப்பவர் அந்த நபருக்கு இங்கிருந்து கொண்டே வழிகாட்டுவார்.

இப்படி உலகில் இன்று நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்கு அற்புதங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. தற்போது செல்போனிலும் புரட்சிகர மாற்றங்கள் நடந்து வருகின்றன. போட்டி அதிகரித்து விட்டதால் ஏதாவது புதுமையைப் புகுத்தினால்தான் விற்பனையில் நிலைத்து நிற்க முடியும் என்ற உந்துதல் தான் புதுமைக்கு அடி வகுக்கிறது.

தற்போது அமெரிக்காவில் தங்கள் வீட்டுப் பிள்ளைகள் எங்கு இருந்தாலும் அதுபற்றி பெற்றோர் சிறிதளவாவது கவலைப்படுவதில்லை. தங்களது குழந்தைகளுக்கும் செல்போன் வாங்கிக் கொடுத்து விடுகின்றனர். குழந்தைகளின் கையில் 'செல்போன்' இருக்கும் போது பெற்றோரை விட்டு தனிமையில் இருப்பதைப் குழந்தைகள் உணருவதில்லை. குழந்தைகள் எங்கு இருக்கின்றனர் என்பதை அவ்வப்போது 'செல்போன்' மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. இதனால், குழந்தைகள் வீட்டைவீட்டுவெளியே போய்விட்டால் பெற்றோர் வருத்தப்பட வேண்டியதில்லை.



அந்த வகையில் தான் இந்தப் புதுமை.

அமெரிக்காவில் மான்ஹாட்டனில் தோழிகளுடன் ஷொப்பிங் முடித்துவிட்டு 15 வயதுடைய பிரிட்னி லுட்ஸ் நியூயோர்க்கில் உள்ள ஆர்மாங்க் என்ற இடத்திற்கு ரயிலில் வந்து கொண்டிருந்தார். தனது தந்தை தன்னை பின் தொடர்கிறார் என்பது இவருக்கு நன்றாகத் தெரியும். அதனால், அடக்க ஒடுக்கத்துடன் நடந்து கொள்கிறார்.

சமீபத்தில் பிரிட்னியின் தந்தை தனது இரண்டு மகள்களுக்கும் செல் போன் வாங்கிக் கொடுத்துவிட்டார். இவர்கள் வைத்துக் கொண்டிருக்கும் செல் போன்கள் இவர்கள் எந்த இடத்தில் இருக்கின்றனர் என்பதை கணினியின் உதவியுடன் காட்டிக் கொடுத்து விடும். கணினியைத் தட்டினால் அதில் பிரிட்னி எங்கிருக்கிறார் என்பதை வரைபடம் மூலம் அறிந்துகொள்ளலாம்.

தன் கையில் இருக்கும் செல்போன் திரை மூலம் கணினியில் வரைபடத்தை வரவழைத்து பிரிட்னி எங்கிருக்கிறார் என்பதை இவரது தந்தை அறிந்து கொள்கிறார். இப்படித் தான் மான்ஹாட்டனில் உள்ள சோஹோ மாவட்டத்தில் பிரிட்னி ஷொப்பிங் செய்துகொண்ருந்த போது பிரிட்னி எங்கிருக்கிறார் என்பதை இவரது தந்தை தெரிந்து கொண்டார்.

'யுலோகேட்' என்ற பெயரில் இந்தக் கருவி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. முன்பு, கைதிகளை கண்காணிக்கவும், படைவீரர்களின் இருப்பிடத்தையும் அறிந்து கொள்ளவும் பயன்படுத்தப் பட்ட இந்த தொழில்நுட்பம், தற்போது குடும்ப உறுப்பினர்களை அறிந்து கொள்ளும் அளவிற்கு வந்துவிட்டது.

செயற்கைக் கோள்களில் உள்ள கருவிகள் குறிப்பிட்ட செல்போன் எங்கிருக்கிறது என்பதைக் கண்டறியும்.

இந்தப்போனில் இருந்து அலைகள் உள்ளூரில் இருக்கும் செல்போன் வலையத்துக்கு செல்லும்.

அதன் மூலமே குறிப்பிட்ட நபர் எங்கிருக்கிறார் என்பதை கண்டறிய முடிகிறது.

பெற்றோர் தங்கள் கையில் இருக்கும் செல் போன் அல்லது இன்டர்நெட் உதவியுடன் தங்களது குழந்தை எங்கிருக்கின்றார் என்பது தொடர்பான வரைபடம் மற்றும் தகவல்களை கணினியின் உதவியுடன் பெற இத் தொழில் நுட்பம் உதவுகிறது.

இந்த செல்போனுக்கு ஒரு பக்கம் வரவேற்பு இருந்தாலும், மறுபக்கம் எதிர்ப்பும் உள்ளது. பெற்றோர் தங்களது குழந்தைகளை சுதந்திரமாக செயற்பட விடமாட்டார்கள், எப்போது சாப்பிடுகிறாய், எங்கே சாப்பிடப் போகிறாய், எப்போது சாப்பிட வேண்டும், எவ்வளவு வேகத்தில் வாகனத்தை ஓட்ட வேண்டும் போன்ற தொல்லைகளைக் கொடுப்பார்கள் என்று மன தத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர்.

2005ஆம் ஆண்டில் அமெரிக்காவில் நான்கு கோடியே 20 லட்சம் மக்கள் இந்த வகை செல் போன்களை வைத்திருப்பார்கள் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

---

# கவிதைப் பூங்கா

### தனிமை

வார்த்தைகளால் எனை விட்டு
நீ பிரிந்த போது
நிழல்களைக் கூட
நிஜங்களாக நினைத்ததுண்டு!
கனவுகளில் கூட —உன்
நினைவுகள்
வந்து சென்ற போது தான்
விழியறியாமலே
வழிகின்ற நீரால்—நானும்
மனநோயாளியென்று
உணர்ந்தேன்—இது
என்னைத் தவிர
யாருக்கும் தெரியாது.
ஏன் உனக்கும் கூட!

**எஸ். தீபன் அச்சுவேலி.**

### தலைகுனிவு

அன்று
திரௌபதி
மன்னர் சபைதனில்
துகிலுரியப்படுகையில்
மனம் கொதித்து
வெகுண்டெழுந்தவர்
எவருமில்லை.
இன்று
புடவைக் கடைதனில்
எம் மனதைக் கவர்ந்த
பொம்மை அழகி
எமக்காகத்
துகிலுரியப்படுகையில்
கூச்சத்தினால்
எம் தலை குனிகிறது.

**தமிழின் தோழி,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

### உன்னை சுவாசிக்கிறேன்

இதயத்து வேர்களில்
அன்பை
இனிதாய் வளர்த்தவளே
புன்னகைத்து — என்
மனதைப்
பறித்தவளே—உன்னை
சுமக்கும் என் நெஞ்சத்தை
தொட்டுச் சொல்கிறேன்.
என்னை மரணம் வந்து
அழைக்கும் வரை—நான்
உன் பெயரை
உச்சரிப்பேனே
தவிர இன்னொரு பெயர்
உச்சரிக்க மாட்டேன்.
உன்னையே
சுவாசித்திருப்பேன்.
ஏனெனில்என் சுவாசமே நீ
தானே?
நீ என்னை நேசித்திரு
நான் உன்னை
சுவாசித்திருப்பேன்.

### தமிழ்மகள்

அலையோசை அன்றாடம் அவளுக்கு
பூபாளம் பாடும்!
கவிஞன் எழுதாத கவிதைகளை
அவள் கண்கள் சொல்லும்!
காற்றுக்கு — அவள்
கருங்கூந்தல் தழுவ
எத்தனை ஆசை?
கடல் நீரில் முகம் நனைத்து
கதிரவன் திசை தொழுது
காரிருள் மறையும் பொழுதில்
கடலேறிப் போகிறாள்......
ஆம்! அவளும் அலைகடலில்
வலைவீசும் ஓர் தமிழ்மகள்.

எம்.எல்.மணிகண்டன், நயினாதீவு.

### தேடுகிறேன் உன்னை

எங்கோ ஒரு தொலைவில்
தொலைந்துவிட்ட இதயம்
. நிம்மதியற்றுத் தவிக்கிறது.
பொறுமையுடன் பூரித்திருந்த உறவை
புரட்டி விட்டனர் கயவர்.
ஆனாலும் சிதையாத காதலுக்கு
முற்றுப்புள்ளி இருக்கிறதல்லவா?
தேடுகிறேன் உன்னை பதிலுக்காய்.

**பு. மைதிலி திருநெல்வேலி.**

### திட்டம்

பூமியில் நான் பார்த்த
பெண்களில்
நீ மட்டும் மாற்றம்.
பிரமனின் சாதனைகள்
நிறைந்தது உன் தோற்றம்.
உனது முகமோ ஒரு வட்டம்.
அதில் நட்சத்திரங்களின் கூட்டம்.
இனி நீ போடுவது தான்
எனக்கு சட்டம்.
உன்னைத்தான் நான் படித்து
பெறப்போகிறேன் பட்டம்.
உன்னை அடைவதே என்
எதிர்காலத் திட்டம்

**வெ.ரெங்கநாதன்,**
**தெப்பட்டன்.**

### மின்னல்

மேகங்கள் முத்தமிட்ட போது
பிறந்த மின்சாரம்.

### எரிமலை

பொறுமையிழந்த பூமியின்
பொங்கிய நெருப்புக்
கொப்பளங்கள்.

### உயிர்

உணர்வுகளின்உச்சத்தில்
உருவான ஜனனம்.

**கி.திருவேணி**

### தியாகம்

என் இரவுகளை உனக்காய்
ஒவ்வொரு வினாடியும்
உருக்கிக் கொண்டிருக்கும்
காதல் தியாகியாக நான்...!
நீயோ இரவுகளை
விடியல்களாக்கி
விட்டில் பூச்சிகளாக
சுற்றித்திரிகின்றாய்
என் விழிகளில் படாமல்!

**க.நகுலேஸ்வரன்,**
**முள்ளியவளை.**

### ஆசை

கல்வீட்டில் கணிசமாய்
வாழ்பவனும்
மாளிகைக்காகவே
ஏங்குகின்றான்...
வானம் தெரியும் குடிசைகளும்
நம்மிடையே இருப்பதை
அவன் மறந்து விடுகிறான்!

**க.தர்சினி,**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**

### பயங்கரவாதி

நீ விட்டுச் சென்ற மூச்சு – என்
மேனி தடவிச் சென்ற போது
மீண்டும் ஒரு உலக யுத்தம்
மூண்டது போன்ற உணர்வு!
அன்பே!
அணு தேடித்திரியும்
அமெரிக்காவுக்கு
தெரியமுன் மறைத்து விடு
உன் காதல் குண்டை – என்
இதய அறையினுள்.
இல்லாவிட்டால்
நீயும் ஒரு பயங்கரவாதி.

**டி.கீத்து,**
**மீசாலை.**

### நீ இல்லையெனில்

உன்னை பார்த்திராவிடில்
மலை அருவிகளே
அழகென்றிருப்பேன்.
உன் கரம் தொட்டிராவிடில்
மலர்கள் மென்மை என
பட்டிமன்றம் செய்திருப்பேன்.
உன் இதயம் கிடைத்திராவிடில்
இதயத்திற்கு விலை கூறி
ஏலத்தில் விற்றிருப்பேன்.
உன்னுறவு இல்லையெனின்
ஊதாரி என ஊர்கூறிவிட
மொத்தத்தில் இங்கு நான்
மனிதனாயே இருந்திருக்கேன்!

**[illegible],**
**மிருசுவில், வடக்கு.**

### காத்திருக்கின்றேன் உனக்காக

இரவின் நிசப்தங்களில் உன்
இனிய குரல் இதயத்தில்
ஒலிக்கின்றது.
காரிருளிலும் உன் முகம்
காந்தளின் அழகைப் பெறுகின்றன.
நெரிசலின் மத்தியிலும்
உன்சுவாசக்காற்று
நெருடலாய் வந்து தீண்டுகின்றது.
காத்திருக்கின்றேன் உனக்காக
கல்லறைக் கதவு திறக்கும் வரை.

சி.துர்க்கா, யாழ்.பல்கலைக்கழகம்.

### உழவர்திருநாள்

தைபிறந்தது
வழி பிறந்தது
உழைக்கும் கரங்கள்
உழவில் தொடர்ந்தது.
வயல்கள் எங்கணும்
நெற்கதிர்கள் உதித்தது.
உலகில் வாழும் மாந்தர்கட்கு
பசிக்கும் நிலையை போக்கியது.
நன்றிக்கடனின் நன்னாளில்
உழவனுக்கு உதவிகள்
செய்வோம்
உழவர் திருநாள் என்றும் வாழ
சூரிய பகவானுக்கு துதிகள்
செய்து
போற்றி வழிபடுவோம்.

**விஸ்மிதன், முல்லையூர்.**

### பிரியக்கூடாது என்று

*அன்பே நான் இறைவனிடம்*
*வேண்டுவதெல்லாம்*
*நான் நன்றாக இருக்க வேண்டும்*
*என்றல்ல*
*நீ நன்றாக இருக்க வேண்டும்*
*என்றல்ல*
*நான் உன்னைப் பார்க்க வேண்டும்*
*என்றல்ல*
*நான் உன்னை அடைய வேண்டும்*
*என்றல்ல*
*நீ என்னை விட்டுப் பிரியக் கூடாது*
*என்று.*

### நினைக்கவில்லை

வைகறையே
வேண்டாமென்றுதான்
இரவை நான்
குத்தகை எடுத்து
காத்துக் கிடந்தேன்
கண்கள் மூடி.
நினைக்கவேயில்லை
அங்கேயும் என்னை
ஏமாற்றி வீட்டு
இமைகளாயும்
திருடுவாய் என்று.

**கு.நவசீலன்,**
**விசுவமடு.**

### கல்லாயே சமைந்து விடு

கல்லானஅகலியை
பெண்ணாக வைத்தவன் தான்
தன்னவளை என்ன செய்தான்?
வண்ணானின் மொழி கேட்டு
ராமனுமே
சோடை போனான்.
வேண்டாம்இனியும் ராமர்கள்
இப் பூமிதனில்....
சிதைப்புண்டு சிதறிடும்
இச் சீதைகள்
காடேக....
இனியும் வேண்டாம்
ராமர்கள்.
அன்றைய சீதை
அவள் திருமகளின்
அவதாரம்.
பூமாதேவி
தான் பிளந்து
உள்வாங்கி – அவள்
சோகம் தீர்த்தாள்.
ஆனால்....
நவீன இம்
மானுட சீதைகள்
பாவம்....
பிளப்பவை பூமியல்ல
அவரின்இளகிய
இளம் இதயங்களை
விதிவலக்காய்
கூறப்பட்ட
அவதார புருஷனுமே
தெய்வீகம்
இழக்கும் போது....
மானுட ராமர்கள்
எங்கே....?
எங்கே....?
மனிதத்தைக் காப்பார்கள்
கல்லாக இருப்பவர்கள்
கல்லாக இருக்கட்டும்.
பெண்ணாகி – நாளும்
துன்பப் பிரளயத்தில்
தவிப்பவை வேண்டாம்.
எமை....
கல்லாயே சமைத்துவீட
கௌதமருக்கழைப்பு விடு.

**ஜெ.பாலறஞ்சனி,**
**ஹட்டன்.**

### சிந்தனை

ஏழையின் விடிவிளக்கில்
தினமும்
தொகையற்று இறக்கின்ற
விட்டில்கள்

**மனம்**

இரு மலைகளுக்கிடையே
இருக்கும்
பள்ளத்தாக்கில் ஓடுகின்ற
ஓர்நதி.

**காமம்**

கற்பக காயத்தில் ஏறுகின்ற
கொடிய பானம்

**இதயம்**

நமக்காய் நாட்களெல்லாம்
துடிக்கின்ற கடிகாரம்.

**கற்பு**

காலத்திற்காய் காமத்தை
அடக்குகின்ற நாணயப்
பெண்.

**வி.தங்கதுபன்,**
**உடையார்கட்டு தெற்கு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'அருள்'
— ஜோதிகா, விக்ரம் —

# சூர்யாவின் காட்டில் அடைமழை



'செமாலி'
— கரீனா கபூர் —

காக்க.. காக்கவுக்குப் பின் அதே டீமுடன் இணைந்து சூர்யா நடிக்கும் சென்னையில் ஒரு மழைக்காலம் படத்தின் சூட்டிங் கடந்த 5ஆம் திகதி தொடங்கிவிட்டது.

காக்க.. காக்க டீம் அப்படியே மீண்டும் இணைந்து எடுக்கும் இந்தப் படத்தை இயக்குவது அதே கௌதம் தான். பாடல்கள் தாமரை. இசை ஹாரிஸ் ஜெயராஜ்.

இப்போது மணிரத்தினத்தின் ஆயுத எழுத்தில் படு பிஸியாக இருக்கும் சூர்யா, அதை முடித்தவுடன் இந்தப் படத்தில் முழு மூச்சாக இறங்குவாராம்.

ஆயுத எழுத்தில் சூர்யாவின் கெட்—அப்பை முழுமையாக மாற்றிவிட்டார் மணிரத்தினம். மீசையை மழித்துவிட்டு, ஒரு கண்ணாடியை மாட்டிவிட்டு ஆளை அசத்தலாக மாற்றி இருக்கிறார். சூர்யா, மாதவன், பாய்ஸ் சித்தார்த் ஆகியோர் இருந்தாலும் சூர்யாவுக்கே அதிக முக்கியத்துவம் தந்து படத்தை எடுத்து வருகிறார் மணிரத்னம்.

இது தவிர ஏ.வி.எம் தயாரிக்கும் படத்தில் கூனனாக சூர்யா நடிப்பது தெரிந்ததுதான். இந்தப் படத்துக்கு பேரழகன் என்று பெயர் சூட்டியிருக்கிறார்கள். ஜோதிகாவுடன் இதில் ஜோடி சேருகிறார் சூர்யா. இப்படத்தில் ஜோதிகாவுக்குத்தான் இரட்டை வேடம் என்றார்கள். இப்போது சூர்யாவுக்கும் இரட்டை வேடம் என்கிறார்கள்.

சூரியா ஒரு கரக்டர் கூனனாகவும் இன்னொரு கரக்டர் கல்லூரி மாணவனாகவும் செய்யப் போகிறாராம். அதேபோல ஜோதிகாவுக்கு ஒரு ரோல் பார்வையற்றவராகவும் இன்னொன்று கல்லூரி மாணவியாகவும் அமைக்கப்பட்டுள்ளதாம்.

மிக வித்தியாசமான கதை கொண்ட இப்படம் மலையாளத்தில் வசூலைக் கொட்டியதால் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. இசை யுவன் சங்கர் ராஜா.

இதன் படப்பிடிப்பு 26ஆம் திகதி தொடங்குகிறதாம். தமிழ்ப் புத்தாண்டுக்குப் படத்தை வெளியிடத்திட்டமிட்டிருக்கிறார்கள்.

இதுதவிர, இன்னொரு மெகா பட்ஜெட்டிலும் சூர்யா நடிக்க ஒப்புக்கொண்டிருப்பதால் 2004 ஆம் ஆண்டு முழுவதுமே அவரது கால்ஹிட் நிறைந்துவிட்டது என்கிறது அவருக்கு நெருக்கமான வட்டாரம்.

* * *

கமலுடன் 'விருமாண்டி' படத்தில் நடித்து முடித்த அபிராமி தற்போது கன்னடப்படத்தில் நடித்து வருகிறார். கன்னடத்தில் இரண்டு வேடங்களில் நடித்துக் கொண்டிருந்தபோது கமல் பட வாய்ப்பு கிடைத்ததால் கன்னட படத் தயாரிப்பாளர்களிடம் சூழ்நிலையை விளக்கி 'விருமாண்டி'யில் நடித்தவர் தற்போது நின்று போன இரண்டு படங்களையும் நடித்து வருகிறார். அதன் பிறகே மற்ற படங்கள் என தமிழில் கிடைத்த இரண்டு பட வாய்ப்புகளை மறுத்துள்ளார்.

* * *

நடிகை லைலா தெலுங்கில் நடித்த 'கைதி காடு' என்ற படம் தமிழில் 'கைதி' என்ற பெயரில் மொழி மாற்றம் செய்யப்பட்டு வெளியிடுகின்றனர். இதனால் கோபத்தில் இருக்கிறார் லைலா. அப்படி என்னதான் அதில் உள்ளது.

# சினி மி

- ஹரி இயக்கும் 'அருள்' படத்தில் விக்ரம் கரக்டர் பெயர்
- 'இயற்கை' படத்துக்காகப் புத்தாண்டு விழாக்களில் 2 வி
- ஒரு மாத காலமாக 'ஜனா' படத்துக்காக எர்ணாகுளத்தி
- ஸ்ரீகாந்த் நடிக்கும் 'வர்ணஜாலம்' படத்தில் இன்னுப் உள்ளது.
- 'என்னவோ புடிச்சிருக்கு', 'காதல் ஜெயம்' அதைத் தவிர வருகிறார் 'காதல் கொண்டேன்' சுதீப்.
- 'கள்ளான்' படத்தில் தனுஷ் ஜோடியாக புதுமுகம் நடிக்
- 'ராம்' படத்துக்காக ஹிப்பி தலை, காதில் வளை மாற்றியுள்ளார் 'ஆசை ஆசையாய்' ஜீவா.
- தன்னுடைய முதல் படமான (பெப்ஸி) 'உள்ளம் ரொம்பவே வருத்தத்தில் உள்ளார் 'ஜேஜே' பூஜா.

* * *

தமிழில் மன்மதராசா மூலம் புகழ்பெற்ற சாயாசிங் மலை
தமிழில் 'கவிதை', 'துளி துளியாய்' படங்களில் நடித்
நிகழ்ச்சிக்காக இலங்கை வந்து திரும்பியவர். தமிழ்
இலங்கையைப் பற்றியே மெச்சிப் பேசுகிறாரம்.

* * *

தாஜ்மஹால் ரியா சென்னை ஞாபகம் இருக்கிறதா? இப்
பாகங்களை ஏற்றிய பின்னர் பாலிவூட்டில் ஒரு ரவுண்ட
நடிக்கும் 'அரசாட்சி' படத்தில் ஒரு டான்ஸ் போட்டிருக்

* * *

'குத்து'வில் ஒரு பாடலுக்கு 'கூத்து' போடுகிறார் ரம்யா
லாரி என்கிற தெலுங்கு வில்லனைத் தமிழுக்குக்
வெங்கடேஷ்.

## சிம்பு - ஜோதிகா

சிம்பு—ஜோதிகா நடிக்கும் மன்மதன் படத்தில் ஜோதிகா
கும்படி சிம்பு கோரியதால் படப்பிடிப்பு ரத்தாகும் அளவுக்குப்
காரணம். ஒரு. வல்லுறவுக் காட்சி. சிம்பு, கதை, தி
'மன்மதன்' படப்பிடிப்பில் ஒரு வல்லுறவுக் காட்சி அதிலு
ஜோதிகாவும் புரள வேண்டும்.

காட்சிக்கான எல்லா ஏற்பாடுகளும் தயார் நிலையில் ஒத்
ஜோவும் எந்த கெடுபிடியும் இல்லாமல் நடிக்க தயாராகிக்

இந்தச் சமயம் தனது
சந்திக்க விக்ரம் அங்கு
ஜோதிகாதான் நாயகி)
இப்போதெல்லாம்
மொனிட்டரில் பார்த்து
செய்யும் வழக்கம் இருக்
இதன்படி மொனிட்
கொண்டிருந்தது. விக்ரம்
அந்தக் காட்சி விக்ர
னவோ உடனே
விடம் விஷ
ன ா ன

'அரு
வந்
ஃபி
க
கி
டரில்
அதை
மிற்கு
ஜோதி
யத்தைச்
சூர்ய



'மன்மதன்'
சிம்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மினி

கரக்டர் பெயர் பீளமேடு அருள்.
ாக்களில் 2 விருதுகள் பெற்றுள்ளார் ஷாம்.
ார்ணாகுளத்தில் முகாமிட்டுள்ளார் அஜித்.
தில் இன்னும் ஒரு பாடல் மட்டும் மிச்சம்

அதைத்தவிர ஒரு தெலுங்கு படத்தில் நடித்து

துமுகம் நடிக்கவுள்ளார்.
காதில் வளையம் என தன் கெட்டப்பை
.
) 'உள்ளம் கேட்குதே' ரிலீஸ் ஆகாததால்
ஜ' பூஜா.

* *

ாயாசிங் மலையாளத்தில் ஒரு படத்திலும்,
ங்களில் நடித்து வருகிறார். தற்போது ஒரு
பியவர். தமிழ் நாட்டில் பார்ப்பவர்களிடம்
ிறாரம்.

* *

ருக்கிறதா? இப்போது உடலின் கணிசமான
ல் ஒரு ரவுண்ட் வந்தவர் இப்போது அர்ஜுன்
ஸ் போட்டிருக்கிறார்.

* *

கிறார் ரம்யா கிருஷ்ணன். இந்தப்படத்தில்
தமிழுக்குக் கொண்டு வருகிறார் டைரக்டர்

## ...திகா தகராறு!

திதில் ஜோதிகாவைக் கொஞ்சம் ஓவராக நடிக்
ும் அளவுக்குப் பிரச்சினை வெடித்திருக்கிறது.
ம்பு, கதை, திரைக்கதை அமைத்து நடிக்கும்
காட்... அதிலும் ...ரே போர்வைக்குள் சிம்பும்

நிலையில் ஒத்திகை நடந்து கொண்டிருந்தது.
க தயாராகிக் கொண்டிருந்தார்.
'அருள்' பட விஷயமாக ஜோதிகாவை
வந்திருக்கிறார். ('அருள்' படத்தில்

ஃபிலிமை வேஸ்ட் பண்ணாமல்
கரெ...ஷன் செய்த பிறகு ஷூட்
கிறது.
டரில் இந்த படுபாதகச் காட்சி ஓடிக்
அதைப் பார்த்துக்கொண்டிருந்தார்.
மிற்கு நெருடலாக இருந்ததோ என்
ஜோதிகாவின் நிஜ ஹீரோவான சூர்யா
யத்தைச் சொல்லிவிட்டார். டென்ஷ
சூர்யா உடனே ஜோவைத் தொடர்பு
கொண்டு 'அந்த மாதிரி காட்சிகளி
லெல்லாம் நடிக்கக் கூடாது'
என உத்தரவு போட்டார்.



இதனால், அதுவரை சிம்புவுக்கு ஒத்துழைப்பு தந்து வந்த ஜோதிகா திடீரென 'நான் அப்படி நடிக்க மாட்டேன் இப்படி நடிக்க மாட்டேன்' – என போர்க் கொடி தூக்கினார். தொடர்ந்து பட வசனங்களிலும் நிறைய கெடுபிடி பண்ண பிரச்சினையானது. ஷூட்டிங் நின்று போனது.

இப்போது நீண்ட சமாதானப் பேச்சு வார்த்தைகள் நடக்கின்றன. இதை யடுத்து அடுத்த வாரம் ஜோதிகா சம்பந்தப்பட்ட காட்சிகள் எடுக்கப்படவிருக்கின்றன.

இது ஒரு புறமிருக்க.. சூர்யா – ஜோதிகா காதல் விவகாரம் நாளுக்கு நாள் பிரசுரமாகிக் கொண்டே இருக்கிறதாம்.

முதலில் இந்தக் காதலுக்கு சூர்யா வீட்டினர் எதிர்ப்பு தெரிவித்திருந்தாலும் கூட, இப்போது எதிர்ப்பு இல்லை என்கிறார்கள் ஏரியாவில். 'இருவரும் சேர்ந்து அடையாறு பகுதியில் ஒரு பங்களா வாங்கியிருக்கிறார்கள்' என்று அந்த மாளிகை பற்றித்தான் பேச்சாக இருக்கிறது.



'ஜெய்'
– அன்ஹீ, பிரசாந்த் –

# ஸ்ரீகாந் – ஸ்நேகா இணைகிறார்கள்

இணைந்த 2 படங்களும் ஹிட். காதல் செய்திகள் காற்று முழுக்கக் கலந்தது. ஸ்ரீகாந் ஸ்நேகா இணைகிறார்கள் என்றால் அங்கு ஒரு பரபரப்பு. 'ஏப்ரல் மாதத்தில்', பார்த்திபன் கனவு' படங்களில் இணைந்து நடித்ததன் மூலம் பரபரப்புக்குள்ளாயினர் ஸ்ரீகாந்தும் ஸ்னேகாவும்.

இவர்களைப் பற்றி எழுதாத பத்திரிகைகள் இல்லை. பேசாத ரசிகரும் இல்லை. இப்படி எம்.ஜி.ஆர் – சரோஜாதேவி, சிவாஜி – பத்மினி, கமல் – ஸ்ரீதேவி, பிரபு – குஷ்பு வரிசையில் ஸ்ரீகாந் – ஸ்நேகா ஜோடியும் இடம்பிடித்தது.

'பார்த்திபன் கனவு' படத்தின் இறுதியில் இருவரும் ரகசியத் திருமணம் செய்து கொண்டார்கள் என்று செய்தி பரவிய பிறகும் இருவரும் அசரவில்லை. நல்ல கதை அமைந்தால் இருவரும் மீண்டும் சேர்ந்து நடிப்போம் என்று கூறினார்.

'போஸ்' ஸ்ரீகாந் – ஸ்நேகாவை இணைத்து வைக்கும் மூன்றாவது படம். 'தயா' படத்திற்குப் பிறகு செந்தில்குமார் இயக்கும் படம். இசை யுவன்சங்கர்ராஜா.

'போஸ்' அக்ஷன் படமென்றாலும் மீடியா முதல் ரசிகர்கள் வரை அனைவரும் எதிர்பார்ப்பது ஸ்ரீகாந் – ஸ்நேகா ஜோடியைத்தான்.

கவிஞர் அறிவுமதி 'தொப்புள் கொடி' என்ற படத்தை இயக்கவுள்ளார். கடல் கடந்துவாழும் தமிழர்களைப் பற்றிய கதை இது. கலைப்புலி தாணு இப்படத்தைத் தயாரிக்கின்றார்.

***

ஜேஜே தோல்வி கண்டாலும் மாதவன் பல படங்களில் நடிப்பது தெரிந்ததே. சீமான் இயக்கும் தம்பி என்ற படத்தில் நடிக்கவுள்ளார்.

***

அர்ஜுன் – மீனா நடிக்கும் புதிய படத்தை கோடி ராமகிருஷ்ணா இயக்குகிறார். தமிழ் – தெலுங்கு ஆகிய இரு மொழிகளில் இந்தப் படம் தயாராகிறது.

***

பீஷ்மரைத் தொடர்ந்து நடிகர் ரஞ்சித் மீண்டும் சொந்தப்படம் தயாரித்து, ஹீரோவாக நடிக்கிறார். இந்தப் படத்தை 'மறுமலர்ச்சி' பாரதி இயக்குகிறார்.

***

அருள் படத்தைத் தொடர்ந்து விக்ரம் நடிக்கும் படத்தை இயக்குகின்றார் மகாராஜன். அரசாட்சிப் படத்தை இந்தியிலும் இயக்கியபின்பே இந்தப் படத்தை அவர் இயக்குவார்.



'எங்கள் அண்ணா'
– நமிதா, விஜயகாந், பிரபுதேவா, ஸ்வர்ணமால்யா, –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்திப்பூ

காயத்ரி வேலைக்குப் புறப்பட்டாள். ''அம்மா நான் போயிற்றுவாறேன்'' தாயிடம் கூறிக்கொண்டு வெளியேறினாள். ''பத்திரமா போயிற்று வாம்மா'' தாய் சிவகாமியினது வழமையான பதில்.

காயத்ரி வசதியான குடும்பத்து பெண்ணல்ல. அவளது தந்தை இராமநாதன். தாய் சிவகாமி இருவருமே நடுத்தரவர்க்க குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். அவர்கள் இருவருக்கும் சம்பிரதாயப்படி நடந்தேறிய திருமணத்தின் பின்பு அவர்களுக்கென்று இருந்த சொத்து அவர்கள் குடியிருக்கும் வீடு மட்டுமே. இராமநாதன் பரம்பரை வழியில் கிடைத்த இந்த வீடும் திருத்தப்படாமல் பழைமையை பறைசாற்றிக்கொண்டிருந்தது.

அரசாங்கத் துறையில் ஊழியராகக் கடமை புரிந்த இராமநாதனுக்குக் கிடைக்கும் ஊதியத்தில் அன்றாட வாழ்க்கைச் செலவை ஒருவாறு சமாளிக்க முடிந்ததே தவிர, சொத்து சுகமென எதையும் வாங்கிக் கொள்ள முடியவில்லை. அடுத்தடுத்து பிறந்த இரண்டு பெண்கள் மூன்றாவதாக ஆண் பிள்ளை என்று மொத்தம் ஐந்து பேர் அவரது வருவாயில் வாழ வேண்டி இருந்தது.

அடிக்கடி நோய்வாய்ப்பட்டுக்கொண்டிருந்த இராமநாதன் காலம் வந்ததும் ஓய்வு பெற்றார். மூத்த பெண் வனிதாவை கையிலிருந்த சொற்ப சேமிப்பின் உதவியாலும், மனைவி சிவகாமியின் நகைகளின் உதவியாலும் திருமணம் செய்து வைத்து விட்டார். மூத்த மகளைக் கரைசேர்த்துவிட்ட திருப்தியும் மனநிறைவும் இராமநாதன் தம்பதிகளுக்கு ஆறுதலைக் கொடுத் தன. ஆனாலும் அடிக்கடி தோன்றி மறைந்த நோய் நிரந்தரமாக இராமநாதனைப் பீடிக்கவே அவர் பக்கவாதம் காரணமாக படுத்த படுக்கையானார்.

ஓய்வு பெற்ற பின்பும் ஏதாவது தொழிலை மேற்கொண்டு குடும்ப நிலையை உயர்த்த எண்ணியிருந்த அவருக்கு இந்த நிலை மிகுந்த கவலையையும், ஏமாற்றத்தையும் ஏற்படுத்தி நோயின் ஆதிக்கத்தை மென்மேலும் உக்கிரமடையச்செய்தது.

சிவகாமியும் இளையமகள் காயத்ரியும் எவ்வளவோ வைத்தியங்களைச் செய்து முயற்சித்தும் அவரது நோய் குணமடைய மறுத்துவிட்டது. உயர்தரம் கற்க முற்பட்ட காயத்ரி தந்தையின் நிலை கண்டு சிறிது சிந்திக்கலானாள். அவரது ஓய்வூதியத்தில் மட்டுமே வைத்திய செலவுகள், அன்றாட வாழ்க்கைச் செலவுகள் என எல்லாவற்றையும் சமாளிக்க முடியாது என்பதை அவளால் நன்கு உணர முடிந்தது. அவள் படிப்பதை நிறுத்திவிட்டு வேலை ஒன்றைத் தேடும் முயற்சியில் இறங்கலானாள்.

தாய் சிவகாமிக்கும் மகளது முடிவை யிட்டு திருப்திப்பட வேண்டிய சூழ்நிலை. இந்தநிலையில் தான் காயத்ரி அவளது அயல்வீட்டுத்தோழி வசந்தியின் அழைப்பை ஏற்று, அவள் வேலை செய்யும் ஆடைத் தொழிற்சாலைக்கு வேலைக்குப் போனாள். அதன் பயனாக தம்பியின் படிப்புச் செலவுக்கு, அம்மாவின் பற்றாக்குறைக்கு என பண உதவிகளைச் செய்யக்கூடியதாக இருந்தது.


ஆனால், தாய் சிவகாமிக்கோ 'திருமண வயதை நோக்கி இருக்கும் மகளின் உழைப்பை நாம் எதிர்பார்க்க வேண்டியுள்ளதே! அவளை எப்படிக் கரையேற்றுவது?' என தாய்மைக்கே உரித்தான கவலை சதா அரித்துக்கொண்டிருந்தது. தந்தை இராமநாதன் எதையும் சிந்திக்கும் ஆற்றல் அற்றுப்போனவராக வாழ்கிறார்.

காயத்ரியும், தோழி வசந்தியும் தினமும் நடந்துதான் வேலைக்குப் போவதும் வருவதும் வழக்கமாகி விட்டிருந்தது. நாட்கள் நகருகின்றன. நாளாந்தம் அவர்கள் பாதையில் செல்லும் போது சந்திக்கும் மோட்டார் சைக்கிளில் செல்லும் ஓர் இளைஞனின் பார்வை அவர்களின் மீது விழுவதை தோழிகளிருவரும் உணரத் தவறுவதில்லை.

அவர்கள் அதை பெரிதாக பொருட்படுத்துவதில்லை. என்றாலும் கவனிக்கத் தவறுவதில்லை. ஒரு நாள் வேலைகுப் போகும் போது வசந்தி ''காயத்ரி உனக்கு ஒரு விஷயம் சொல்லனும்'' என்றாள். என்ன? என்பது போல் பார்வையை உயர்த்தி வசந்தியை நோக்கினாள் காயத்ரி. ''அந்த... மோட்டோபைக் நேற்று எங்க வீட்டுக்கு வந்தது.. பார்த்தா எங்க அண்ணாவின் பிரெண்டாம். பேர் சுதாகர். என்னை யார் என்று அண்ணனைக் கேட்டார். அண்ணனும் தங்கச்சி என்று அறிமுகப் படுத்தினார். நானும் ஒன்றுமே தெரியாதது போல தலையாட்டிவிட்டு இருந்தேன்.'' மூச்சு விடாமல் சொல்லி முடித்தாள் வசந்தி.

அவள் கூறிமுடிக்கவும் மோட்டார் சைக்கிளின் ஒலி கேட்கவும் சரியாக இருந்தது. இவர்கள் இருவரையும் கண்டதும் சைக்கிளின் வேகத்தைக் குறைத்துக் கொண்டே வந்த சுதாகர் அவர்கள் எதிரில் பாதை ஓரத்தில் சைக்கிளை நிறுத்தி அதில் அமர்ந்தபடியே ''ஹலோ! வசந்தி எப்படி? வேலைக்குப் போறீங்க போலிருக்கு'' என்றான். அவனது கண்கள் காயத்ரியைப் பார்க்கின்றன. ''இவுங்க''... என இழுத்து ''யாருன்னு எனக்கு அறிமுகப்படுத்தலயே?'' என்றான். ''இது என் சிநேகிதி காயத்ரி'' என்று வசந்தி சொல்லவும் காயத்ரி சுதாகரைப்பார்த்து சிறு புன்னகை உதிர்த்தாள். சுதாகரும் அழகாகச் சிரித்தான்.

அவனின் முகத்தில் தோன்றிய மகிழ்ச்சியின் மாறுதல்கள் வசந்திக்கு எதையோ உணர்த்தி நிற்கின்றன. ''நான் வாறன் வசந்தி'' காயத்ரிக்கும் சொல்லிக் கொண்டு சைக்கிளில் பறந்தான் சுதாகர். காலப்போக்கில் மூவரும் சந்திக்கும் சந்தர்ப்பங்களில் சிறு சிறு சம்பாஷனைகளுடன் அவர்களது நட்பு தொடர்கிறது. உள்ளூர சுதாகரும், காயத்ரியும் ஒருவரை ஒருவர் விரும்புகிறார்களென்பதை வசந்தி புரிந்து கொள்கிறாள். எனினும் இருவரிடமும் நேரடியாகக்கேட்பது நாகரீகமற்ற செயலாகக் கருதியவள் எதையுமே விளங்கிக்கொள்ளாதவள் போல் இருந்தாள்.



விடுமுறை தினமொன்றில் தனிமையில் கோயிலுக்குச் சென்றிருக்கும் வசந்தியைக் காண்கிறான் சுதாகர். ''என்ன இன்னைக்கி தனியே வந்திருக்கீங்க?'' காயத்ரி வராததைச் சொல்லாமல் சொல்லும் அவன் வசந்தியிடம் வழமையான விசாரிப்புகளுக்குப் பின்பு காயத்ரி பற்றிய தன் மனதிலுள்ள அபிப்பிராயத்தை வெளியிடுகிறான். அதுமட்டுமின்றி காயத்ரி குடும்பம் பற்றி அறிந்திராத விபரங்களை ஆவலுடன் கேட்டறிந்தான்.

காயத்ரியின் விருப்பத்தை அறிந்து கொண்ட பின்பு தனது பெற்றோருடன் இது பற்றிக்கதைத்து அவர்களின் விருப்பத்துடன் காயத்ரியை மணம் முடிப்பதாக கூறினான் சுதாகர். காயத்ரியின் பதிலை அறிந்து வந்து தனக்குத் தெரிவிக்குப்படி வசந்தியிடம் கோரிக்கை விடுத்தான்.

சுதாகர் சந்தித்ததையும் கதைத்த அனைத்து விபரங்களையும் காயத்திரியிடம் கூறி அவனது அபிப்பிராயத்தையும் தெரிவிக்கிறாள் வசந்தி. ''இதுக்கு பதிலை அம்மாவோடு கதைச்சுட்டுத்தான் சொல்லனும் வசந்தி'' என மனம் சந்தோஷத்தால் அலைமோத வெட்கத்தோடு சொன்னாள் காயத்ரி. தோழியின் மனநிலையை உணர்ந்த வசந்தியும் மகிழ்ச்சியடைந்தாள்.

சிவகாமி ஓய்வாக இருந்த இராப்பொழுதில் சுதாகர் பற்றி எல்லா விபரங்களையும் கூறினாள் காயத்ரி. மகள் கூறியவற்றை மிக அவதானமாக செவிமடுத்த சிவகாமி ஒரு பக்கம் சந்தோஷப்பட்டாலும் மறுபக்கம் ஏதேதோ எண்ணி கலக்கமடைந்தாள். ''என்னமோ அம்மா! நீ எவ்வளவு தான் நல்ல பொடியன் எங்க நிலைமைகளை அறிஞ்சவன்னு சொன்னாலும் பெத்தவங்க என்ன சொல்லுவாங்களோ? அவுங்களும் விரும்பனுமே'' என அங்கலாய்த்தாள்.

அதற்கு காயத்ரி '' இல்லம்மா நாங்க சம்மதிச்சா பெரியவங்களை கூட்டிக்கிட்டு வந்து கதைக்கலாம்னு சொன்னாராம்'' என்று பரிந்துரைத்தாள். தன்னை ஆறுதல்படுத்த நினைக்கும் மகளின் உள்ளத்து உணர்வுகளைப் புரிந்து கொண்ட சிவகாமி ''பெண்ணுக்கு ஒரு துணையைத் தேடிக் கொடுக்கவேண்டியது பெற்றவர்கள் கடமை. எப்போதாவது காயத்ரி நான் மாப்பிள்ளை தேடத்தான் வேண்டும் வலியவருவதை தடுத்து விட்டு யாரை நம்பிருப்பது? எனக்கு யாரது உதவி?'' பலவாறு யோசித்தாள். இறுதியில் வசந்தியிடம் '' அவர்களை வரும்படி அழைப்பு விடுத்தாள்.''

அதன் பிரதிப்பலிப்பாக முறைப்படி பெண்பார்க்கும் படலம் ஆரம்பமாகியது. வசந்தியின் உதவியுடன் அனைத்து ஏற்பாடுகளும் நடந்தன. பெற்றோருடன் வந்த சுதாகரை சிவகாமி வரவேற்றாள். வழமையான பேச்சுவார்த்தைகள் நடந்தன. காயத்ரி சிற்றுண்டி கொடுத்து உபசரித்தாள். வசந்தி கூடமாட ஒத்தாசை செய்தாள். சுதாகர் பேசாமல் அமர்ந்திருக்க பெற்றோர் தங்களுக்குள் ஏதோ கதைப்பது தெரிந்தது.

சிவகாமி நெஞ்சு படபடக்க பொறுமையிழந்தவளாக ''இவர்கள் என்ன சொல்லுவார்களோ?'' என எதிர்பார்த்திருக்க சுதாகரின் தந்தை பேச ஆரம்பித்தார். ''பொண்ணு நல்ல லட்சணமாயிருக்கு. அதைப்பத்தி கொறை சொல்ல ஒன்னுமில்ல'' என்று கூறிவிட்டு மனைவியைப் பார்க்க அவளும் ''ஆமாம் எனக்கும் பொண்ணுவை ரொம்பவும் புடிச்சிருக்கு இனி மேற்கொண்டு பேச வேண்டியதைப் பேசுவோம்'' என்று கூறியபடி வெற்றிலைத்தட்டைக் கையில் எடுத்தாள்.

சிறிது நேரம் மௌனத்தின் பின் தொடர்ந்தாள் சுதாகரின் தாயார். பணம், நகை, பாத்திரமென சொல்லிக்கொண்டு போனாள் . சிவகாமிக்கு தலை சுற்றுகிறாப்போல தோன்றியது. காதுகள் அடைத்து கண்கள் மங்கின சற்று நேரத்தில் ''அப்ப நாங்க புறப்படறம்'' என்றபடி சுதாகரின் தந்தை எழுந்திருக்க '' உங்க முடிவை யும் எங்களுக்கு தெரிவிங்க. அப்புறமா மேலே ஆகவேண்டியதை பார்ப்பம்'' என்றவாறு தாயும் புறப்பட்டாள். சுயநினைவு திரும்பியவளாக சிவகாமி தன்னை ஆசுவாசுப்படுத்திக்கொண்டு அவர்களை வழியனுப்பினாள். சுதாகர் எதுவுமே பேசாது பெட்டிப்பாம்பாக அவர்களின் பின்னே போனான்.

அவர்களின் பேச்சொலிகளை அறையில் இருந்தபடி அவதானமாகக்கேட்ட காயத்ரி வெட்கத்தினாலும், வேதனையினாலும் வசந்தியின் தோளில் சாய்ந்து அழுதாள். ''இப்ப அழுது என்னம்மா பிரயோசனம்? நான் இப்படியொரு முடிவை நினைச்சு பயந்துதாம்மா இருந்தேன். ஆனாலும் உன் நம்பிக்கையை கெடுக்ககூடாதுன்னு தான் பேசமால் இருந்தேன். முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படறது நியாயமா? இனிமேல் அதைப்பத்தி நினைக்காதே, அது நமக்கு எட்டாத இடம்'' விரக்தியோடும், வேதனையோடும் சிவகாமியிடமிருந்து அழுகைக்கு மத்தியில் வார்த்தைகள் வெளிபடுகின்றன. வசந்தியும் சுதாகர் மீது கோபத்தோடும், வெறுப்போடும் சிவகாமியின் முகத்தை நிமிர்ந்து நோக்க இயலாதவளாய் தன் வீட்டுக்கு நடந்தாள்.

சுதாகர் பெற்றோருடன் வந்து விட்டுப் போய் முழுதாய் ஒரு நாள் கடந்து விட்டிருந்தது. என்றாலும் காயத்ரி வீடு இன்னமும் வழமைக்குத்திரும்பவில்லை. காயத்ரி வேலைக்குச் செல்லாது அறைக்குள் முடங்கிக்கொண்டு கட்டிலே தஞ்சமெனக்கிடந்தாள். அழுதழுது வீங்கிப்போன முகம், வரண்டுபோன உதடுகள், சோபை இழந்துவிட்ட கண்கள். மொத்தத்தில் துவண்டு போய்விட்டாள். அவளது அழகிய கூந்தல் வாரிவிடப்படாமல் கலைந்துகிடந்தது.

சிவகாமி மெல்ல மகளின் அருகில் வந்து ''காயத்ரி எழும்பும்மா மணி பத்தாகப்போவுது. எழும்பி குளிச்சிட்டு சாப்பிடவாம்மா, தண்ணி இல்லாம இப்படியே இருந்தா எப்படிம்மா?'' ஆதரவாக மகளின் தலையை வருடிவிட்டபடி அவளின் உள்ளக்கிடக்கையை உணர்ந்தவளாக பெருமூச்சொன்றை விட்டபடி அகன்று போனாள்.

காயத்ரி எழுந்து யன்னலருகில் வந்து கம்பிகளைப் பிடித்தபடி வெளியே பார்க்கிறாள். ஆகாயத்தில் வட்டமடித்துச் செல்லும் ஜோடிப்புறாக்களை வேதனையோடு உற்று நோக்கினாள். முற்றத்துக்கொடி முல்லைப் பூவின் வாசனை கூட அவளுக்கு வேண்டாதொன்றாகவே தோன்றியது.

மோட்டார் சைக்கிள் ஒன்றின் ஒலி மூலம் திசை திரும்பிய அவள் கவனம் வாசல் பக்கம் செல்கிறது. வருபவன் சுதாகர் என உணர்ந்தவள் ''சே! அவன் ஏன் இங்கு வரவேண்டும்?'' வெறுப்பு மேலிட அறைகுள்ளையே இருந்தாள். சுதாகரைக் கண்ட சிவகாமி ''தம்பி! தயவு செய்து எங்க வீட்டுக்கு வராதீங்க. எங்களை அவமானப்படுத்தவும், வேதனைப்படுத்தவும் நினைச்சா? திரும்பவும் வாறீங்க.'' மூச்சிரைத்தாள்.

''இல்ல.... வந்து'' என்று எதையோ சொல்ல வந்த சுதாகரை பேச விடாமல் தடுத்த அவள் ''நீங்க ஒன்னும் சொல்ல வேணாம். நாங்க தான் அவசரப்பட்டுட்டம் யோசிக்காம இந்த விஷயத்துல எறங்கினது. எங்க தவறு தான். இது எங்களுக்கு நல்ல பாடம்.'' முடிவொன்றுக்கு வந்தவள் போல் சொன்னாள். எல்லாவற்றையும் பொறுமையுடன் கேட்ட சுதாகர் மெதுவாக பேச ஆரம்பித்தான். ''உங்க நிலைமையையெல்லாம் நான் ஏற்கனவே சொல்லியிருந்தும் எங்க அம்மா சீதனம்மின்னு வாய் திறந்து கேட்டது முறையில்லன்னு எனக்கு நல்லாப்புரியுது. இருந்தாலும் அவுங்களை எதிர்த்துப்பேசி தட்டிக்கேக்க என்னால்ல முடியல்ல.

ரெண்டுபேரும் என்மேலே ரொம்பவும் பாசத்தைக்கொட்டி வளர்த்தவங்க. பெரியவங்க மனசு நோகக் கூடாதுன்னு நான் நினைக்கிறேன். அதனால தான் நான் நேத்து முழுக்க யோசிச்சு ஒரு முடிவுக்கு வந்தேன் 'இவன் பெற்றோர் மட்டும் மனம் நோகக்கூடாது வலிந்து வந்து எம்மனதை நோகப்பண்ணுவதையிட்டு எந்தகவலையுமில்லை' மனசுக்குள் எண்ணியபடி வெறுப்போடு கோபப்பார்வையொன்றை சுதாகர் மீது வீசினாள் சிவகாமி.

அவளது அருகில் வந்த சுதாகர் ''நீங்க என்னை தப்பாப்புரிஞ்சுக்காதீங்க. இந்தாங்க இதில இருக்கிறது நான் சுயமாச்சம்பாதிச்சு சிறுகச்சிறுக சேமிச்ச பணம். இதை நீங்க மறுக்காம ஏத்துக்கிட்டு எங்க அம்மா, அப்பா கேட்டமாதிரியே சீர் செய்துர்றதா ஒப்புக்கொண்டு மேலே நடக்க வேண்டிய ஏற்பாடுகளைக் கவனிங்க. இந்த விபரம் எங்க வீட்டுக்குத் தெரிய வேணாம். ஏன்னா? உங்க கௌரவமும் பாதிக்கக்கூடாது என்பது என் நோக்கம்'' சிவகாமி பேச நா எழாதவளாய் விக்கித்து, விறைத்து, சிலைபோல உறைந்து போனாள்.

அக்கறையோடு காது கொடுத்துக்கேட்ட காயத்ரி வெளியே வந்து மகிழ்ச்சி பெருக்கெடுக்க நன்றியுணர்வோடு சுதாகரைப் பார்த்தாள். ஆனந்தக் கண்ணீரிடையே தெரிந்த அவளின் படபடக்கும் விழிகள் மௌனமொழியால் நன்றி தெரிவிப்பது சுதாகருக்குப் புரிந்தது.

சிவகாமி மனம் நெகிழ்ந்து கண்களில் நீர் மல்க ''தம்பி! உங்களைப்போல பிள்ளைய அத்தி பூத்தாப்போல அரிதாத்தான் காண முடியுது. என்னைப்போல ஏழைத்தாய் மாரின் மனங்குளிர உங்களைப்போல இன்னும் ஆயிரமாயிரம் அத்திப்பூக்கள் மலர வேணுமுன்னு நான் கடவுள மனமார வேண்டுறேன்ப்பா'' என்று இன்ப அதிர்ச்சி மேலீட்டால் தடுமாறிக்கொண்டு கூறினாள்.

பொன். சரஸ்வதிநாயுடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபத்தால் மரணமா?





வாழ்க்கையை வெற்றிகரமாக அனுபவித்து வாழ்பவர்களைக் கொஞ்சம் உற்றுக் கவனியுங்கள். ஒரு விடயம் நன்றாகப் புலப்படும். வாழ்க்கையை இரசிப்பவர்கள் கோபப்படுவதில்லை. உரத்துப் பேசுவதில்லை. மென்மையான சுபாவத்தைக்கொண்டும், சின்னச்சின்ன சிரிப்பின் மூலமும் பெரிய பெரிய காரியங்களை சர்வ சாதாரணமாகச் சாதித்து விடுகிறார்கள்.

கோபம் மிகவும் கொடியது என்று ஒவ்வொருவருக்கும் சொல்லவேண்டியதில்லை. கோபத்தினால் ஒவ்வொருவரும் எதையெல்லாம் இழந்திருக்கின்றோம் என்பது கெட்ட அனுபவமாகக் கிடைத்திருக்கும்.

எல்லாத் தீய குணங்களுக்கும் மூத்த சகோதரியான இந்தக் கோபத்தை நாம் கொன்றுவிடவேண்டும். இல்லையென்றால் கட்டுங்கடங்காத கோபம் எம்மையே ஒரு நாள் கொன்றுவிடும்!

உணர்ச்சி நிலையில் மனம் கொந்தளிக்கும்போது அறிவின் வேகம் வினாடிக்கு 14 சுற்றுக்கு மேல் செல்கிறது. கோபத்தில் 25 முதல் 30 சுற்று வரைக்கும் உயருகிறது. சுழற்சி வேகம் அதிகரிக்க, அதிகரிக்க உயிருக்கு ஆபத்தே! இந்த சுழற்சி வேகம் அதிகரித்து வினாடிக்கு 40 சுற்று என்ற அளவினை நெருங்கினால், உயிராற்றலின் வலிமையை உடலால் தாங்கிக் கொள்ள முடியாமல் போகும். உயிரின் அபரிதமான வெளியேற்றத்தினால், உடலை இயக்கவேண்டிய அளவுக்கும் குறைவாக உயிர் ஆற்றலின் அளவும் செறிவும் குறைந்து போகவே, மரணம் நிகழ்கிறது.

இந்த உடனடி மரணத்தைக் கோபத்தில் யாரும் அடைந்து விடுவதில்லை. ஆனால் அடிக்கடி அதிகமாகக் கோபப்பட்டால், அறிவின் இயக்கவேகம் அதிகரித்து, உயிராற்றல் செலவாகி—பலவீனமடைந்து, நீண்ட நாள் இருக்க வேண்டியவர்கள் சொற்ப நாளில் போய்விட வேண்டியது தான்.

இந்தக் கோபம் ஏற்படும் போது சினத்தால் உடலில் உள்ள இரத்த ஓட்டம் அதிகமாகிறது. கண்கள் சிவக்கின்றன. நரம்புகளில் படபடப்பு ஏற்பட்டு அவை பலவீனமடைகின்றன. இவ்வாறு பலவிதமான அறிகுறிகளைப் பார்க்கிறோம். இதன் விளைவாக உடலில் பல நோய்கள் ஏற்படுகின்றன. கண் நோய், நாக்குப்புண், வயிற்றுப் புண், மூலம், மலச்சிக்கல் போன்ற பலவாறான நோய்கள் நமக்கு ஏற்பட இந்த கோபம் வழி வகுக்கிறது.

நாம் அனைவரும் மகிழ்ச்சியாக வாழ விரும்புகிறோம். எனவே, அதற்கேற்றவாறு நடந்து கொள்ள வேண்டாமா? எமக்கும், பிறருக்கும் தீமை தருகின்ற இந்த கோபத்தை ஒழிக்க வேண்டும் என்று முடிவு கட்ட வேண்டும். முதலில் அந்த முடிவை பலமுறை எண்ணி எண்ணி அழுத்தமாக மனதிலே பதிவு செய்துகொள்ள வேண்டும்.

"எந்தச் சந்தர்ப்பத்திலும் கோபமானது நன்மை விளைவிக்காது என்றால் அடம்பிடிக்கும் குழந்தையையும், நல்லவர்களை ஏமாற்றும் கபட மனம் படைத்தவர்களையும் எப்படித் திருத்துவது? கோபத்தைக் காட்டினால் தானே அவர்கள் ஒழுங்குக்கு வருகிறார்கள்?


எனவே கோபத்தை பயன்படுத்தாவிட்டால் நற்பயன் விளையவே விளையாது என்று தோன்றும் இடத்தில் கோபம் தேவை தான். ஆனால் இந்தக் கோபமானது யார் மீது செலுத்தப்படுகிறதோ, அவருக்கு மட்டும் தான் அது கோபமாகத் தோன்ற வேண்டும். மற்றபடி அது எமக்குக் கோபமாக இருக்கக் கூடாது. கோபம் வந்தது போல் வேண்டிய அளவு நடிக்கலாம். ஆவேசத்தை வேண்டுமானாலும் காட்டலாம். ஆனால் அது போலியாக இருக்க வேண்டும். மனம் மட்டும் நீர்த்தளம் போல் என்றும் சமனாக சலனமற்று இருக்க வேண்டும்.




# நீங்கள் ஆரோக்கியமானவரா?

எந்த வயதினராக இருந்தாலும் நாம் ஆரோக்கியமாக இருக்கின்றோமா என்று எப்படித் தெரிந்து கொள்வது? வியாதிகள் இல்லை என்பதால் நாம் ஆரோக்கியமானவர்கள் என்று கருதலாமா?

உங்களுக்கு அடிக்கடி கோபம் வருகிறதா? அடிக்கடி சொல்ல முடியாத ஏதோ ஒரு வருத்தம், துக்கம் உங்களை ஆட்கொள்கிறதா?



தலைவலி வருகிறதா? உடல் அரிப்பு, தலை சுற்றல், சோம்பேறித்தனம் ஏற்படுகின்றனவா?, தூக்கம் வரவில்லையா? அடிக்கடி மறதி ஏற்படுகிறதா? பசி இல்லையா? பேதி, வாந்தி, மயக்கம் இவற்றைப்போல் அவ்வப்போது வருகின்றனவா?

இதில் ஏதாவது ஒன்று உங்களிடம் இருந்தால் கூட நீங்கள் முழுமையான ஆரோக்கியம் இல்லாதவர் என்று தெரிந்துகொள்ளுங்கள். எனவே தேவையான விடயங்களை தெரிந்து கொண்டு, அதன்படி தினசரி உணவைத் தேர்ந்தெடுத்தால் நோயின்றி வாழலாம்?

உடலில் சக்திபெறுவதற்கும், உடல் வளர்ச்சிக்கும், உடலில் உள்ள உறுப்புக்கள் நன்றாக இயங்குவதற்கும் கார்போஹைடிரேட், புரதம், கொழுப்பு போன்றவை தேவைப்பட்டால் மற்ற பல விடயங்களுக்கு விற்றமின்களும், மினரல்களும் தேவைப்படுகின்றன.

இதுவரை 13 விற்றமின்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. அவற்றில், விற்றமின் A, D, E, K போன்றவை கொழுப்பில் கரையும் தன்மை உடையன. தண்ணீரில் கரையும் 9 விற்றமின்களில் 8 வகை பீ—கொம்பிளெக்ஸ் (B-COMPLEX) வகையையும் விற்றமின் சியையும் சார்ந்தவை. இதில் B, C வகையைச் சார்ந்த விற்றமின்களை அதிகம் உட்கொண்டாலும், உடல் தனது வேலைகளுக்கு தேவையானதை மட்டும் எடுத்துக்கொண்டு மற்றவற்றை வெளித்தள்ளிவிடும். சேர்த்து வைக்காது. அந்தந்த நாளுக்குத் தேவையானதை நாம் அன்றன்றே உட்கொண்டாகவேண்டும்.

பொதுவாகவே விற்றமின்களும், மினரல்களும் மிகக் குறைவாகவே நமக்குத் தேவை. உடலில் எல்லா வேலைகளும் சரியாக நடைபெறுவதற்கும், நோய் எதிர்க்கும் திறன்பெறுவதற்கும், உடலின் உள் உறுப்புகள் இயங்கவும், கொழுப்பு, புரதம் போன்றவற்றை சரியானபடி உட்கிரகிக்கப்பட்டு அதன தன் வேலைகளைச் செய்யவும் இந்த விற்றமின்கள், மினரல்கள் முக்கியமாகத் தேவை.

மிகக் குறைவான அளவுதானே எமக்குத் தேவை என்று அலட்சியமாக இருந்துவிடக் கூடாது.

கொழுப்பில் கரைவது விற்றமின் 'A' (ரெடினோல்/கேரோடீன்) ஆகும். இயற்கையில் இந்த விற்றமின் உணவில் இரண்டு வகையாகக் காணப்படுகிறது. நேரடி விற்றமினாக ரெடினோல் (RATINOL) மற்றும் கேரோடீன் தான் எமக்கு முக்கியமாகத் தேவை. கேரோட்டீன் எமது உடலினுள் சென்ற பிறகு விற்றமின் 'ஏ'யாக மாற்றப்படுகிறது.

ஆம். நமது உடலில் இதன் பணி என்ன என்று பார்த்தால்,

*கண் பார்வை தெளிவாகத் தெரிவதற்கு.

* உடலில் சருமம் உலர்ந்து விடாமல் நன்றாக இருப்பதற்கு.

*உடலில் உள்ள 'செல்'கள் (CELL) சுருங்கி, தேய்மானம் அடைந்து மறுபடியும் புதுப்பிக்கப்படும் போது, இதன் பங்கு மிக முக்கியம்.

* உடலில் நோய் எதிர்ப்புச் சக்தியைக் கொடுப்பதற்கு

* உடல் வளர்ச்சியின் போது எலும்புகள், பற்கள் உருவாகும் போது, சரியானபடி வளர்ச்சியடைவதற்கு.

இது மட்டுமா? சரியான படி தினமும் உட்கொண்டால், உடனடியாக இருதய நோய்கள் நெருங்கா. உணவுக் குழாய், நுரையீரல், உணவுப் பாதை, வயிறு, மலக் குழாய், பிராஸ்டேட் கிளாண்ட் (GLAND) மற்றும் பல இடங்களில் வரும் கான்சர் வியாதிவராமல் இருக்க, இந்த பீடா தகெரோட்டீனின் பங்கு மிக முக்கியமானது என்பது உலக அளவில் நிரூபிக்கப்பட்ட ஒன்று.

பொதுவாக இந்த விற்றமின் ரெடினோலாக (RETINOL) கொழுப்பில் கரையும் தன்மை உள்ளதால், மீன் எண்ணெய், பால் (க்ரீம், வெண்ணெய், நெய், போன்ற பாலிலிருந்து எடுக்கும் பொருட்கள்) ஈரல், முட்டையின் மஞ்சள் கரு போன்றவற்றிலிருந்து கிடைக்கும்.


இந்த விற்றமின் பீட்டா கேரோட்டீனாக காய்கறிகள், பழங்களிலிருந்து கிடைக்கும். முக்கிய மஞ்சள், ஆரேஞ்சு நிறமுடைய பழங்கள், காய்கறிகள், கீரைவகைகளில் அதிகம் கிடைக்கும்.

கீரைகளில் — பசலை, பீட்ரூட் இலை, முள்ளங்கி இலை, முருங்கை இலை, வெந்தயக் கீரை, புதினா, கொத்துமல்லி, கறிவேப்பிலை போன்றவற்றில் அதிகமாக உள்ளது.

காய்கறி, பழங்களில் —கரட், மாம்பழம், பப்பாளி, ஆரேஞ்சு போன்றவற்றில் அதிகம்.

அதற்கு அடுத்து தக்காளி, பரங்கி, சர்க்கரை வள்ளி, குடமிளகாய், பச்சைமிளகாய் போன்றவற்றைச் சொல்லலாம். (FAIR SOURCES)

அன்னாசி மஞ்சள் நிறமாக இருந்தாலும் அதில் இந்த விற்றமின் அதிகம் இல்லை. பருப்பு வகைகள், பாகற்காய், பலாப்பழம், பீன்ஸ் போன்றவற்றில் ஓரளவு உள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிந்து கொள்ளுங்கள்

| | |
|---|---|
| 1.அதிக நீர் அருந்தும் பறவை எது? | புறா |
| 2.சத்தம் போடாத விலங்கு எது? | ஒட்டகச் சிவிங்கி |
| 3.மிகச் சிறிய முட்டையிடும் பறவை எது? | தேன்சிட்டு |
| 4.மிகப் பெரிய முட்டையிடும் பறவை எது? | தீக்கோழி |
| 5.ஞாபக சக்தி கூடிய விலங்கு எது? | யானை |
| 6.வேகமாக ஓடும் விலங்கு எது? | சிறுத்தை |
| 7.பித்தப் பை இல்லாத விலங்கு எது? | எலி |

பா.தேஜனுஜா
தரம் 10
இளி/வண்ணார்க் குளம்
மகா வித்தியாலயம்.

# ஒரு பொருள் குறிக்கும் வேறு பெயர்கள்

* ஒலிவ் இலை — சமாதானம்
* வெண்புறா — அமைதி
* சிவப்புச் சக்கரம் — வளர்ச்சி
* கறுப்புக் கொடி — துக்கம்
* சிவப்பு முக்கோணம் — குடும்பக் கட்டுப்பாடு
* மஞ்சல் கொடி — தொற்று நோய்
* சிவப்பு விளக்கு — ஆபத்து
* சிவப்பு சிலுவை — மருத்துவ உதவி

ஜெ.ஸ்ரீபன்
இரணைப்பாலை.

# சாரணியம் பற்றிய தகவல்கள்

றொபேட ஸ்டீவின்சன் சிமித்பேடன் பவல் என்பவரே சாரணிய இயக்கம் தோன்றக் காரணமானவர்.

இவர் 1908 ஆம் ஆண்டு இளைஞர் சாரணியம் எனும் நூலை வெளியிட்டார்.

இந்த நூல் ஆண்களிடையே மட்டுமன்றி பெண்களிடையேயும் பல சிந்தனைகளைத் தூண்டியது.

1910 ஆம் ஆண்டு பெண்கள் சாரணிம் ஆரம்பிக்கப்பட்டது.

1950 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் லண்டனில் பிரபு பேடன் பவல் தலைமையில் முதலாவது ரலி நடத்தப்பட்டது.

1912 இல் உலக நாடுகளுக்கான சாரணிய சுற்றுப் பயணம் ஒன்று பிரபு பேடன் பவல் தலைமையில் நடைபெற்றது.

பிரபுபேடன் பவலின் துணைவியான கலேல் சென்கிளேயர் சோம்சை அவர்கள் 1918 ஆம் ஆண்டு உலகப் பெண் பிரதம சாரணி ஆனார்.

1919 ஆம் ஆண்டு அனைத்துலகப் பேரவை நடைபெற்றது.

# புளூட்டோ பற்றி சில தகவல்கள்

* புளூட்டோவை கண்டு பிடித்தவர் யார்? எப்பொழுது?
வில்லியம் பிம்பாக் 1930 இல் லோவெல் வானிலை ஆராய்ச்சி நிலையம் (அமெரிக்கா).
* சூரிய குடும்பத்தின் வெளிவட்டக் கிரகம் எது?
புளூட்டோ.
* புளூட்டோ சூரியனை ஒரு சுற்று சுற்றிவர ஆகும் காலஅளவு?
248.54 வருடங்கள்.
* புளூட்டோவின் விட்டம் எவ்வளவு?
300 கி.மீ.
* மிகப் பெரிய முட்டை வடிவ கிரகம் எது?
புளூட்டோ.
* புளூட்டோவின் நிறை என்ன?
பூமியின் 1/500 மடங்கு.
* புளூட்டோவின் மேல்மட்ட வெப்பநிலை என்ன?
260 பரனைட்.
* சூரியனிலிருந்து புளூட்டோவின் சராசரி தூரம் என்ன?
5970 மில்லியன் கி.மீற்றர்.
* சிரஸ் என்ற சிறியகோளைக் கண்டுபிடித்தவர் யார்?
ஜியூசெப்பா பியாசி (இத்தாலி).
* சிரஸ் சிறிய கோளின் விட்டம் எவ்வளவு?
1025 கி.மீ.

கா.நமநாதன் — நர்மதா
தரம் 11
மு/துணுக்காய் அ.த.க.பாடசாலை.

# சிறார்களின் கைவண்ணம்




ஸ்ரீ. திருமாலவன்
ஆண்டு 6
யா/மாதுகல் சென் யோசஃப் ம. வித்.



த.டர்சிகன்
மாயவனூர்
வட்டக்கச்சி




சு.சசிகுமார்
கிளி/முரசுமோட்டை முருகானந்த ம.வித்.




க.இராசமலர்
இராஜ்குமார்

# பேராசை பெரு நட்டம்

ஒரு காட்டில் ஒரு விறகுவெட்டி ஒரு மரத்தை வெட்டிக் கொண்டிருந்தான். அந்த மரம் ஒரு ஆற்றின் கரையில் இருந்தது. மரத்தை வெட்டும் போது கையில் இருந்த கோடரி தவறி ஆற்றுக்குள் விழுந்து விட்டது.



ஆறு மிகவும் ஆழமாய் இருந்தபடியால் தண்ணீருக்குள் இறங்கி அவனால் கோடரியை எடுக்க முடியவில்லை. அதனால் கரையில் உட்கார்ந்து அழ ஆரம்பித்தான்.

அவனைப் பார்த்து இரக்கங்கொண்ட வனதேவதை அவன் முன்பு தோன்றி, ஏன் அழுகிறாய்? என்று கேட்டது. கோடரி தண்ணீருக்குள் விழுந்து விட்டதாகவும், அது கிடைக்காவிட்டால் தனக்குப் பிழைப்புக்கு வழி இல்லை என்றும் விறகுவெட்டி சொன்னான்.

வனதேவதை தண்ணீருக்குள் மூழ்கி ஒரு தங்கக் கோடரியோடு வெளியே வந்தது. அதை விறகுவெட்டியிடம் கொடுத்தது. அவன் அதைப் பார்த்ததும் அது தன் கோடரி அல்ல என்றும், அது தனக்கு வேண்டாம் என்றும் சொல்லி விட்டான்.

வனதேவதை மீண்டும் தண்ணீருக்குள் மூழ்கி ஒரு வெள்ளிக் கோடரியை எடுத்து வந்து கொடுத்தது. அதுவும் தன்னுடையது அல்ல என்று சொல்லி தனக்கு வேண்டாம்என்றுசொல்லி விட்டான் விறகு வெட்டி. இறுதியில் வனதேவதை விறகுவெட்டியின் கோடரியை எடுத்து வந்து கொடுத்தது. அதைப்பார்த்து விறகுவெட்டி மிகுந்த மகிழ்ச்சி அடைந்தான். இரண்டு கைகளாலும் அதை வாங்கிக் கொண்டான்.

விறகுவெட்டியின் நாணயத்தைப் பார்த்த வனதேவதை சந்தோஷம் அடைந்தது. நீ உண்மையாக நடந்து கொண்டபடியால் உன்னுடைய கோடரியோடு இந்தத் தங்கக் கோடரியையும் வெள்ளிக் கோடரியையும் உனக்கு பரிசாகக் கொடுக்கின்றேன் எடுத்துக்கொள் என்று வனதேவதை சொல்லிற்று. மூன்று கோடரிகளோடும் விறகு வெட்டி வீடு திரும்பினான்.

காட்டில் நடந்த அதிசயத்தை அக்கம்பக்கம் உள்ளவர்களிடம் அவன் சொன்னான். இதைக் கேட்டவர்களில் ஒருவன் உடனே காட்டுக்குப் போனான். விறகு வெட்டியின் கோடரி தண்ணீருக்குள் விழுந்த இடத்தில் தனது கோடரியைப் போட்டான். கரையில் உட்கார்ந்து அழுதான்.

வனதேவதை வந்து காரணம் கேட்டது.கோடரி தண்ணீருக்குள் விழுந்து விட்டதாக அவன் சொன்னான். உடனே வனதேவதை தண்ணீருக்குள் மூழ்கி ஒரு தங்கக் கோடரியை எடுத்துவந்து காட்டியது.அதைப் பார்த்த பேராசைக்காரனான அவன் ஆமாம் அதுதான் என்று சொல்லிக் கொண்டே அதைப் பிடிக்கப் போனான்.


உடனே தேவதை ஓ! பேராசைக்காரனே உன் உள்ளத்தை அறியக்கூடிய உன் தெய்வத்தையா ஏமாற்றப் பார்க்கிறாய்? உன்னுடைய கோடரியைக்கூட உனக்குக் கொடுக்க முடியாது. ஓடிப் போ என்று சொல்லியது. பேராசைக்காரன் வெறுங் கையோடு வீடு திரும்பினான்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பறக்கும் ரயில்!



நீங்கள் காண்பது ஜப்பானில் மிக வேகமாகத் தயாராகிவரும் புதிய ரயில். ஜப்பான் தலைநகர் டோக்கியோவிற்கும், சன்டாய் நகருக்கும் இடையே உள்ள 350 கி.மீ. தூரத்தை 40 நிமிடங்களில் இது கடந்து விடும். இதன் வேகம் மணிக்கு 500 கி.மீ ஆகும். உண்மையிலேயே இதை ரயில் என்றோ தொடர்வண்டியென்றோ கூற முடியாது. சக்கரங்கள் இல்லாமல் ஓடக்கூடிய இந்த ரயில், முதல் 30 கி.மீ. தூரத்தை சாதாரண ரயில் போல் ஓடி, அதன் பின் தண்டவாளத்திலிருந்து பத்து செ.மீ. மேலே எழுந்து பறக்கும் விமானம் போல கீழிருந்து மேல்நோக்கி வரும் காற்றில் வழுக்கிச் செல்லும். இதன் அருகில் தெரியும் காற்றாடிகளும் சூரியஒளியில் இருந்து சக்தி பெறும் தகடுகளும் இயற்கைச் சக்தியால் இதை ஓட வைக்கும். இதனால் சூழல் மாசடைதல் தடுக்கப்படும். இது 2020 இல் பாவனைக்கு வருகிறது. இது ஓடும் போது பலத்த ஒலி ஏற்படும். ஆனாலும் அதையும் எதிர் காலத்தில் தொழில் நுட்பம் வெற்றி கொள்ளலாமாம்.

# இதுவும் பஷன்தான்




பஷன் இப்போதெல்லாம் அடிக்கடி மாறிக் கொண்டே இருக்கிறது. அறிமுகமான ஒரு சில வாரங்களிலேயே அடுத்த பஷன் வந்து விடுகிறது. நேற்று புதிதாக அறிமுகமானது இன்று பழையதாகி விடுகிறது. இன்று புதியதாக இருப்பது நாளை பழசாக மாறிப்போகிறது.

முன்பு உடலில் ஓவியம் தீட்டிக் கொள்வது பஷனாக இருந்தது. மேற்கத்திய நாடுகளில் இப்போது உடல் ஓவியத்தில் ஆர்வம் குறைந்துபோய் பச்சை குத்திக் கொள்ள ஆரம்பித்து விட்டார்கள். தற்போது மற்றொருபஷன் பரவிவருகிறது. படத்தில்இருக்கும்பெண் மணி அணிந்திருப்பது பொட்டுகளால் தயாரான உடை. இதை அப்படியே வெற்று உடம்பில் அணிந்து கொள்ளலாமாம். போதாக் குறைக்கு இதில் நவரத்திக் கற்களையும் இணைத்து தைத்திருக்கிறார்கள். இந்த பொட்டு உடையை ஜீன்ஸ், பாண்ட்டிற்கு இணையாக அணிய வேண்டுமாம்.

ஆனால்இந்தஉடையைஅணிந்து கொண்டு ஜாலியாக வீதியில் நடக்க முடியுமா? என்பது மில்லியன் டொலர் பெறுமதி மிக்க கேள்வி தான்.?


# ஸ்ரோ(ங்கான) சாதனை



ஏதாவது வித்தியாசமாகச் செய்து சாதனை புத்தகத்தில் தன் பெயரை பதிவு செய்யத் துடிக்கும் இளைஞர்கள் இன்றைய சூழலில் பெருகிக் கொண்டே உள்ளனர். அப்படிப்பட்டவர்களில் ஒருவரைத்தான் படத்தில் நீங்கள் காண்கிறீர்கள். அடேங்கப்பா தன் வாய்க்குள் அத்தனை ஸ்ரோக்களை நுழைத்து கலக்குகிறார் என நம்மையும் வியப்பில் வாய் பிளக்கச் செய்து விட்டார் இவர்.

கர்நாடக மாநிலம் ஹரிஹர் பகுதியைச் சேர்ந்த இந்த சாதனையாளரின் பெயர் திருமூர்த்தி. வயது 27. திருமூர்த்தி தன் வாய்க்குள் நூழைத்திருப்பது மொத்தம் 350 ஸ்ரோக்கள். இதன் மூலம் அவர் லிம்கா என்ற சாதனைப் புத்தகத்தில் இடம் பிடித்து விட்டார்.


# பறக்கும் கார்!




அமெரிக்காவில் உள்ள பொறியியலாளர் போல் மூலர் என்பவர் சுமார் நான்கு ஆண்டுகளாக கடுமையாக உழைத்து பறக்கும் கார் ஒன்றைக் கண்டுபிடித்துள்ளார். சுமார் 600 கி.மீ. வேகத்தில் வானத்தில் பறந்து செல்லக் கூடியது இந்தக் கார் ஒரு தடவையில் 1400 கி.மீ. தூரம்வரை பறந்து செல்லக்கூடியது. அதிகரித்து வரும் வீதி விபத்துக்கள், விழுந்து நொறுங்கும் விமானங்களிடையே பாதுகாப்பாக பறந்து செல்ல இந்தவகையான பறக்கும் கார்கள் உதவும் என்கிறார்கள். இதன் நிறை 998 கிலோ. இதில் நான்கு பேர் பயணம் செய்யலாம்.

முதலில் இது சாதாரண வீதியில் வேகமாக ஓடும். அப்போது பின்புறமாகச் சுழலும் காற்றாடிகள் இதை முன்நோக்கித் தள்ளும். அதன் பின்னர் நான்கு காற்றாடிகள் தரையை நோக்கி காற்றை வேகமாக வீசும். அவ்விதம் உருவாகும் மேல்நோக்கிய உந்துவிசை காரணமாக கார் சுமார் ஒரு மீற்றர் உயரத்தில் அந்தரத்தில் தொங்குவதுபோல நிற்கும். இவ்வேளை அந்த நான்கு காற்றாடிகளும் மெல்ல பின்புறமாகத் திரும்பி காரை முன் நகர்த்தும். அவ்வளவுதான் பயணம் ஆரம்பித்துவிடும். கார் மணிக்கு 600 கி.மீ. வேகத்தில் பறக்கும். (படங்களைப் பார்க்கவும்)

பயணத்தின் முடிவில் காரை நிறுத்த வேண்டுமென்றால் காரை செங்குத்தாகவே கீழே இறக்க முடியும். இந்தக் காரை உருவாக்க ஒரு மில்லியன் டொலர் தேவைப்பட்டிருக்கிறது. பெருந்தொகையாக உற்பத்தி செய்தால் இதன் விலையைக் குறைக்கலாம். தற்போதைக்கு சாதாரண மக்களிடையே பாவனைக்கு வருவதற்கு விலை பெரும் தடையாக உள்ளது. ஆனாலும் இது ஓர் புதிய வரவாகும்.




# புதிய குரங்கு



மருத்துவத்துறையில் புதிய சாதனையாக மரபணு மாற்றம் செய்யப்பட்ட குரங்குக் குட்டியை அமெரிக்க டாக்டர்கள் உருவாக்கியுள்ளார்கள். ஜெல்லி மீனின் மரபணுக் கூறுகளைப் பிரித்து அவற்றை குரங்குகளின் சினை முட்டையில் செலுத்தி அந்த சினை முட்டைகளை கருவுறச் செய்தனர். இப்போது அவை குட்டி போட்டுள்ளன. இந்தக் குட்டிகளில் ஒன்றையே படத்தில் காண்கிறீர்கள்.

அமெரிக்காவில் உள்ள ஒரியானா பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியாளர்களே இந்த குரங்கை மரபணு முறையில் உருவாக்கினர். இவ்விதம் குரங்குக் குட்டிகள் உருவாக்கப்பட்டமை இதுவே முதல் தடவையாகும். இதை வைத்து மேலும் ஆராய்ச்சிகள் தொடர்கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# இந்திய – பாக். கிரிக்கெட் போட்டிகளுக்கான ஏற்பாடுகள் துரிதம்

இந்திய - பாகிஸ்தான் அணிகளுக் கிடையிலான டெஸ்ட் கிரிக்கெட் போட்டி கள் எதிர்வரும் மார்ச் மாதம் பாகிஸ்தானில் நடைபெறவுள்ளன.

14 வருடங்களுக்குப் பின்னர் இந்திய அணி முதல் தடவையாக பாகிஸ்தானில் டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றவுள்ளது.

இதனால், பரபரப்பாக எதிர்பார்க்கப்படும் இத்தொடருக்கான ஏற்பாடுகளை பாகிஸ் தான் கிரிக்கெட் சபை துரித கதியில் மேற் கொண்டுவருகிறது.

இறுதியாக 1989 ஆம் ஆண்டு, கிருஷ்ண மாச்சாரி ஸ்ரீகாந்த் தலைமையிலான இந்திய அணி பாகிஸ்தானில் டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றியது.

1997 ஆம் ஆண்டு 3 ஒருநாள் போட்டிகளுக்காக இந்திய அணி பாகிஸ்தா னுக்குச் சென்றது.

பாகிஸ் தானில் நடைபெறும் போட்டிகளில் பங்கு பற்றுவதற்கு இந்திய அணிக்கு இந்திய அரசாங்கம் அனுமதிக்காதிருந்தது.

1999 ஆம் ஆண்டு வஸிம் அக்ரம் தலைமையிலான பாகிஸ்தான் அணி இந்தியாவில் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் பங்குபற்றியது. அதன்பின்னர் அரசியல் மோதல்கள் காரணமாக இந்திய பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் இருதரப்புப் போட்டிகள் நடைபெறவில்லை.

சில வாரங்களுக்கு முன்னர்தான் பாகிஸ்தானுடன் மீண்டும் விளையாட்டு உறவுகளை ஆரம்பிக்க இந்திய அரசாங்கம் அனுமதியளித்தமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டிகள் மூலம் சுமார் 50 கோடி பாகிஸ்தான் ரூபா வருமானம் கிடைக்கும் என பாக். கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை எதிர்பார்க்கிறது.

ஆனால், இப்போட்டிகளுக்காக துரித வேகத்தில் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டிய நிலை ஷஹாரியர் கான் தலைமையிலான, பாக். கிரிக்கெட் சபை அதிகாரிகளுக்கு ஏற் பட்டுள்ளது.

டெஸ்ட் போட்டிகளையா, ஒருநாள் போட்டிகளையா முதலில் நடத்துவது என்பதில் இருநாட்டு கிரிக்கெட் சபைகளுக்கும் முரண்பாடுகள் ஏற்பட்டன.

ஒருநாள் போட்டிகளை கடைசியாக நடத்தினால் பெருமளவு பார்வையாளர்களை ஈர்க்க முடியும் என பாகிஸ்தான் கருதியது.

ஆனால், இந்திய அணியும் பாகிஸ் தான் அணியும் முறையே அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து அணிகள் ஒருநாள் பேட்டிகளில் பங்குபற்றிய பின்னர் பாகிஸ்தானில் மோதவுள்ளன.



ஷஹாரியர் கான்



டால்மியா

அதனால், முதலில் ஒருநாள் போட்டிகளை நடத்துவதே பொருத்தமானது என இந்திய கிரிக் கெட் கட்டுப் பாட்டுச் சபை கருதியது.

எனினும், பின்னர் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் ஜக்மோகன் டால்மியா பாகிஸ்தானின் கோரிக்கைக்குச் சம்மதம் தெரிவித்தார்.

இதற்கிடையில் போட்டி அட்டவணையை விரைவாக அறிவிக்குமாறு பாகிஸ் தான் கிரிக்கெட் சபையை சர்வதேச கிரிக் கெட் கவுன்ஸில் (ஐ.சி.சி.) வற்புறுத்தியது.

பரபரப்பாக எதிர்பார்க்கப்படும் இத்தொடருக்கு உலகில் மிகவும் புகழ்பெற்ற மத்தியஸ்தர், நடுவர்களை நியமிப்பதற்கு ஐ.சி.சி. தீர்மானித்துள்ளது. இதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கே இக்கோரிக்கையை விடுத்தது ஐ.சி.சி.

இதேவேளை, ஏனைய தொடர்களை விட சில விசேட பிரச்சினை களையும் இத் தொடருக் கான ஏற்பாடுகளில் பாக். கிரிக்கெட் சபை எதிர் கொள்கிறது.

"கராச்சி, லாகூர், ராவல்பிண்டி ஆகிய நகரங்களில்தான் போது மான ஹோட்டல் வசதிகள் உள்ளன.

முல்தான், பெஷா வர்ஆகிய நகரங்களில் தலா ஒரேயொரு ஐந்து நட்சத்திர ஹோட்டல் தான் இருக்கிறது.

இரு அணிகளின் வீரர்கள், அதிகாரிகள், போட்டி அதி காரிகள், கிரிக்கெட் சபைகளின் நிர்வாகிகள், உத்தியோக பூர்வ விருந்தினர்கள் ஆகியோருக் காக 50-60 வரையான ஹோட்டல்அறைகள் தேவைப் படும்.

இப்போட்டிகளின்போது நூற்றுக்கு மேற்பட்ட செய்தியாளர்கள் பணியில் ஈடுபடுவர் என எதிர் பார்க்கப்படுகிறது.

இப்போட்டிகளை ஒளிபரப்பும்உரிமை பெற்றுள்ள 'டென் ஸ்போர்ட்ஸ்' நிறுவனம் போட்டி நடைபெறும் ஒவ்வொரு நகரத்திலும் தமது பணியாளர்களுக்காக 70 அறைகள் தேவை என அறிவித்துள்ளது.

இதனால் சில நடைமுறை சிக்கல்களை நாம் எதிர்நோக்குகிறோம்."

- இவ்வாறு பாக். கிரிக்கெட் சபை அதிகாரியொருவர் தெரி வித்துள் ளார்.

### இந்திய ரசிகர்கள்

இதேவேளை ஆயிரக்கணக்கான இந்திய ரசிகர்களும் இப்போட்டிக்ளைப் பார்வையிடுவதற்குச் செல்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

தென்னாபிரிக்கா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் இந்திய அணி போட்டிகளில் போட்டியிடுவதைப் பார்வையிடுவதற் கும் ஆயிரக்கணக்கான இந்திய ரசிகர்கள் சென்றனர்.

இந்நிலையில் அயல்நாடான பாகிஸ் தானில் நடைபெறும் இப்பரபரப்பான போட்டிகளைப் பெரும் எண்ணிக்கையான இந்திய ரசிகர்கள் நேரில் பார்வையிடுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

எல்லைப்புற மாநிலமான பஞ்சாப்பிலிருந்தே அதிக எண்ணிக்கையானோர் செல்லும் வாய்ப்புள்ளது.

புதுடில்லியிலுள்ள பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலயத்துக்கும் இதனால் நெருக்கடிதான்.

"தற்போது 47 பேர் இங்கு பணியாற்றுகின்றனர். இவர்களில் பலர் விஸா பிரிவில் தான் உள்ளனர். ஆனால், சாதாரண விஸா கோரிக்கைகளை கையாள்வதற்கே எமது பணியாளர்களின் எண்ணிக்கை போதுமானதல்ல"

-இவ்வாறு இந்தியாவிலுள்ள பாகிஸ்தான் ராஜதந்திரி ஒருவர் கூறியுள்ளார்.

## விளையாட்டுச் செய்திகள்!

- ஆர்.சேதுராமன்

# ஸ்ரீவ்வோவைக் கொல்ல நினைத்த அக்ரம்!

அவுஸ்திரேலிய வீரர் ஸ்ரீவ்வோ இறுதியாக விளையாடிய இந்தியாவுடனான டெஸ்ட் தொடரில் பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் வஸிம் அக்ரம் தொலைக்காட்சி வர்ணனையாளராகப் பணியாற்றினார்.

"ஸ்ரீவ்வோவுடன்விளையாடிய போட்டிகளில் மறக்கமுடியாத போட்டி எது?" என வஸிம் அக்ரமிடம் வினவப்பட்டது.



ஸ்ரீவ்வோ - வஸிம் அக்ரம்

1999 ஆம் ஆண்டு உலகக்கிண்ண இறுதிப் போட்டியில் வஸிம் அக்ரம் தலைமையிலான பாகிஸ்தான் அணியை ஸ்ரீவ்வோ தலைமையிலான அவுஸ்திரேலிய அணி தோற்கடித்து சாம்பியனாகியது.

ஆனால்,1995 ஆம் ஆண்டில் ராவல் பிண்டியில் நடைபெற்ற போட்டியில் ஸ்ரீவ்வோ விளையாடிய விதம்தான் தன்னால் மறக்க முடியாதது என்கிறார் அக்ரம்.

"அவர் எனது பந்துவீச்சை அடித்தாடவே இல்லை. நான் ஆக்ரோஷமாக பந்துவீசினேன். அவர் ஏராளமான பந்துகளை அதன் வழியே செல்லவிட்டுக் கொண்டிருந்தார். அப்படியும் நீண்ட நேரம் களத்திலிருந்து 98 ஓட்டங்களைப் பெற்றார் ஸ்ரீவ்வோ. பந்து வீச்சாளர் என்ற வகையில், அவரைக் கொல்லவேண்டும்போல் எனக்குத் தோன்றியது.

அப்போட்டியில் போன்று வேகமாக வேறு போட்டிகளில் நான் பந்துவீசவில்லை.

நாம் இருவரும் எப்போதுமே நெருங்கிய நட்புறவுடன் இருக்கவில்லை. ஆனால், தனது அணியை வழிநடத்தும் விதம் குறித்து அவர் மீது நான் மிகுந்த மதிப்பு வைத்திருந்தேன்.

தலைவர் என்ற வகையில் பார்த்தால், அவர் களத் தடுப்பின்போது மிகவும் சாந்தமாக இருப்பார். அவர் முகத்தைப் பார்த்து அவரின் மன நிலையை அறிய முடியாது. அதாவது, அவர் எப்போதும் தன் கட்டுப்பாட்டில் இருக்கிறார் - அழுத்தங்களுக்குள்ளாகவில்லை- என்பதை அதன் மூலம் நாம் அறியலாம்.

எதிரணித் தலைவரை அந்த நிலையில் பார்ப்பதை எவரும் விரும்புவதில்லை.

நான் எதிர்கொண்ட மிகச் சிறந்த வீரர்களில் அவரும் ஒருவர்.

அவரின் கிரிக்கெட் ஆற்றல், களத் தடுப்பாளர்களை நிறுத்தும் விதம், துடுப்பாட்ட வரிசையை மாற்றல், வித்தியாசமான பந்துவீச்சுக் கூட்டணியை அமைத்தல் முதலியனவற்றால் மிகச்சிறந்த அணித் தலைவராக அவரைக் கருதலாம்.

ஸ்ரீவ்வோவின் சொந்த நகரமான சிட்னியில் அவருக்கு அளிக்கப்பட்ட பிரியாவிடை சிறப்பானது. ஒவ்வொரு விளையாட்டு வீரரும் இவ்வாறான பிரியாவிடையைத் தான் எதிர்பார்ப்பர்."

-இவ்வாறு வஸிம் அக்ரம் கூறினார்.

# உலகின் சிரேஷ்ட டெஸ்ட் கிரிக்கெட் வீரரானார் சச்சின்

டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து அவுஸ்திரேலிய அணித்தலைவர் ஸ்ரீவ்வோ ஓய்வு பெற்ற பின்னர், தற்போது விளையாடும் வீரர்களில் அதிக அனுபவமுள்ள டெஸ்ட் வீரர் எனும் பெருமையை இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர் பெற்றுள்ளார்.

1985 ஆம் ஆண்டிலிருந்து 168 டெஸ்ட போட்டிகளில் பங்குபற்றிய ஸ்ரீவ்வோ கடந்த ஜனவரி 6 ஆம் திகதி ஓய்வு பெற்றார்.

இந்நிலையில், தற்போது போட்டிகளில் பங்குபற்றும் டெஸ்ட் வீரர்களில் டெண்டுல்கர்தான் சிரேஷ்ட வீரர்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 31 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடவுள்ள டெண்டுல்கர், 1989 ஆம்ஆண்டு பாகிஸ்தானுடனான போட்டிகள்மூலம் டெஸ்ட் கிரிக்கெட்டிற்கு அறிமுகமானார்.

கராச்சி நகரில் 1989 நவம்பர் 15 முதல் 20 ஆம் திகதிவரை இப்போட்டி நடைபெற்றது.

இதுவரை 111 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளார் டெண்டுல்கர்.

தற்போது விளையாடும் வீரர்களில் டெண்டுல்கர்தான் அதிக போட்டிகளில் விளையாடியவர்; அதிக ஓட்டங்களைக் குவித்தவர்; அதிக சதங்களை விளாசியவர். டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகள் இரண்டிலும் டெண்டுல்கரே இவ்விடயங்களில் முன்னிலை வகிக்கிறார்.

தற்போது விளையாடும் வீரர்களில் டெண்டுல்கருக்கு அடுத்து நியூஸிலாந்தின் கிறிஸ் கெய்ன்ஸ், இலங்கை அணித்தலைவர் ஹஷான் திலகரட்ன ஆகியோர் மாத்திரமே 14 வருடங்களுக்கு மேலாக டெஸ்ட் கிரிக்கெட் களத்தில் உள்ளனர்.

டெண்டுல்கர் அறிமுகமாகி இரு வாரங்களுக்குப் பின்னர், 1989 நவம்பர் 24-28 வரை நடைபெற்ற அவுஸ்திரேலியாவுடனான டெஸ்ட் போட்டியில் அறிமுகமானவர் கெய்ன்ஸ்.

காயங்களால் அடிக்கடி பாதிக்கபட்ட கெய்ன்ஸ் 56 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளார்.

1989 டிசெம்பர் 16-20 ஆம் திகதிகளில் ந ஹோபார்ட் நகரில் நடைபெற்ற அவுஸ்திரேலிய அணியுடனான போட்டி மூலம் டெஸ்ட் கிரிக்கெட்டிற்கு அறிமுகமான ஹஷான் திலகரட்ன 80 டெஸ்ட் போட்டி களில் விளையாடி 4,373 ஓட்டங்களைப் பெற் றுள்ளார்.

1990 ஜனவரி மாதம் அறிமுகமான பாகிஸ்தான் வீரர் முஸ்தாக் அஹமட் 52 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளார்.

ஷேன்வோர்ன் (107), பிரையன் லாரா (102) ஆகியோரும் நூறு டெஸ்ட் போட்டிகளைக் கடந்த பின்னரும் இன்னும் ஓய்வு பெறாத வீரர்களாவர்.

இவ்வரிசையில் அடுத்து கெரி கேர்ஸ்டன் (98 - மேற்கிந்திய அணியுடனான நான்காவது டெஸ்ட் உட்பட), கிளென் மெக்ராத் (95), இன்ஸமாம் உல் ஹக் (91), நசார் ஹுஸைன் (91) ஆகியோர் உள்ளனர்.

டெண்டுல்கர் இதுவரை 32 டெஸ்ட் சதங்கள் உட்பட 9,265 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். தற்போது விளையாடும் வீரர்



சச்சின் டெண்டுல்கர்

களில் டெண்டுல்கரும், லாராவும் (9,117) மாத்திரமே 8,000 ஓட்டங்களைக் கடந்த வீரர்களாவர்.

ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில், டெண்டுல்கர் கடந்தவாரம் வரை 34 சதங்கள் உட்பட 12,92 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

தற்போது விளையாடும் ஏனைய வீரர்களில் இன்ஸமாம் உல் ஹக் (9,389), சனத் ஜயசூரிய (9,172), சௌரவ் கங்குலி (9,049) ஆகியோர் அடுத்த இடங்களில் உள்ளனர்.

கடந்தவாரம்வரை சர்வதேச (டெஸ்ட் மற்றும் ஒருநாள்) போட்டி களில் மொத்த மாக 68 சதங்களைப் பெற்றிருந்தார் டெண்டுல்கர்.

ஸ்ரீவ்வோ போன்று டெண்டுல்கர் 38 வயதுவரை விளையாடினால், சதங்களின் எண்ணிக்கையிலும்டெண்டுல்கர் ஒரு சதத்தைப் பெறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிபதி முன்னால் வைத்து துப்பாக்கிதாரியின் தீர்ப்பு!

படுகொலைகளுக்கும், குண்டு வெடிப்புகளுக்கும், துப்பாக்கிச் சண்டைகளுக்கும் இலங்கை பெயர் பெற்ற நாடாகிவிட்டது. உலகில் எங்கேயாவது ஒரு மூலையிலிருப்பவர்கள் கூட இலங்கை என்றவுடன் ஒரு பயங்கரமான நாடு என்று நினைக்கத் தோன்றும் அளவுக்கு இலங்கை கொலைகள் மலிந்த நாடாக மாறிவருகிறது.

போதைவஸ்து கடத்தல், ஆள்கடத்தல், போலி நோட்டு அச்சடித்தல், ஆயுத விற்பனை என பல்வேறு குற்றச் செயல்களில் சர்வதேச ரீதியாக இயங்கிவரும் ஒரு பயங்கரவாத அமைப்பு மாபியா அமைப்பாகும்.

பயங்கரவாத அமைப்பான மாபியா பாணியிலேயே இலங்கையில் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. இலங்கையில் கடந்த சில வருடங்களாக தலைவிரித்தாடும் பாதாள உலகக் கோஷ்டிகளின் அடாவடித்தனங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியாத திரிசங்கு நிலையில் பொலிஸ் தலைமையகம் திண்டாடுகிறது.

நாளுக்கு நாள் கொலைகள் அதிகரிக்கின்றன. எந்த இடத்தில் என்ன நடக்கும் என்று சொல்ல முடியாத நிலை. அந்த அளவுக்கு பாதாள உலகத்தினர் கோலோச்சுகின்றனர்.

இறுதியாக அந்தக் கொலைகளின் தொடர்ச்சி, கொழும்பு ஹல்ஸ்டோப் நீதிமன்றக் கட்டடத்துக்குள் நீதிவான் முன்னிலையில் நடைபெற்றுள்ளது. கொலை செய்யப்பட்டவர் பிரபல பாதாள உலகத் தலைவர் தம்மிக அமரசிங்க.

தம்மிக அமரசிங்க என்பவர் பிரபலமடைந்ததற்குக் காரணம் அவரது சகோதரரான சிந்தக்க என்ற பாதாள உலகத் தலைவரே. 1996ஆம் ஆண்டு கொழும்பு கிராண்ட்பாஸ் பகுதியில் வைத்து மற்றொரு பாதாள



நீதிமன்றத்தில் தம்மிக அமரசிங்க. கமெராவுக்கு தப்புவதற்காக துணியால் முகத்தை மூடுகிறார்.

உலகத்தினரால் சிந்தக்க சுட்டுக் கொல்லப்பட்டார். சிந்தகவை சுட்டுக் கொன்றவரைப் பழி தீர்ப்பதற்காக அவரின் பிணத்தின் மேல் சபதம் செய்துவிட்டுப் புறப்பட்டவர்தான் தம்மிக. அத்துடன் கொந்தராத்து அடிப்படையில் தம்மிக பல கொலைகளைச் செய்தார் என பொலிஸ் தலைமையகம் தெரிவிக்கிறது. தம்மிக சுமார் முப்பது கொலைகளுக்கு காரணகர்த்தா எனக் கூறப்படுகிறது. ஆனால், இந்த எண்ணிக்கை அதிகம் என்கின்றனர் புலனாய்வாளர்கள்.

மிகவும் பிரபல்யமான பாதாள உலகத் தலைவர்களான கடுவெல வசந்த, களு அஜித், நாவல நிஹால், கிருஸ்தோபர் தம்மிக, மொறட்டுவ சமன் போன்றோருடன் தம்மிக அமரசிங்க ஆரம்ப காலத்தில் மிகவும் அன்யோன்யமாக செயற்பட்டு பின்பு அவர்களுடன் முரண்பட்டார் என்றும்—

தனியான ஒரு பாதாள உலகக் கும்பலை அமைத்து செயற்பட்டு வந்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பெத்தேகான என்ற பகுதியில் வைத்து சஞ்சீவ என்ற பாதாள உலகத் தலைவரை சுட்டுக்கொன்றதற்காக தம்மிகவை தான் பழி தீர்த்ததாக தம்மிகவை கொலை செய்த துப்பாக்கிதாரியான முன்னாள் இராணுவ கோப்ரல் தெரிவித்துள்ளார்.

தம்மிக கடந்த அரசு காலத்தில் பல முக்கிய அமைச்சர்களின் கையாளாகச் செயற்பட்டவர் எனவும் முக்கிய பொறுப்பு வகித்த அமைச்சர் ஒருவரின் பிரதான பாதுகாவலராக செயற்பட்டார் எனவும் கூறப்படுகிறது.

அண்மைக்காலத்தில் தம்மிக ஊடகங்கள் வாயிலாக மிகவும் பிரபல்யமடைந்திருந்தார். 1999ஆம் ஆண்டு உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியின்போது இலங்கைக் கிரிக்கெட் சபைத் தலைவர் திலங்க சுமதிபாலவின் உதவியுடன் போலி கடவுச் சீட்டு பெற்று லண்டன் சென்று திரும்பினார் என்பதும் தம்மிக மீதான குற்றச்சாட்டு ஆகும். இப்படியான பின்னணிகளில் தம்மிகவின் பெயர் பிரபல்யமானது. பொலிஸாரால் பல கொலைக் குற்றச்சாட்டுகளுக்காக தம்மிக தேடப்பட்டபோதும் அவரை நெருங்குவதற்கு பொலிஸார் பின் வாங்கினர்.

ஆயுதப் பலமும், அரசியல் பலமும், ஆட்பலமும் தம்மிகவிடம் இருந்தன. நீண்டகாலமாக அவர் தேடப்படும் பட்டியலில் இருந்தபோதும் அவர் ஓரளவு சுதந்திரமாகத் திரிந்தார். வெளிநாடுகளுக்குச் சென்று தலைமறைவாக இருந்தார். இறுதியில் கடந்த வருடம் நீதிமன்றில் சரணடைந்து பல வழக்குகளுக்கு முகம் கொடுத்து வந்தார். இப்படியான சூழ்நிலையில் அவரைக் கொலை செய்வதற்காக பல பாதாள உலக நபர்கள் தருணம் பார்த்திருந்தனர். இதன் காரணமாக அவருக்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

எப்படியான பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தபோதும் அவரை யாராலும் காப்பாற்ற முடியவில்லை. சட்டத்தரணிகள் அணியும் உடையுடன் காலன் நீதிமன்றுக்குள் நுழைந்து நீதிபதி முன்னால் வைத்து தனது தீர்ப்பை நிறைவேற்றினான்.

பொலிஸாரிடம் பிடிபட்ட முன்னாள் இராணுவ கோப்ரலான அந்த துப்பாக்கிதாரி ''எனது கடமை முடிந்தது. என்னை என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள்!'' என்றான். தனி நபர்களிடம் உள்ள ஆயுதங்கள் களையப்படும் வரை இப்படியான சம்பவங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியாது.

—ஆ.வரதன்—

# ராசி பலன்

**25—01—2004 முதல் 31—01—2004 வரை 'ராசி பலன்'**

**பொ. சந்திரன்**

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**

இராசிநாதன் செவ்வாய் ஆட்சியாக இருப்பது விசேஷம். செவ்வாய் கேதுவின் நட்சத்திரமான அச்சுவினியில் சஞ்சாரம் செய்கிறான். கேது கெட்ட கிரகமானாலும் 7இல் இருப்பதால் நன்மை செய்யும். மேலும் குரு இராசியைப் பார்ப்பதால் நல்ல பலனை எதிர்பார்க்கலாம். எடுத்த முயற்சி நல்லமுறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. (2,7) உரிய சுக்கிரன் 11இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். திருமண வாய்ப்பு உண்டு. கேது 7இல் இருப்பதால் குடும்பத்தில் அமைதி இருக்காது. 4ஆம் வீட்டை செவ்வாய், சுக்கிரன், சூரியன் ஆகிய கிரகங்கள் நோக்குவதால் வீடு, வாகனம் லாபம் தரும். 10 இல் சூரியன் இருப்பதால் தொழில்துறை முன்னேறும். அரசு உதவி கிடைக்கலாம். பக்க உதவிகளும் கிடைக்கும்.

**இடபம் : கார்த்திகை 2,3,4. ரோகிணி, மிருகசீரிடம் 1,2.**

இராசிக்குரிய சுக்கிரன் 10இல் இருப்பது விசேஷம். குருவின் நட்சத்திரமான பூரட்டாதியில் சஞ்சரிப்பது மேலும் நல்ல பலனை எதிர்பார்க்கலாம். உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். (2,5) உரிய புதன் 8இல் மறைவதால் கையில் பணம் இருக்காது. 4இல் குரு இருந்தாலும் சனி பார்ப்பதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். (7,120 உரிய செவ்வாய் 12இல் இருந்தாலும் ஆட்சியாக இருப்பதால் திருமண வாய்ப்பு உண்டு. செவ்வாய் ராகுவோடு இருப்பதால் குடும்பத்தில் அமைதி இருக்காது. பத்துக்குரிய சனி இரண்டில் இருப்பதால் தொழில்துறை முன்னேறும். மேலும் ராசிநாதனை குரு பார்ப்பதால் நல்ல பலனை எதிர்பார்க்கலாம்.

**மிதுனம்: மிருகசீரிடம்3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

(1,4) உரிய புதன் 7 இல் இருப்பதும் மிகவும் நல்ல பலனைத் தரும். மேலும் சூரியனின் நட்சத்திரமான உத்தராடத்தில் சஞ்சரிப்பது மத்திமபலனைத்தான் கொடுக்கும். சனிராசியில் இருப்பது ஒரு பிரச்சினைதான். எடுத்த முயற்சி தாமதமாகலாம். உடல் ஆரோக்கியம் உண்டு. இரண்டாம் வீடு சுத்தமாக இருப்பதால் கையில் பணம் இருக்கும். 4க் குரிய புதனைச் சனி, குரு பார்ப்பதால் வீடு, வாகனங்களால் லாபம் இருக்காது. (7,10) உரிய குரு மூன்றில் இருப்பதால் திருமணவாய்ப்பு தாமதமாகலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. தொழில் துறையில் முன்னேற்றம் இருக்காது. ஐந்தாம் வீட்டுக்குரிய சுக்கிரன் 9இல் இருப்பதால் அதிஸ்டம் இருக்கும். தெய்வீக அருள் கிட்டும்.

கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.

**இராசிக்குரிய சந்திரன் கும்பம் முதல் மேடம் வரை சஞ்சரிப்பதும் ராசியை செவ்வாய், சுக்கிரன், சூரியன் ஆகிய கிரகங்கள் பார்த்தும் நல்ல பலனை எதிர்பார்க்கலாம். எடுத்த முயற்சி நல்லமுறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. இரண்டக்குரிய சூரியன் 7இல் இருப்பதால் கையில் பணம்இருக்கும். 4க்குரிய சுக்கிரன் 8இல் இருப்பதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். 7க் குரிய சனி 12இல் இருப்பதால் திருமண வாய்ப்பு தாமதமாகலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. இருப்பினும் இரண்டாம் வீடான குடும்பத்தானமான இரண்டாம் வீட்டில் குரு இருப்பதால் திருமணவாய்ப்பு இருக்கலாம். 10இல் செவ்வாய் ஆட்சியாக இருப்பதால் தொழில்துறை முன்னேறும்.**

**இவ் வார கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| | செவ்வாய் ராகு | | சனி |
| சுக் | | | |
| சூரியன் | | | குரு |
| புதன் | | கேது | |

தை 11 முதல் தை 17 வரை

சந்திரன் கும்பம் முதல் மேடம் வரை.

சிங்கம் மகம், பூரம், உத்தரம் 1.

இராசிநாதன் சூரியன் 6இல் இருப்பது நல்லதல்ல. ஆனால், சந்திரனின் நட்சத்திரமான திருவோணத்தில் சஞ்சரிப்பது நல்லது. இராசியில் குரு இருப்பது நல்லதல்ல. சனி இராசியைப் பார்ப்பது கூடாது. எடுத்த முயற்சி தடைப்படலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். மன அமைதி இருக்காது இரண்டுக்குரிய புதன் 5இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். (4,9) உரிய செவ்வாய் ஆட்சியாக இருப்பதால் பெற்றோர் நலம். வீடு, வாகனம் லாபம் தரும். பத்துக்குரிய சுக்கிரன் 7இல் இருப்பதால் தொழில்துறை முன்னேறும். 7க்குரிய சனி 11இல் இருப்பதால் திருமண வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். ராசியில் குரு இருப்பது அவ்வளவு சிறந்தது இல்லை. முன்னேற்றம் தடைப்படலாம்.

கன்னி: உத்தரம்2,3,4. அத்தம், சித்திரை 1,2.

(1,10) உரிய புதன் நாலில் இருப்பது மிகவும் நல்லது மேலும் சூரியனின் நட்சத்திரமான உத்தராடத்தில் சஞ்சரிப் பது நல்ல பலனைக் கொடுக்கும். உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சிகள் நல்ல முறையில் அமையும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சுறுசுறுப்போடு இயங்கும் மனோநிலை இருக்கம். (2,9) உரிய சுக்கிரன் 8இல்இப்பது கையில் பணம்இருக்காது. பிதாவுக்கு நல்லதல்ல (4,7) உரிய குரு 12இல் மறைவது வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாதாவிற்கு கூடாது. திருமணவாய்ப்பு பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி நிலவும். 10இல் சனி இருப்பதால் தொழில்துறை முன்னேறும். குரு, சுக்கிரன் ஆகிய சுபக்கிரகங்கள் மறைவது ஒரு குறை.

துலாம்: சித்திரை3,4, சுவாதி, விசாகம் 1,2,3.

(1,8) உரிய சுக்கிரன் 5இல் இருப்பது மிகவும் நல்லது. குருவின் நட்சத்திரமான பூரட்டாதியில் சஞ்சரிப்பது மேலும் நல்ல பலனைத் தரும். உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சிகள் நல்ல முறையில் அமையும். ராகு, கேதுக்களின் தொடர்பு இராசிக்கு இருப்பது ஒரு குறை. (2,7) உரிய செவ்வாய் ஆட்சியில் இருப்பதால் கையில் பணம் இருக்கும். திருமணவாய்ப்பு உண்டு. 7இல் குரு இருப்பதால் குடும்பத்தில் அமைதி இருக்காது. (4,5) உரிய சனி 9இல் இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். 10ஆம் வீடு சுத்தமாக இருப்பதால் தொழில்துறை முன்னேறும். இராசியைக் குரு பார்த்திருப்பதால் மிக நல்ல பலனை எதிர்பார்க்கலாம்.

விருச்சிகம் 4, அனுஷம், கேட்டை.

(1,6)உரிய செவ்வாய் 6இல் ஆட்சியாக இருப்பதால் நல்ல பலனை எதிர்பார்க்கலாம். ஆனால், ராகுவோடு கூடி இருப்பது ஒரு குறை. கேதுவின் நட்சத்திரமான அச்சுவினியில் சஞ்சரிப்பதும் ஒரு குறை. எடுத்த முயற்சிகள் தாமதமாகலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். (2,5) உரிய குரு 10இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். குழந்தைகளின் செயற்பாடு திருப்தி தரும். (3,4) உரிய சனி 8இல் இருப்பதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தும். தாய்க்கு கூடாது. சகோதரருக்கும் நல்லதல்ல. (7,12) உரிய சுக்கிரன் 4இல் இருப்பதால் திருமணவாய்ப்பு உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். 10இல் குரு இருப்பதால் தொழில்துறை முன்னேறும்.

தனு மூலம், பூராடம், உத்தராடம்1

(1,4) உரிய குரு 9இல் இருப்பது மிகவும் நல்ல பலனைத் தரும். சுக்கிரனின் நட்சத்திரமான பூரத்தில் சஞ்சரிப்பது நல்லது. ஆனால், வக்கிரகதி அதாவது பின்னோக்கி நகர்வது நல்லதல்ல. எடுத்த முயற்சிகள் நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியமும் உண்டு. வீடு, வாகனம் லாபம் தரும். பெற்றோருக்கு நல்ல காலம். இரண்டுக்குரிய சனி 7இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். (7,10) உரிய புதன் இராசியில் இருப்பது திருமணவாய்ப்பு உண்டு. தொழில்துறை முன்னேறும். 7இல் சனி இருப்பதால் குடும்பத்தில் அமைதி இருக்காது. இராசியில் புதன் இருப்பதால் சுறுசுறுப்புடன் இயங்கக் கூடிய தன்மை உருவாகும்.

மகரம் உத்தராடம் 2,3,4 திருவோணம்,அவிட்டம்1,2.

(1,2) உரிய சனி 6 இல் இருப்பது பரவாயில்லை. 6ஆம் வீட்டில் சனி நன்கு செயற்படக்கூடியவர். ராகுவின் நட்சத்திரமான திருவாதிரையில் சஞ்சரிப்பதும் நல்ல பலனைத்தரமாட்டார். மேலும் வக்கிரகதி அதாவது பின்னோக்கி நகர்வதும் கூடாது. எடுத்த முயற்சி தாமதமாகலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். இரண்டில் சுக்கிரன் இருப்பதால் கையில் பணம் இருக்கும்.(4,11) உரிய செவ்வாய் ஆட்சியாக இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். 7ஆம் வீடு சுத்தமாக இருப்பது நல்லது குரு 8இல் இருப்பதால் திருமணவாய்ப்பு பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி நிலவும். 10க்குரிய சுக்கிரன் இரண்டில் இருப்பதால் தொழில்துறை முன்னேறும்.

கும்பம் அவிட்டம் 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3

(1,12)உரிய சனி 5இல் இருப்பதால் நல்ல பலனைச் செய்யமாட்டாது. மேலும் ராகுவின் நட்சத்திரமான திருவாதிரையில் சஞ்சரிப்பதும் சரியில்லை மற்றும் வக்கிரகதி அதாவது பின்னோக்கி நகர்வதும் நல்லதல்ல. எடுத்த முயற்சி தாமதமாகலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். (2,11) உரிய குரு 7இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். 7க்குரிய சூரியன் 12 இல் மறைந்தாலும் 7இல் குரு இருப்பதால் திருமணவாய்ப்பு உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். (4,9) உரிய சுக்கிரன் இராசியில் இருப்பதால் பெற்றோர் நலம். வீடு, வாகனம் லாபம் தரும். அதிஷ்டம் உண்டு. 10க்குரிய செவ்வாய் ஆட்சியாக இருப்பதால் தொழில்துறை முன்னேறும்.

மீனம் பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி

(1,10) உரிய குரு 6 இல் இருப்பது நல்லதல்ல. அத்தோடு வக்கிரகதியில் செயற்படுவதும் கூடாது. ஆனால், சுக்கிரனில் நட்சத்திரமானது பூரத்தில் சஞ்சரிப்பது ஓர் அளவு ஆறுதல் உண்டு. எடுத்த முயற்சிகள் தாமதமாகலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். (2,9) உரிய செவ்வாய் ஆட்சியாக இருப்பதால் கையில் பணம் இருக்கும். (4,7) உரிய புதன் 10இல் இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். திருமணவாய்ப்பு உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். 10இல் புதன் இருந்தாலும் சனி பார்ப்பதால் தொழில்துறை பாதிக்கலாம். குரு, சுக்கிரன் ஆகிய சுபக்கிரகங்கள் மறைவது பெரிய குறை. முன்னேற்றங்கள் தாமதமடையலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் அறிமுக விழா

திருகோணமலையில் மூன்று நூல்களின் வெளியீட்டு விழா கடந்த 4 ஆம் திகதி திருகோணமலை நகரசபை மண்டபத்தில் வேதாகம மாமணி சோ.இரவிச்சந்திரக் குருக்களின் மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமானது.

வளர்ந்து வரும் எழுத்தாளர் எஸ்.செல்வகுமாரின் தொகுப்பில் ''இலங்கையின் இருபத்தெட்டுச் சிறுகதைகள்'', கவிஞர் புரட்சி பாலனின் ''புரட்சி பாலன் கதைகள்'' புரட்சி பாலனின் நாவலான ''கொம்புத்தேன்'' ஆகிய மூன்று நூல்கள் வெளியிட்டு வைக்கப்பட்டன.

எழுத்தாளர் ஏ.சோதிலிங்கம் நிகழ்வுக்குத் தலைமை வகித்தார். திருகோணமலை இலக்கிய ஒன்றியம், மணிமேகலைப் பிரசுரமாக நூல்களை வெளியிட்டுள்ளது.



இலங்கையின் 28 சிறுகதைகள் தொகுப்பில் இணைந்து கொண்ட எழுத்தாளர் சிலர் நிகழ்வில் கலந்து கொண்டுள்ள அதிதிகளுடன் காணப்படுகின்றனர்.

கிழக்குப் பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் செ.யோகராசா, புலோலியூர் க. சதாசிவம் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக்கலந்து கொண்டனர்.



வேதாகமாமணி பிரம... குருக்கள் ... ஒன்றியத்... குமாரிடமிருந்து முதற்பிரதியைப் பெறுகின்றார்.

கலாசார திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் திருமதி என். ஸ்ரீதேவி, இளைஞர் சேவை அதிகாரி சி.யோகேஸ்வரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

''இலங்கையின் இருபத்தெட்டு சிறுகதைகள் தொகுப்பு'' நூலை கலாநிதி செ.யோகராசா அறிமுகம் செய்து வைத்தார்.

''இலைமறை காயாக இருக்கும் எழுத்தாளர்களை வெளிக்கொணரும் செயற்பாடு முக்கியத்துவம் வாய்ந்தது.

இந்த நூலில் அவலம், வறுமை என்பவற்றோடு தமிழ் — முஸ்லிம் இன உறவு குறித்தும் எழுதப்பட்டுள்ளது. யுத்தக் கொடூரத்தால் விதவைகளான பெண்கள் ஒழுக்க நெறிக்கு தூண்டப்படுவதும், வறுமை காரணமா ஒழுக்க நெறி பிறழ்வுக்கு தூண்டப்படுவதும் வடிக்கப்பட்டுள்ளன.'' என்று அறிமுக உரையில்செ. யோகராசா குறிப்பிட்டார்.

கவிஞர் புரட்சி பாலன் எழுதிய ''புரட்சிபாலன் கதைகள்'' சிறுகதைகள் நூலைப்பற்றி எழுத்தாளர் ஏ.சோதிலிங்கம் அறிமுகம் செய்தார்.

''இவை வழிகாட்டல் கதைகள் என்று சொல்லலாம்.

கன்னத்தில் முத்தமிட்டால் போன்ற கதை ஒன்று ஈழத்து எழுத்தாளரால் 40 வருடங்களுக்கு முன்பே வெறிவந்துவிட்டது.

அவ்வாறே பல கதைகளுக்கு இலங்கை எழுத்தாளர்கள் முன்னோடிகளாக இருக்கின்றனர்'' என்று கூறினார்.

கவிஞர் புரட்சி பாலனின் ''கொம்புத்தேன்'' நாவலுக்கு அங்கு திறனாய்வ... இடம் பெற... வில்லை என்றே குறிப்பிட வேண்டும்.

உதவிப் பணிப்பாளர் திருமதி என்.ஸ்ரீதேவி சிறப்புரை ஆற்றும்போது... இது தனிப்பட்ட சில...ரின் கதை அல்ல... ஈழத்து எழுத்தாளர்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் கதைகள் ஆகவே தனித்துவம் பேணப்பட வேண்டியது அவசியமாகின்றது என்று கூறினார்.



கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி செ.யோகராசா விமர்சனம் செய்கின்றார்.

கவிஞர்புரட்சிபாலன் தனது கருத்துரையில்: ''இன, மத, ஒடுக்கு முறைகள் ஒழிந்து அரசியல், இலக்கியம் எதிலும் இவ்வாண்டில் சமாதானம் கிடைக்க வேண்டும்'' என்றார்.

இறைபணிச் செம்மல் காந்தி ஐயா, நாவலாசிரியை என். பாலேஸ்வரி உள்ளிட்ட பலர் இதில் பங்குபற்றி சிறப்பித்தனர்.

இங்கு மூன்று நூல்கள் வெளியிடப்பட்டாலும் எதுவும் திறனாய்வுக்கு உட்படுத்தப்படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

வெறும் அறிமுகம் என்று சொல்லலாம். அதுவும் ஒரு நூலுக்கு நடக்கவில்லை.

இலக்கிய வெளியீட்டுக்கு இலக்கிய ஆர்வலர்கள், படைப்பாளிகள் கூட முக்கியத்தும் வழங்கவில்லை என்றால் சாதாரண மக்கள் மீது எப்படி குறை சொல்வது.

எஸ்.எஸ்.ஆர்.
— அச்சுதன் —



நகரசபையின் முன்னாள் செயலர் ஏ.சோதிலிங்கம் தலைமையுரை ஆற்றுவதையும், கவிஞர் புரட்சி பாலன் அறிமுகவுரையோடு வரவேற்பு உரை நிகழ்த்துவதையும் படத்தில் காணலாம்.

## எழுத்தாளர் நூல் கண்காட்சியும் விற்பனையும்





தேசிய கலை இலக்கிய பேரவையின் 30 ஆவது ஆண்டை முன்னிட்டு இலங்கை எழுத்தாளர்களின் நூல் கண்காட்சியும் விற்பனையும் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் இடம் பெற்றன. ''புத்தக பண்பாட்டுத் திருவிழா'' என்ற தொனிப் பொருளில் பல்வேறு நூல்கள் வெளியிடப்பட்டன. ஆரம்ப நாளன்று கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் பெ. விஜயரத்தினம் மாலை அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்படுகிறார். அருகில் தமிழ்ச் சங்க பிரமுகர்கள் காணப்படுகின்றனர்.

## ''ஊடகத்தின் தசாப்த நினைவுகள்''

கே.டி.பிரஸாதஇன் 10ஆவது ஆண்டு தொலைக்காட்சி தயாரிப்புத் துறையை முன்னிட்டு ''ஊடகத்தின் தசாப்த நினைவுகள்'' எனும் நிகழ்ச்சி அண்மையில் நடைபெற்றது. பிரதம அதிதியான புரவலர் ஹாஷிம் உமர் மங்கள விளக்கேற்றி நிகழ்வினை ஆரம்பித்து வைப்பதையும் ஜே.பி. ஜெயராம், விழாவில் கௌரவிக்கப்பட்ட வானொலி, தொலைக்காட்சிக் கலைஞர்களான பி.எச்.அப்துல் ஹமீத், எஸ். விஸ்வநாதன், பாடகர் முத்தழகு மற்றும் கே.டி.பிரஸாத், தொழிலதிபர் ஏ.கந்தசாமி ஆகியோரையும் படங்களில் காணலாம்.

(படம் பீ.எம்.ஏ.சலரஹூத்)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறும்பு



மேலே உள்ள படத்தைப் பாருங்கள். ஒரு பெண் அஷ்ட கோணலாக முகத்தை வைத்திருப்பதை பார்க்கிறீர்கள். படத்தை பார்த்து விட்டு என்ன நினைத்தீர்கள்... ஒரு பெண் ஏதோ முகத்தை நெளித்து ஏளனம் செய்வதாக நினைத்திருப்பீர்கள். சிலர் ஏதோ தொடர்ந்து இவ்வாறு செய்து உலக சாதனை புரிகிறார் என்று நினைத்திருப்பீர்கள். இன்னும் சிலர் ஏதோ இந்த படத்தில் சூட்சுமம் இருப்பதாக நினைத்து கூர்ந்து பார்த்திருப்பீர்கள்... ஆனால், அப்படி எதுவுமே இல்லை. தினமும் பெண்கள் காலையில் எழுந்ததும் இவ்வாறாக முகத்தை சுளித்துப் பயிற்சி செய்தால் முகம் அழகு பெறும் என்று இணையத் தளம் ஒன்று அழகு குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்தப் படம் தான் இது.

## ஜோக்

அப்பாவுடன் பாடசாலையிலிருந்து வந்த ஒரு சிறுமி அம்மாவைக் கண்டதும் ஓ...! என்று அழுதபடி ஓடிவந்தாள். சிறுமியைத் தூக்கி சமாதானப்படுத்திய தாயார் ஏன் அழுகிறாய் என்று கேட்டார்.

"அம்மா... அம்மா... அப்பாவோடை பஸ்ஸில வந்து கொண்டிருந்த போது திடீரென ஒரு அன்ரியை கண்ட அப்பா - என்னை எழும்பி நிற்கச் சொல்லிவிட்டு அந்த இடத்தில் அந்த அன்ரியை உட்கார வைத்து விட்டாரம்மா." என்று சொல்லி தேம்பி தேம்பி அழுதாள் சிறுமி.

இதனைக் கேட்ட தாயார் சிறுமிக்கு புத்திமதி சொன்னார். "அப்பா செய்தது நல்ல விஷயம் தானே...! அதே போல நீயும் இனிமேல் செய்ய வேண்டும்... உன்னை விட வயதிலே பெரியவர்களை கண்டால் உடனே எழுந்து நீ இருந்த இடத்தை அவர்களுக்கு கொடுத்து அவர்களை உட்கார வைக்க வேண்டும். அது தான் நல்ல பழக்கம். அப்பா உனக்கு நல்ல பழக்கத்தைப் பழக்க வேண்டும் என்பதற்காகத்தான் இப்படிச் செய்தார்... இதனையிட்டு நீ சந்தோஷப்பட வேண்டும்.. அழக் கூடாது" என்று சொன்னார்.

புத்திமதியை சிணுங்கியபடி கேட்டுக் கொண்டிருந்த சிறுமி சொன்னாள்... "அம்மா... பஸ்ஸிலே நான் இருந்தது அப்பாவின் மடியில் தான்."





## மர முகம்



பார்த்தால் மரத்தை போல இருக்கிறது. கொஞ்சம் கூர்ந்து பார்த்தால் முகத்தை போலவும் இருக்கிறதா? பார்த்து ரசிக்க இது..


## நெட் கற்பனை



## மாறும் முகம்

அடடா இப்படி ஒரு வசதி இருக்குமாக இருந்தால் எவ்வளவு நல்லது. கடன் காரர்களுக்கு ஒளித்து தலையிலே துண்டை போட்டுக் கொண்டு அலையும் தேவையே இல்லை. ஒவ்வொரு நாளுக்கும் ஒவ்வொரு முகம்...

## சத்தம் இல்லாமல் சிரிப்பு






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலா? ஐயோ வேண்டாம்!

மஞ்சு சொன்ன வார்த்தையைக் கேட்டவுடனே என்னால் நம்பவே முடியவில்லை. என் நெஞ்சிலே பாலை வார்த்த மாதிரி இருந்தது. அப்படி என்ன தான்மஞ்சு சொல்லிவிட்டாள் என்று கேட்கிறீர்களா?

இன்றைக்கு அல்லது நாளைக்கு தனக்காக மந்திகை சந்தியிலை நில்லுங்கள் என்றாள். அவள் சொல்லும்போதே அது "அதுவாகத்தான்" இருக்கும் என்டு நினைத்துக் கொண்டேன்.

இப்படித்தான்சிநேகா என்ற ஒருத்தியை நான் காதலிக்கப் பட்ட பாடு...அதை இப்ப நினைச்சாலும் எனக்கு சரியான மன வேதனை பாருங்கோ.

சிநேகா என்டவுடனே நீங்கள்நடிகை சிநேகா மாதிரி என்டு கற்பனை செய்து போடாதேங்கோ.

இருந்தாலும் ஆள் சும்மா பரவாயில்லை. சாடையான பல்லு மிதப்பு. கண் ரெண்டும் நெல்லிக்காய் மாதிரி.

சிநேகாவைப் பார்த்த முதல் நாளே எனக்கு அவளை ரொம்ப ரொம்ப பிடிச்சுப் போட்டுது. அதை எப்படியாவது அவளிடம் சொல்லுவம் என்றால்சந்தர்ப்பம்சூழ்நிலை இன்னும்சரியா அமையவில்லை.

நானும் அவளை விடுற பாடாய் இல்லை. முன்னாலையும் பின்னாலையும் நாய் மாதிரி திரிஞ்சு களைத்துப்போனேன்.

ஒரு நாள் இப்படித்தான் என் சிநேகாவுக்குப் பின்னாலை "என்னவளே அடி என்னவளே..." என்று பாடிக்கொண்டு போனேன். அவளும் என்னைக் கடைக் கண்ணால் பார்த்து சிரித்துக்கொண்டு போனாள். போனவளின் சைக்கிள் திடீரென்று வேகமாக ஓட வெளிக்கிட்டுது.

நானும் கலைப்பம் என்று எழும்பி உழக்கினேன். ஆனால் கொஞ்சம் கூட அசைய மறுத்திட்டுது.

பின்னால திரும்பிப் பார்த்தேன். ரெண்டு தடியன்கள் சைக்கிள் கரியரை பிடித்து வைத்துக்கொண்டு நின்றாங்கள்.நான் டபக் கென்று இறங்கி "ஏன் அண்ணை சைக்கிள் கரியரை பிடித்துக் கொண்டு நிக்கிறியள். ஏதும் வலிப்பு கிலிப்பு வந்துட்டுதோ என்று கேட்டேன்.

கேட்டது தான் தாமதம்."என்னடா என்ர மகளுக்கு பின்னாலை திரியிறதும் இல்லாம நக்கல் வேறயா?" — எண்டு ரெண்டு பேரும் ஆள் மாறி ஆள் கோயில் மேளத்திலை அடிக்கிற மாதிரி எனக்கு மொத்து மொத்தென்று மொத்திப்போட்டு, இனி அடிக்க இயலாது என்ற கட்டத்திலை விட்டுட்டுப்போட்டானுகள்.

அடுத்தநாள் காலமை தான் நான் எங்கு இருக்கிறன் என்ற விடயம் எனக்கே தெரிய வந்தது.

காலும் கையும் ஏதோ செல்லடியில முறிஞ்ச பனை மரம் மாதிரி.. ஆ... அதை இப்ப நினைச்சாலும் வேதனையாகத் தான் கிடக்கு.

ஆஸ்பத்திரியில நான் அனுங்கிக் கொண்டு கிடக்க, அந்த நேரத்தில "எக்ஸ்கியூஸ் மீ உள்ளுக்க வரலாமா?" — என்று ஒரு குரல்!. அந்த வேதனையிலையும் எனக்கு ஒரு ஆனந்தம்! எங்கேயோ கேட்ட குரல்.

வந்தது வேறு யாருமல்ல. என்ர அழகு தேவதை தான். அதே பார்வை! அதே சிரிப்பு!

என்னை மன்னிப்பீங்களா? கேட்டது அவள் தான்.

"நான் உன்னை மன்னிப்பதற்கு நான் என்ன பரம தேவனா"? என எனக்குள் நினைத்துக்கொண்டு அவளைப் பார்த்தன். அவளின்ர முட்டைக்கண்ணில் இருந்து இரண்டு சொட்டுக் கண்ணீர் விழத் தயாராகிக் கொண்டிருந்தது.




அதைப்பார்த்தவுடனே என் மனம் இளகிப் போய்விட்டது. 'மன்னித்தேன்' என்பது போல் தலையை மட்டும் ஆட்டினேன். தான் கொண்டு வந்த தோடம்பழத்தையும், வீவாப் போத்தலையும் தந்துவிட்டு, பிறகு வருவதாய் கூறிவிட்டு அவள் போய்விட்டாள்.

இப்படியே எங்கட காதலும் துளிர்விட்டு, இலைவிட்டு வாற கட்டத்தில, கனடாவில இருந்து என்ர நண்பன் முரளி வந்தான்.

ஒரு நாள் நான் சிநேகாவுக்காக காத்துக் கொண்டு நிற்கும்போது "ஹாய் மச்சான்" என்று ஒரு குரல்!

திரும்பிப் பார்த்தன். முரளி தான்! முறுக்குச்செயின் என்ன? முழங்கால் வரையான காற்சட்டை என்ன?

"என்ன மச்சான். ஆள் நல்லாய் மாறிப் போட்டாய்? கனகாலத்துக்குப்பிறகு வந்து நிக்கிறாய். ஏதாவது விசேஷமோ?"என்று கேட்டேன்.

"ஓம் மச்சான் விசேஷம் தான். எனக்கு கலியாணம் செய்து வைக்க அம்மா அவசரப் படுத்துகிறா. அது தான்."

"அட அப்படியே சங்கதி? யார் பொம்பிள?"

"இன்னும் முடிவாகவில்லை. நான் பார்த்து ஓம் என்றால் சரி மச்சான். சீதனம் ஒன்றும் வேண்டாம் என்று முடிவெடுத்தாச்சு." என்றான் அவன்.

அதன் பின்னர் ஒரு கிழமையாகியும் சிநேகாவை காண முடியேல்லை. நானும் அவள் படிக்கிற இடம், போற இடம் எல்லாம் தேடிப்பார்த்தன். எங்கேயும் காணவில்லை. என்ன நடந்ததோ என்று எனக்குள்ள ஓர் அச்சம்!

வீட்டுக்கு வந்தேன். , "முரளிக்குக் கல்யாணமாம், காட் கொடுத்துப்போட்டு — உன்னைக் கட்டாயம் வரச்சொல்லிப் போட்டுப் போனான்" என்று அம்மா சொன்னா.

மறு நாள், என்ன செய்வது? வீடு தேடி வந்து சொல்லிட்டுப் போனானே என்று கலியாண வீட்டுக்குப் போனால் என்னை புரட்டிப் புரட்டி அடிச்ச தடியன் பன்னீர் தெளிச்சுக் கொண்டு எனக்கு கிட்ட வந்து என்னை மன்னிக்க வேணும் தம்பி. நான் அண்டைக்கு விஷயம் தெரியாம அடித்துப்போட்டன், என்று அசடு வழிந்தான்.

எனக்கென்றால் ஒன்றுமே விளங்கவில்லை."ஏன் இவன் இப்படி கதைக்கிறான்" என்று யோசித்துக்கொண்டு உள்ளே போனேன்.

என்ர மண்டை வெடித்துவிடும் போல இருந்தது. காரணம், மணவறையில இருந்தது என்ர ச்சீ...ச்சீ... இனி அப்படி சொல்லக்கூடாது.

மணவறையில் சிநேகா!

தாலியும் கட்டப்பட்டது. அதே பார்வை! அதே சிரிப்பு! நான் அவளை முறைத்துப் பாத்தேன். அவளுடைய முட்டைக்கண்களிலிருந்து கீழே விழுவதற்குத் தயாராக ரெண்டு துளிக் கண்ணீர்.

என் மனம் இளகிவிட்டது. இனி என்ன செய்வதென்று தெரியாமல், மற்றவர்களைப் போல் நானும் அர்ச்சதையை தூவினேன். "எங்கிருந்தாலும் வாழ்க! உன்இதயமும் அமைதியில் வாழ்க" — என்று கத்தி அழ வேண்டும் போல் இருந்தது.

காலம் கடந்தது. என் உடலும், மனமும் சற்றுத் தேறிவிட்டன. இந்த நிலையில் தான் மஞ்சுவின் சிநேகம் எனக்கு கிடைத்தது. எனக்குக் கிடைத்த ஒரேஆறுதல் இது தான் என்று சொல்லலாம்.

*****

ஆனாலும் மஞ்சுவிடம் இன்னும் என்ர காதலை நான்சொல்ல வில்லை. அவளே முதல்ல சொல்லட்டும் என்டு தான் இப்ப மந்திகை சந்தியில அவளுக்காக காத்துக் கொண்டு நிற்கிறேன்.

நேரமும் போய்க்கொண்டே இருக்கிறது. ஆனால் இன்னும் மஞ்சுவைக் காணவில்லை.

ஒரு வேளை நாளைக்குத் தான் வருவாள் போல. அப்படித்தானே சொன்னாள். இன்றைக்கு அல்லது நாளைக்கு என்று.

அக்கம்பக்கம் இருந்த கடைக்காரர் எல்லாம்என்னை ஒருமாதிரிப் பார்க்க.'நாளைக்கு வருவம்" என்று சொல்லிக்கொண்டு வீடு திரும்பிவிட்டேன்.

விடிந்ததும் அவதி அவதியாய் எல்லாவற்றையும் முடித்துக்கொண்டு நேற்று நின்ற இடத்துக்கே மீண்டும் வந்தேன்.

சந்தியில ஒரே கூட்டம். கடைக்காரனும் என்னைக்காட்டி ஏதோ சொல்லிக் கொண்டு நின்றான்.

எனக்குப் பக்கத்தில நின்றவன் "இவன் தான் சேர் ஆள் " என்றதும் திரும்பிப் பார்த்தன்.பொலிஸ்காரனும்,அந்தக் கடைக்காரனும் எனது சேட் கொலரைப்பிடித்து உலுப்ப, "கடையை உடைச்சதும் இல்லாமல் முழியைப்பார்" என்று கத்தினான் ஒருவன்.

நான் உடைக்கேல்லை என்று சொல்லச் சொல்ல சப்பாத்துக்காலாலை உழக்கு உழக்கு என்று உழக்கிப்போட்டுக் கொண்டு போட்டானுகள்.

அடி வாங்கி மயங்கிக் கிடந்த நான் சாதுவாக கண்ணைத்திறந்து பார்க்க கோடு கோடாகக் கம்பிகள் தெரிய ஆரம்பித்தன.

அப்ப தான் தெரியும். நான் ஜெயிலுக்குள்ள என்று.

காவலாளி ஒருவன் வந்து சொன்னான். "உங்களை யாரோ பார்க்க வந்திருக்கினம்" என்று.

நானும் முக்கி முனகிக்கொண்டு அம்மா அப்பாவின் ஆட்கள் தான் என்டு எழும்பி நின்றேன்.

வந்தது யாருமல்ல! என்னை இந்த நிலமைக்கு ஆளாக்கிய மஞ்சு தான். நான் ஒன்றும் பேசவில்லை. என்ன இருந்தாலும் என்னைத் தேடி ஜெயிலுக்குள்ள வந்திட்டாள் என்று பெருமையோடு அவளைப் பாத்தன்.

"அண்ணா! உங்களுக்கா இந்த நிலமை?"

கேட்டது மஞ்சு தான்! கேட்டதோடை மட்டுமல்லாது, "எனக்கு ஆண்பிள்ளை சகோதரம் இல்லாததால் உங்களை என்ர அண்ணனாக நினைச்சன். என்ர கலியாணக்காட்டைக் கூட உங்களுக்குத்தான் முதல்ல கொடுக்க வேணும் என்று உங்களை வரச்சொன்னனான். கடைசியில உங்களுக்கு இந்த நிலைமையோ. எது எப்படி இருந்தாலும் என்ர கலியாணக் காட் முதல்ல உங்களுக்குத் தான்"

காட்டை வைத்துவிட்டுப் போய் விட்டாள் மஞ்சு. நான் மூர்ச்சையாகி விழாதபடி இரும்புக் கம்பியை இறுகப் பற்றி நின்றேன்.

ரோட்டால போன ஐஸ்பழ வானில் "காதல் காயங்களே நீங்கள் ஆறுங்களேன்" என்ற பாட்டு ஒலித்துக்கொண்டிருந்தது.

## உலகின் மிகப் பெரிய கப்பலின் முதல் பயணம்



உலகின் மிகப் பெரிய சுற்றுலாக் கப்பல் குயீன் மேரி - 2

2, 600 பயணிகளுடன் தனது முதல் பயணத்தை பிரிட்டனின் சவுத்ஹாம்டன் துறைமுகத்திலிருந்து இந்தக் கப்பல் கடந்த வாரம் தொடங்கியது.

வான வேடிக்கை, இசை, ஆடல் பாடல்களுடன் தொடக்க விழா கோலாகலமாக நடந்தது. தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் ஏதும் இக் கப்பலுக்கு இல்லை என்ற போதிலும், மிக பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இக் கப்பல் 15,000 தொன் எடை கொண்டது. இதன் பெறுமதி ரூ. 4600 கோடி. ஐந்தாவது ஜோர்ஜ் மன்னனின் மனைவி மேரியின் பெயர் இதற்கு சூட்டப்பட்டது. இது அமெரிக்கா நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது.

## முகமது அலி கையெழுத்திட்ட ஆடைகள் களவு

இங்கிலாந்து அருங்காட்சியகம் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த பிரபல குத்துச்சண்டை வீரர் முகமது அலி கையெழுத்திட்ட இரு அரைக் கால்சட்டைகள் காணாமல் போய் விட்டன.

கடந்த வாரம் இந்த சம்பவம் நடந்தது. திருடர்கள் அருங்காட்சியகத்தின் கொங்கிறீட் சுவரை இடித்து, உள்ளே நுழைந்து அங்கு வைக்கப்பட்டிருந்த முகமது அலி கையெழுத்திட்ட இரு அரைக் காட் சட்டைகளையும், நான்கு புகைப்படங்களையும் திருடிச்சென்றுள்ளனர்.

இவற்றின் மதிப்பு ரூ. ஒரு லட்சம். முகமது அலிக்கு தற்போது 61 வயது ஆகிறது. இவர் மூன்று தடவைகள் உலகச் சம்பியன் பட்டத்தை வென்றவர். 1981 இல் போட்டியிலிருந்து ஓய்வுபெற்றார். தற்போது அவர் பார்கின்சன் நோயினால் அவதியுறுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*த. மதிவதனி—வட்டக்கச்சி.*

**கேள்வி— நடிகர்கள் கௌரவமாக ஆடை அணிந்து நடிக்கிறார்கள். அப்படி இருக்கஏன் நடிகைகள் கவர்ச்சி**



**ஆடை அணிகிறார்கள் பித்தா?**

பதில்— நடிகர்களை கௌரவமான ஆடையில் பார்த்தாலே சகிப்பதில்லை. இந்த லட்சணத்தில் கவர்ச்சி ஆடை அணிவதா? யப்பா... மேலே உள்ள படத்தை பாருங்கள். இது தேவையா என்று நீங்களே நினைப்பீர்கள்.

*அன்ரன் ஸ்ரீபன்— வட்டக்கச்சி.*

**கேள்வி— அன்புள்ளம் கொண்ட பித்தா! பிரதமர் வாஜ்பாயின் பிறந்த தினத்தில் தான் எனது பிறந்த தினமும் வருகிறது. எனவே அடுத்த பிறந்த தினத்தில் நானும் ஒரு பிரதமராக வந்து பிறந்த நாளைக் கொண்டாட ஆசைப்படுகிறேன். நிறைவேறுமா பித்தா?**

பதில்— ஐயா... ஏற்கனவே ராசி... உள்ள பிரதமர்களின் நிலையே அல்லாட்டமாக இருக்கிறது... இதில் உமக்கு ஏன் ராசா விபரீத ஆசை... இப்படி நிறைவேறாத ஆசைகளை வளர்த்துக்கொண்டால் நீர் பிரதமராக வரமாட்டீர். பிதாமகன் (விக்ரம்) ஆக அலைய வேண்டிவந்துவிடும். கவனம்.

*வாசுகி—கிளிநொச்சி.*

**கேள்வி— எமது பாடசாலை அதிபர்— நாங்கள் ஏதாவது தப்புபண்ணினால் தண்ணி இல்லாத காட்டுக்கு மாற்றி விடுவேன் என்று மிரட்டுகிறாரே— இலங்கையில் தண்ணி இல்லாத காடு எங்கே இருக்கிறது பித்தா...?**

பதில்— இலங்கையில் தண்ணி இல்லாத காடு— கொழும்பு தான். ஏனென்றால் இங்கே குளித்தாலும் தண்ணிக்கு காசு— குடித்தாலும் தண்ணிக்கு காசு.

*உருத்திரமூர்த்தி— வைரவபுளியங்குளம்.*

**கேள்வி—பித்தா சில பெண்கள் தம் முடியுடன் முடி மயிரும்வைத்து தலையைப்பின்னிபோலியாகதமக்கு கூட முடி இருப்பது போல் காட்டுகிறார்களே!ஏன்?**

பதில்— ஒன்று தாங்கள் அழகாக இருப்பதாக காட்ட. அடுத்தது... திடீரென குடுமி பிடிச் சண்டை வந்தால்சொந்த முடியை காப்பாற்றிக்கொள்ளலாம் அல்லவா.. அதுக்குத்தான்.

*சி.குகானந்த்—விசுவமடு.*

**கேள்வி— அனைத்து நாடுகளுக்கும் பாதுகாப்பு என்று கருதப்படும் ஐ.நா. சபை அமெரிக்கவிடயத்தில்மட்டும் பணிவாக நடக்கிறதே ஏன் பித்தா?**

பதில்— ஐ.நா.வின் செலவுக்கு ஒதுக்கப்படும். பணத்தில் பெருமளவு அமெரிக்காவினால் தான் ஒதுக்கப்டுகிறது அதனால் அமெரிக்கா என்ன அநியாயம் பண்ணினாலும் ஐ.நா. கைகட்டி வாய் பொத்தி ''கம்'' என்றிருக்கிறது.



*தே.தவராசா—வட்டக்கச்சி*

**கேள்வி— பித்தா! சமாதான பயணத்தை சமாதானத் தேவதையே குழப்பி நிற்பதால் சமாதானப் புறா என்ன வாகப்போகிறது?**

பதில்— குழம்பிலே போடப்படப் போகிறது.

*கு.சர்மிளா — வட்டுக்கோட்டை.*

**கேள்வி— அறிவுள்ள பித்தா! A/L பரீட்சை நெருங்கும் இவ்வேளையில் எனக்கு குட்டித் தூக்கமும் அதிகமாக வருகிறது என்ன செய்யலாம்?**

பதில்— உங்கள் வீட்டிலே உள்ளவர்களிடம் சொல்லி தூங்கும்போது தலையிலே குட்டி, தூக்கத்தை குழப்பி விடச் சொல்லுங்கள்.

*தெ.சாரங்கன்—மருதங்கேணி.*

**கேள்வி— பித்தாஉங்கள் மனைவிசேலை கட்டுவது உங்களுக்குப்பிடிக்குமா? அல்லது கட்டைச்சட்டை போடுவது உங்களுக்குப் பிடிக்குமா?**

பதில்— கட்டைச் சட்டைதான். ஏனென்றால் அது தான் எனக்கு தோய்ப்பது சுலபம்.

*இ.ஜெயந்தன் — கிளிநொச்சி.*

**கேள்வி— பித்தா! சினிமா நட்சத்திரங்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்தால் என்ன நடக்கும்?**

பதில்— அவர்கள் திரும்பி சென்றதும் பொடாவில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைபட வேண்டிய நிலை ஏற்படும்.

*பதுதீன் — இரத்தினபுரம்.*

**கேள்வி — பித்தா! மாவுக்கும் — தூளுக்கும் என்ன வித்தியாசம். கோப்பித் தூள் என்றும் — அரிசி மா என்றும் சொல்கிறோமே! கோப்பி மா என்றும் அரிசித் தூள் என்றும் சொல்வதில்லையே ஏன் பித்தா?**

பதில் — பல பொருட்களை ஒன்றாக சேர்த்து அரைத்து எடுப்பது தூள். ஒரே பொருளை அரைத்து எடுப்பது மா. வாசனைத் திரவியங்கள் சேர்க்கப்பட்டு அரைக்கப்படுபவை கோப்பித்தூள், மிளகாய்த் தூள் என்பன. தனியே அரிசியை அரைத்தால் அரிசிமா, கோதுமையை அரைத்தால் கோதுமை மா, குரக்கனை அரைத்தால் குரக்கன் மா.

*வி.சிந்துஜா — திருநெல்வேலி.*

**கேள்வி— பித்தா நீங்கள் நகைச்சுவை மன்னனாமே...! ஒரு நகைச்சுவையை அவிழ்ந்து விடுங்கள் பார்ப்போம்?**

பதில்— ஒரு தொழிற்சாலையில் வேலை செய்யும் ஒருவர் தனது மேலதிகாரிக்கு கடிதம் எழுதினார்....

''ஐயா எனக்கு நேற்று குழந்தை ஒன்று பிறந்து உள்ளது. எனவே இந்த மாதம் முதல் எனது சம்பளத்துடன் ஆயிரம் ரூபா அதிகரித்து தரும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.''

அதற்கு மேலதிகாரி வழங்கிய பதில் கடிதம் இது ''எமது நிறுவனத்தில் மேற்கொள்ளப்படும் உற்பத்திகளின் அடிப்படையிலேயே சம்பள உயர்வு வழங்கப்படும். உங்கள் வீட்டிலே நீங்கள் செய்யும் உற்பத்திகளுக்கு எமது நிறுவனத்தில் சம்பள உயர்வு வழங்கப்படமாட்டாது என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்.''

## பித்தனின் கேள்வி

**கேள்வி:— சினிமா காதலை ஆதரிக்கும் இன்றைய பெற்றோர் தமது வீட்டு காதலை எதிர்ப்பது ஏன் பித்தா?**

### வாசகர் பதில்கள்

*சிவசுதன் — அச்சுவேலி*

சினிமாக் காதலை படப்பிடிப்புக் குழுவினர் மட்டும் பார்ப்பார்கள். ஆனால், நிஜக் காதலை ஊர்மக்கள் அனைவரும் பார்ப்பார்கள் என்பதால்.

*க.கமிலா — யாழ்ப்பாணம்.*

சினிமாக் காதல் பெரும்பாலும் ஒருவருடன் மட்டுமே முடியும். நிஜக்காதல் பலருடன் நடைபெறுவதால் பெற்றோர் அதனை எதிர்க்கிறார்கள்.

*சி.கவிதரன் — மட்டுவில்.*

பெற்றோர் ஜாதி, மதம், இனம் பார்த்தே திருமணம் செய்து வைப்பார்கள். ஆனால், காதலர்கள் அதனைப் பார்ப்பதில்லையே!

எம்.பர்வீன் — முகத்துவாரம்.

சினிமாவில் வரும் காதல் பாத்திரங்களில் தமது பிள்ளைகள் இல்லை என்பதால் அதனை பெற்றோர் அனுமதிக்கிறார்கள் என்ற சுயநலம்தான்.

ஏ.வில்பத் — களுத்துறை.

பெற்றோரும் முன்னர் காதலித்து திருமணம் செய்ததால் தமக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவங்களை மீட்டிப் பார்க்கும் போது இது வெறுக்கப்படலாம்.

*வேந்தா — சுதந்திரபுரம்*

**கேள்வி— டியர் பித்தா! மனைவியை அடிக்கும் கணவன் மாரைப் பற்றி என் நினைக்கின்றீர்கள்?**



பதில்— கணவனைக்கண்டதாலும் அடிக்கும் மனைவி மாரைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? அதனை முதலில் சொல்லுங்கள்.

பித்தன்மீது பித்துக் கொண்ட வாசகர்களுக்கு:—

நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு பித்தன் பதில் தருவார். பித்தன் தரும் கேள்விக்கு நீங்களும் பதில் அளியுங்கள்.

ஐந்துதரமான — குறும்பான — யதார்த்தமான — பதில்கள் பிரசுரிக்கப்படும். பதில்களை பெப்ரவரி 07 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.



*புவிதா— திருநெல்வேலி கிழக்கு.*

**கேள்வி— வெளிநாட்டு ஆடவர்கள் எவ்வளவோ மோசம் செய்த போதிலும் அவர்களையே இன்றைய பெண்கள் பெரிதும் விரும்புகிறார்களே! ஏன் பித்தா?**

பதில்— ஏராளமான கனவுகளுடன் விமானம் ஏறி அங்கே வாழ்க்கையே விவகாரமாகி போனதால்— இவர்கள் விளக்கை தேடிச் செல்லும் விட்டில் பூச்சிகள்.

இந்தக் கேள்விக்கு பித்தன் அளித்த பதில் மேலே...நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி.

பித்தனுக்கு எங்கள்பதில்கள்,
சுடர்ஒளி வார இதழ்,
85, ஐயந்தமல்லி மாராய்ச்சி வீதி,
கொழும்பு— 14.

# சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 6.59 | | | | | | நிகழ்ச்சி ஆரம்பம் | நிகழ்ச்சி ஆரம்பம் |
| 7.00 | | | | | | அன்பு மடல் | அன்பு மடல் |
| 7.05 | | | | | | வணக்கம் தமிழகம் | காலைக்கதிர் |
| 7.30 | | | | | | சங்கீதமேடை | காலைக்கதிர் |
| 8.00 | களம் | ஆலோசனை நேரம் | சந்தனக்காற்று | இப்படிக்கு நீங்கள் | சங்கீத மேடை | குட்டி சுட்டி | திரைவானம் |
| 8.30 | வணக்கம் தமிழகம் | வணக்கம் தமிழகம் | வணக்கம் தமிழகம் | வணக்கம் தமிழகம் | வணக்கம் தமிழகம் | குட்டி சுட்டி | அரட்டை அரங்கம் |
| 9.00 | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | பூஞ்சோலை | ஸ்டார் சமையல் |
| 9.30 | நட்சத்திரம் | சுப்பர் சீன்ஸ் | திரை விமர்சனம் | மீண்டும் சிரிப்பு | பிரபலங்கள் ரசித்தவை | ஜீபூம்பா | நகைச்சுவை நேரம் |
| 10.00 | பெப்சி உங்கள் சாய்ஸ் | தில்லானா தில்லானா | பாட்டுக்குப் பாட்டு | நம்மநேரம் | இளமை புதுமை | களம் | டொப் 10 மூவிஸ் |
| 10.30 | திரை இசை | திரை இசை | திரை இசை | திரை இசை | திரை இசை | ஆலோசனை நேரம் | ஹிட்ஸ் பைவ் |
| 11.00 | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | சினி சாய்ஸ் | சந்தனக்காற்று |
| 11.30 | மாங்கல்யம் | மாங்கல்யம் | மாங்கல்யம் | மாங்கல்யம் | மாங்கல்யம் | சினி சாய்ஸ் | நம்ம நேரம் |
| 12.00 | பி.பி.சி. நியூஸ் | பி.பி.சி. நியூஸ் | பி.பி.சி. நியூஸ் | பி.பி.சி. நியூஸ் | பி.பி.சி. நியூஸ் | ரிலாக்ஸ்டைம் | ஹிட் லிஸ்ட் |
| 12.30 | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | ரிலாக்ஸ்டைம் | ஹிட் லிஸ்ட் |
| 1.00 | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 1.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | மங்கை (நேரடி) | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 2.00 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | மங்கை (நேரடி) | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 2.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 3.00 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 3.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 4.00 | டிஸ்னிவேல்ட் | டிஸ்னிவேல்ட் | மை லிட்டில் போனி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சின்னசின்ன ஆசைகள் | ஹிட் லிஸ்ட் |
| 4.30 | கேர் பியர்ஸ் | ஹி—மென் | தமிழ் கார்ட்டூன் | மலரும் மொட்டும் | சக்தி மேட்னி | சின்னசின்ன ஆசைகள் | ஹிட் லிஸ்ட் |
| 5.00 | திரை இசை | திரை இசை | திரை இசை | திரை இசை | திரை இசை | வீக் என்ட் மூவி | சப்த ஸ்வரங்கள் |
| 5.30 | சின்னத்திரை | சின்னத்திரை | சின்னத்திரை | சின்னத்திரை | சின்னத்திரை | வீக் என்ட் மூவி | இப்படிக்கு நீங்கள் |
| 6.00—6.15 | பெப்சி உங்கள் சாய்ஸ் | தில்லானா தில்லானா | பாட்டுக்குப் பாட்டு | 6.00 பாடல்கள்/ 6.15 இளந்தளிர் | இளமை புதுமை | வீக் என்ட் மூவி | மின்னல் |
| 6.30 | குங்குமம் | குங்குமம் | குங்குமம் | குங்குமம் | குங்குமம் | வீக் என்ட் மூவி | மின்னல் |
| 7.00 | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | வீக் என்ட் மூவி | வேலன் |
| 7.30 | நதி எங்கே போகிறது? | நதிஎங்கே போகிறது? | நதிஎங்கே போகிறது? | நதிஎங்கே போகிறது? | நதிஎங்கே போகிறது? | வீக் என்ட் மூவி | வேலன் |
| 8.00 | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் |
| 8.30 | சித்தி | சித்தி | சித்தி | சித்தி | சித்தி | ருத்ர வீணை (நாடகம்) | உதயம் (நாடகம்) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிதக்கும் நகரம்



மனிதனின் படைப்பாற்றலுக்கு எல்லை இல்லை என்று தான் சொல்ல வேண்டும். புத்திசாலித்தனம், ஆராய்ச்சித் திறன் அதிகரிக்க அதிகரிக்க ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு புதுமையை மனிதன் படைத்து வருகிறான்.

கற்பனைக்கு எல்லை ஏது? மனிதனின் தேவைகளும் ஆசைகளும் அதிகரிக்க அதிகரிக்க பல புதிய கண்டுபிடிப்புக்களும், நவீன வசதிகளும் இந்த உலகிற்கு கிடைத்து வருகின்றன. புதுமைகளை விரும்பும் மனிதனின் கனவுகளில் ஒன்று தான் 'மிதக்கும் நகரம்'. தரையில் வீடு கட்டி அடுக்கு மாடிக் குடியிருப்புகள் கட்டி வசிப்பது போல கடலிலும் ஒரு நகரை உருவாக்கி–தண்ணீரில் மிதந்தபடி–நாடு நாடாக சுற்றிய படி வாழ ஆசைப்பட்டான் மனிதன்.

அந்த ஆசையின் வெளிப்பாடு தான் மிதக்கும் நகரம்.

கற்பனைகளுக்கு எட்டாத அதிசயமாக உருவாகப் போகும் மிதக்கும் நகரம் மிகப் பிரமாண்டமான ஒன்றேகால் கிலோமீற்றர்



நீளம், 25 மாடிக் கட்டடம், ஒரு லட்சம் பேர் வசிக்கும் வசதி... என்று பல ஆச்சரியங்களைக் கொண்டது.

இன்னும் சில ஆண்டுகளில் தனது பயணத்தை ஆரம்பிக்கவுள்ள இந்த 'மெகா' கப்பல் உலகின் பல பாகங்களுக்கும் சென்று முகாமிடப்போகிறது.

மழை காலங்களில் சிறுவர்களுக்கு பிடித்த விளையாட்டுகளில் ஒன்று காகிதக் கப்பல் செய்து மழைநீரில் ஓட விட்டு மகிழ்வது. விஞ்ஞானிகள் தங்கள் கற்பனைக்கு ஏற்ப சாதாரண படகு, விசைப்படகு, அதிவிசைப்படகு, கப்பல், சொகுசுக்கப்பல், 'டைட்டானிக்' கப்பல், கொள்கலன் கப்பல்... என்று நவீன வசதிகள் கொண்ட கப்பல்களை வடிவமைத்து வருகின்றார்கள்.

'கப்பல்களுக்கு எல்லாம் தாய்' என்பது போல, இதுவரை இருக்கும் கப்பல்களை மிஞ்சும் அளவுக்கு 'சுதந்திரக் கப்பல்' (Freedom Ship) என்ற பெயரில் இந்த மிதக்கும் நகரம் உருவாகிக் கொண்டிருக்கிறது.

இது கற்பனை அல்ல, சினிமாக்களில் காட்டப்படும் தந்திரக்காட்சியும் அல்ல. இது உண்மையிலும் உண்மை. மனிதனின் கற்பனை நிஜம் இது.

டைட்டானிக், குயீன் மேரி, யு.எஸ்.எஸ், நிமிட்ஸ், சூப்பர் ராங்கர் போன்ற பெரிய கப்பல்கள் அனைத்தையும் சேர்த்தால் அது எவ்வளவு பெரிதாக இருக்குமோ அதை விடப் பெரிய அளவில் 'மிதக்கும் நகரம்' என்ற இந்தக் கப்பல் அமையப்போகிறது.


எந்த ஒரு கப்பலும் இது போல் உருவாக்கப்பட்டதில்லை என்று சொல்லும் அளவுக்கு மிதக்கும் நகரம் பெருமை பெறப் போகிறது. இந்தக் கப்பல் எந்த அளவுக்கு பிரம்மாண்டமாய் அமையப் போகிறது என்பதை அறிந்தால் "அடேங்கப்பா" என்று ஆச்சரியப்படப் போகிறீர்கள்.

இந்தக் கப்பல் 4,320 அடி நீளம், 725 அடி அகலம்,340 அடி உயரம் கொண்டதாக அமையப் போகிறது. எளிதில் புரியும் படி சொன்னால், கால்பந்து மைதானத்தின் நீளத்தை விட கப்பலின் உயரம் அதிகம். 'சுதந்திரக் கப்பல்' மிதக்க மட்டும் போவதில்லை, உலகில் உள்ள முக்கிய நகரங்களில் எல்லாம் இது வலம் வரப்போகிறது.

மிதக்கும் நகரத்தை வடிவமைத்தவர் அமெரிக்காவின் நோர்மன் நிக்கன் என்ற பொறியியல் வல்லுநர்.

இந்த கப்பலின் அடித்தளம் காற்றுப்புக முடியாத 520தனி அறைகளாக உலோகத்தால் செய்யப்படுகிறது. பின்பு அவற்றை ஒன்றோடு ஒன்றாக இணைத்து மிகப் பலமான அடித்தளம் அமைக்கப்படுகிறது.

ஒவ்வொரு பிரிவும் (அறையும்) 80 அடி உயரமும், 100 அடி அகலமும், 120 அடி நீளமும் கொண்டவை. இந்தத் தனி அறைகள் நன்றாக இணைக்கப்பட்டு அமைக்கப்படுகின்றன. இந்தப் பெரிய பிரிவை கடலில் இறக்கி அதன் பின் இதனது பிரிவுகளுடன் இணைத்து ஒன்றேகால் கிலோமீற்றர் தூர



நீளமுள்ள மிகப்பெரிய, பலமுள்ள அடித்தளம் அமைக்கப்பட்டு , இதன் மீது கப்பல் கட்டப்படுகிறது.

இவ்வளவு பெரிய கப்பலை தண்ணீரில் இயங்கச் செய்வதற்கு 100 டீசல் இயந்திரங்கள் பொருத்தப்படும். இவை ஒவ்வொன்றும் 3,700 குதிரைத்திறன் கொண்டவை. இந்த ஒவ்வொரு இயந்திரத்தின் மதிப்பு (வடிவமைப்பு மற்றும் உற்பத்தி) 90 கோடி ரூபா ஆகும். இதனுடைய தனிச் செலவு மட்டும் இவ்வளவு என்றால் இந்த முழுத்திட்டத்தின் மதிப்பு எவ்வளவு இருக்கும்? என்று கணக்கிட்டு பார்த்தால் மயக்கமே வந்துவிடும். இதன் மொத்த மதிப்பு இன்னும் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படவில்லை. இருப்பினும் சுமாராக 6.8 பில்லியன் டொலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை மதிப்பில் இது 150 இலட்சம் கோடி ரூபா ஆகும். என்ன மலைத்து போய் விட்டீர்களா? இந்த மொத்த மதிப்பு தீவிரவாதத்திற்கு எதிராக போர் தொடுக்க அமெரிக்கா ஒதுக்கும் பணத்தின் 100இல் ஒரு பங்கு தான். இருந்தாலும் இதற்கான மொத்தச் செலவு, இங்கு வீடு வாங்கும் வாடிக்கையாளர்களிடம் இருந்து பகிர்ந்து வசூலிக்கப்படும். அவ்வாறு வசூலிக்கப்படும் போது வீடுகள் வாங்குபவர்கள் ஒவ்வொருவரும் 50 கோடி ரூபா கொடுக்க வேண்டியிருக்கும்.

17 ஆயிரம் குடியிருப்புக்களைக் கொண்ட இந்த கப்பலில் குடியேறுபவர்கள், கப்பலை பராமரிப்பவர்கள் என்று ஏறத்தாழ 60 ஆயிரம் பேர் மிதக்கும் நகரத்தில் வசிக்கவுள்ளனர். இந்த மிதக்கும் நகரம் உலகின் உள்ள அனைத்து கடற்கரை நகரங்களையும் தொடர்ந்து வலம்வந்து கொண்டிருக்கும். அதில் விஷேசம் என்னவென்றால் வீட்டில் அமர்ந்து கொண்டே உலகத்தைச் சுற்றிப் பார்க்கலாம். இதில் பணியாற்றும் ஊழியர்களுக்கு உணவு, சீருடை, இருப்பிடம், மருத்துவ தேவைகள் மற்றும் கல்வி ஆகியவை வழங்கப்படுகின்றன. 40 ஆயிரம் குடியிருப்புவாசிகள், 20 ஆயிரம் முழுநேர ஊழியர்கள், 30 ஆயிரம் பார்வையாளர்கள், 10 ஆயிரம் விருந்தாளிகள் என மொத்தம் ஒரு லட்சம் பேர் இந்தக் கப்பலைப் பயன்படுத்துவார்கள் எனக் கணிப்பிடப்பட்டுள்ளது.

2000 கோடி ரூபா செலவில் மருத்துவமனை, 3,800 அடி நீளமுள்ள விமான ஓடுதளம் (இது 40 பயணிகள் வரை தாங்கிச் செல்லும் விமானம் பயன்படுத்துவதற்கு மட்டுமே), விமானம் நிறுத்தும் தளம், சிறிய துறைமுகம் (சிறு படகுகளை நிறுத்த), மிகப் பெரிய விற்பனை நிலையம், கல்வி நகரம், விளையாட்டு மைதானம், சைக்கிள் செல்வதற்காக பிரத்தியேக பாதைகள், 200 ஏக்கரில் திறந்த வெளி அரங்கங்கள். இப்படி ஏராளம் வசதிகள் அங்கு உள்ளன.

இங்கு வீடு வாங்குபவர்களுக்கு பலவித வரிச் சலுகைகள் வழங்கப்படுகின்றன. சொத்துவரி, விற்பனை வரி, வியாபார வரி, சுங்கவரி போன்ற எந்த வரியும் செலுத்தத் தேவையில்லை. ஆனால், அவர்களின் சொந்த நாட்டில் உள்ள வரி வழக்கத்தை அவர்கள் பின்பற்றியே ஆக வேண்டும்.

அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய மிதக்கும் நகரின் இன்னொரு சிறப்பம்சம் 'சுற்றுச்சூழல் பராமரிப்பு.' நகரில் உள்ளது போல இந்தக் கப்பலில் 'கழிவு நீர் பராமரிப்பு' மையம் இருக்காது. அதற்குப் பதிலாக கழிவு எரிப்பு சாதனம் கழிவறையில் உபயோகிக்கப்படும். இதனால் கழிவுகள் அனைத்தும் உடனடியாக எரிக்கப்பட்டுவிடும். எரிக்கப்படும் சாம்பல் 'மலர்படுக்கை' எனப்படும் பிரத்தியேக அறையில் கொட்டப்படும்.

எந்தவொரு இயற்கை சீற்றத்தையும் தாங்கிக் கொள்ளும் அளவிற்கு மிதக்கும் கப்பல் வடிவமைக்கப்பட்டிக்கிறது. மிகப் பெரிய அலைகள், அதிபயங்கர சுழல் காற்று போன்ற இயற்கையின் சீற்றங்களை எளிதாக சமாளிக்கும் வல்லமையையும் இது கொண்டது. சிலசமயம் இதபோன்ற சீற்றங்கள் சிக்கலான சூழ்நிலைகளை உருவாக்கும் பொழுது, அதை எதிர்கொள்ள உடனடியாக இயக்கத்திற்குப் பயன்படும் நூறு இழுவிசை இயந்திரங்களை இயக்கி காற்றின் விசை கப்பலின் மையப்பகுதியை தாக்கும் வகையில் கப்பல் திருப்பிவிடப்படும். இதனால் பெரும் விபத்துக்கள் தவிர்க்கப்படும்.

'மிதக்கும் நகரம் ' கப்பல் ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கும் ஒருமுறை உலகைச் சுற்றி வரும். கடல் பயணத்தில்30 சதவீத நாட்களும் துறைமுகங்களில் 70 சதவீத நாட்களும் இந்த மிதக்கும் நகரம் இருக்கும்.




இப்பத்திரிகை கொழும்பு – 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், [illegible] ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2004 ஜனவரி.31 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org